www.alhasanath.lk

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 42 இதழ்: 08 ஆகஸ்ட் 2016 துல்கஃதா 1437

விசாலிப்பதே 'இஸ்லாம்' சுருங்குதலே 'குப்ர்'



## துருக்கி இராணுவப் புரட்சி:

மேற்குலகை ஜனநாயகப் பரீட்சைக்கு உட்படுத்த வேண்டும்!

ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல் 60/-

# WORLD FOCUS COLLEGE & NEWMAN'S COLLEGE

இணைந்து வழங்கும்

OUR 14TH BATCH

பெண்களுக்கான 3 மாத கால தங்குமிட வசதிகளுடனான

# இஸ்லாமிய வாழ்க்கைத்திறன் பயிற்சி நெறி

கல்விப் பொதுத்தராதர சாதாரண மற்றும் உயர்தர முடித்த மாணவிகள் மற்றும் திருமணமாகாத 16 வயது பூர்த்தி அடைந்த அனைத்து பெண்களும் தெரிந்திருக்க வேண்டிய அழகிய உளவள அறிவுறைகள் கொண்டு நடாத்தப்படும் பாடநெறி. உங்களது பெண்பிள்ளைகளுக்கு தஜ்வீத், முறைப்படி அல்குர்ஆனை ஓத, சமயற்கலை, ஆங்கிலம், தையல், கனணி, உளவியல் போன்றவற்றோடு 20 இற்கும் மேற்பட்ட பாடங்களை கற்பித்து உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது

3 MONTHS Residential Course for Unmarried Girls

## STARTS ON 19TH OF SEPTEMBER 2016

இதில் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளில் கல்வி கற்றவர்களுக்கும் இதில் கலந்து கொள்ள முடியும்.

இதில் 20 ற்கும் மேற்பட்ட பாடங்கள் நடாத்தப்படுகின்றன அவைகளில் சில....

- குர்ஆன் அல் தஜ்வீத் (குர்ஆனை சரளமாக ஓதுதல்)
- ஹதீஸ் (Hadhees)
- அன்றாட வாழ்வில் இஸ்லாம்
- பிக்ஹ் (Fiqh)
- தப்ஸீர் சூறா விளக்கம்
- ஸீரதுஸ் ஸஹாபிய்யா
- அஹ்லாக் (Ahlaq)
- பெண் நோயியல் (Women Disease)
- Health Care
- Cookery (சமையல்)
- Psychology & Counseling
- தையற்கலை (Stitching)
- Mehendi Designing
- Beauty Therapy
- English (Reading, Writing, Spoken)
- Computer
- Art & Craft
- Easy way to Maths Technics
- Career Guidance
- Soft Skills
- Pre-Marriage Counseling




பதிவுகள் தற்பொழுதிலிருந்தே ஆரம்பம்

Age Limit
வயதெல்லை
16-25

More Than 5 Certificates

### இதில் பங்கு கொள்வோர்

→ 16 வயது பூர்த்தியடைந்த அனைத்து பெண்கள்
→ O/L, A/L செய்து விட்டு வீட்டில் இருக்கும் பெண்கள்
→ திருமணம் முடிப்பதற்கு தயாராக இருக்கும் பெண்கள்
→ தனது திறமையை வெளிக்காட்ட முடியாது காத்திருக்கும் பெண்கள்
→ வீட்டிலிருந்து சம்பாதிப்பதற்கு விருப்பம் உள்ள பெண்கள்

LIMITED ADMISSION

எமது கல்லூரியின் வானொலி நிகழ்ச்சியான

## ஏழாம் வானம்

பிரதி வியாழக்கிழமை காலை 9.35 மணி முதல் SLBC முஸ்லிம் சேவையில் செவிமடுக்களாம்

WORLD FOCUS COLLEGE (PVT) LTD
Reg No. PV-84818

Courts Road, Mawanella.
0777 344474 | 077 4370320 | 035 4926496
worldfocus007@yahoo.com
follow (Space) worldfocusnews send to 40404
World Focus College

**Enroll Now** 0777 344474 077 4370320 035 4926496

For more Information you can visit our website :- www.worldfocuscollege.lk

بسم الله الرحمن الرحيم






45-48



# காஷ்மீர்: குருதி வழியும் தேசம்!


# அல்ஹஸனாத்

இஸ்லாமிய இலட்சியக் குரல்

**பிரதம ஆசிரியர்:**

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

**ஆசிரியர்:**

அஷ்ஷெய்க் ஜெம்ஸித் அஸீஸ்

**விளம்பர முகாமையாளர்:**

எம்.எச்.எம். ரிஸ்வான்

**தளக்கோலம்:**

எம்.எஸ்.எம். ஸினான்

**மலர்: 42 இதழ்: 08**

**2016 ஆகஸ்ட் | துல்கஃதா 1437**

ISSN: 1391 - 460X

**வெளியீடு:**

**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**



**Contact:**

Sri Lanka Jama'athe Islami
77, Sri Vajiragnana Mw,
Colombo- 00900, Sri lanka
Tel: +94112689324
Fax: +94112686030
Web: www.alhasanath.lk
Email: alhasanath@gmail.com




அஷ்ஷெய்க்
தாஹிர் எம். நிஹால்

**அல்குர்ஆன் விளக்கம்**

**ஸூரா யூசுப்: அழகிய சம்பவங்களும் படிப்பினைகளும்!**

04-06



அஷ்ஷெய்க்
எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

**அல்ஹதீஸ் விளக்கம்**

**அல்லாஹ் மிகவும் தூய்மையானவன்...**

07-09




உஸ்தாத்
ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

**தஃவா களம்**

விசாலிப்பதே 'இஸ்லாம்' சுருங்குதலே 'குப்ர்'

10-12



13-15 **துருக்கி இராணுவப் புரட்சி**

16-17 இராணுவ சதி முயற்சி: நடந்தது என்ன?

**அந்நிஸா**

23-24 பாசத்தால் பண்படுத்துவோம்

30-33 இஸ்லாமிய சட்டவாக்க சிந்தனை...

49-51 **முஸ்லிம் பெண்களின் ஆடை:** இலங்கை பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்களின் புரிதல்கள் ஒரு நோக்கு



**விலை விபரம்:**

உள்நாடு: தனிப் பிரதி: ரூபா 60.00 | வருட சந்தா: ரூபா 1050.00 | ஆறு மாதம்: ரூபா 525.00
வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா: 2550.00 | மத்திய கிழக்கு நாடுகள்: 2600.00 |
அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா: 3300.00 | இங்கிலாந்து, நியூசிலாந்து: 4000.00 |
ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4700.00

Golden College
Learning for Success

Diploma in
கண்டி மற்றும் திஹாரியில்

# AIR LINE TICKETING



- Airline Ticketing
- Airline Geography
- Operation of a Travel Agency
- IATA International Regulation
- Air Fare Calculation
- Reservation Procedures
- Basic of GDS / AMADEUS
- Airline & Travel Terminology

COURSE DURATION WILL BE
1-3 MONTHS EITHER FULL TIME OR PART TIME.
INDIVIDUAL CLASSES ALSO AVAILABLE

பாடநெறி ஆரம்பம்
14th- August

Diploma in


## SALES MANAGEMENT

TABLE OF CONTENTS

Full Time / Part Time

- ★ Indoor Sales
- ★ Outdoor Sales
- ★ Introduction to Business Management
- ★ Human Resource Management (HRM)
- ★ Marketing Management
- ★ Business Communication
- ★ Personal Development as a Manager

Duration 4 Months



First Time in Sri Lanka

1st Batch
பாடநெறி ஆரம்பம்
29th- Aug

Diploma in

## REAL ACCESS PROGRAM

Pre Degree Course

In One Course

Get 5 Diplomas

- Diploma in web Designing
- Diploma in Computer Studies
- Diploma in Graphic Designing
- Diploma in Hardware Engineering
- Diploma in Spoken English

21st Batch
பாடநெறி ஆரம்பம்
29th- AUG

Duration 3 Months

With 2 International ISO Certifications

Diploma in

## AIR CONDITIONING & REFRIGERATION

100% Practical Oriented
Friendly Learning enviroment
At an Affordable Price

பாடநெறி ஆரம்பம்
15th- AUG

Course Contents
- Assembling andDismanting
- Trouble Shooting
- Handling of Tools
- Copper Tube Brazing, Bending And Fixing
- Handling of Digital and Analogue Meters

Duration - 1 Month Full Time (168 Hours)

HOT LINE : 0777 222 529

# GOLDEN COLLEGE

www.goldencollege.lk

NO : 548, PERADENIYA ROAD,KANDY. 081 2 205 544 | 0777 912 597

NO : 126, KANDY ROAD, THIHARIYA. 033 2 245 515 | 0777 222 528

பாடநெறி முடிவில் ISO தரச்சான்றிதழ்கள் உற்பட 3 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்.
இப்பாடநெறிகலை பூர்த்தி செய்பவர்களுக்கு சிறந்த சம்பளத்துடன் 100% தொழில் பெற்றுத்தரப்படும்.
ஆண்/பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான, பாதுகாப்பான தங்குமிட வசதி - Hostel Available



# வேண்டும் ஒரு புரட்சி!

துருக்கியின் இராணுவ சதிப் புரட்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டமை துருக்கிய வரலாற்றில் ஒரு மைற்கல். இராணுவ சதிப் புரட்சி வலையில் சிக்குகின்ற நாடுகள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளும் மனிதாபிமானமற்ற பாசிச அரசியலும் அந்நாடுகளை பின்னடையச் செய்து விடுகின்றன.

அந்த வகையில் இதற்கு முன்பு நான்கு தடவை இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு முகம் கொடுத்துள்ள துருக்கி மக்கள் அதனை விரும்பவில்லை. அதனால்தான் இம்முறை தமது உயிரைப் பணயம் வைத்து சதிப் புரட்சியை முறியடித்திருக்கிறார்கள். அவர்ளுக்கு துணிச்சலான தலைமைத்துவத்தை வழங்கிய ஜனாதிபதி அர்துகான் துருக்கியின் வரலாற்று நாயகனாக திகழ்கிறார்.

நீண்டகாலத்துக்குப் பின், கடுமையான பிரயத்தனங்களுக்கும் வலிகளுக்கும் பின்னர் மலர்ந்துள்ள ஜனநாயகத்தை மீண்டும் இராணுவத்திடம் கையளித்து விட முடியாது என்பதில் துருக்கி மக்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

இந்த சதி முயற்சியை மேற்கொண்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் ஜனநாயக விரோதிகள். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் நாடுகளுக்கும் முஸ்லிம் உம்மாவுக்கும் எதிரான இத்தகைய சதி முயற்சிகள் நாளுக்கு நாள் தீட்டப்படுகின்றன. உலக அரங்கில் இஸ்லாத்தை பயங்கரவாதமாகவும் முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகவும் சித்திரிப்பதற்கான முயற்சி இன்று ஒரு மாபெரும் தொழிலாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் இஸ்லாமிய வெறுப்புணர்வு அமெரிக்க மக்களிடையே பரவுவது குறித்து அமெரிக்காவின் கலிஃபோர்னியா பல்கலைக்கழகமும் அமெரிக்க - இஸ்லாமிய உறவுகளுக்கான கவுன்சிலும் இணைந்து ஆய்வு செய்துள்ளன.

இஸ்லாமிய வெறுப்பைப் பரப்புகின்ற குழுக்கள் பலரகம் என்கிறது அந்த ஆய்வு. பெண்ணிய அமைப்புகள், கிறிஸ்தவ அமைப்புகள், யூத அமைப்புகள், சில செய்தி நிறுவனங்கள் என அவை வகை வகையாக உள்ளன. இத்தகைய 74 குழுக்களின் பட்டியலையும் அவர்கள் தயாரித்துள்ளனர். ''இது முழுமையான ஒரு தொழிலைப் போல இயங்குகிறது. 2008 முதல் 2013 வரை யான ஐந்தாண்டுகளில் மட்டும் 200 மில்லியன் டொலருக்கு மேலான பணம் செலவாகியுள்ளது'' என்கிறார் கவுன்சிலின் செய்தித் தொடர்பாளர்.

முஸ்லிம்களுக்கு எதிராகப் பரப்பப்படும் இந்த வெறுப்பு குறித்து குற்றங்கள் அதிகரித்திருப்பதையும் இஸ்லாமிய விரோத சட்டங்கள் உருவாகுவதையும் ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்காவில் மாத்திரம் இஸ்லாமிய வெறுப்பு பிரசாரத்துக்காக இந்தளவு தொகை என்றால் உலகளாவிய ரீதியில் இதற்காக எவ்வளவு பணம் செலவளிக்கப்படுகிறது என்பது குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இத்தகைய சதி முயற்சிகள் குறித்து முஸ்லிம் உம்மத் விழிப்புடன் இருக்க வேண்டும். இறை விதியின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கும் முஸ்லிம் சமூகம் முஸ்லிம்களுக்கெதிரான சதி முயற்சிகளையும் அறிந்திருப்பது அவசியம்.

இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்காக நிராகரிப்பாளர்கள் இரவு பகலாக உழைக்கிறார்கள். சத்திய தூதைச் சுமந்திருக்கும் நாம் அதனை வாழ வைப்பதற்காக எந்தளவு உழைக்கிறோம் என்பது பற்றி சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

இஸ்லாமியத் தூதை சொல்லாலும் செயலாலும் பண்பாடுகளினாலும் வாழ வைக்கின்ற பணியை மேற்கொள்ள ஒரு புரட்சி தேவை. அது உலகில் சமாதானத்தை நிலைநாட்டுகின்ற புரட்சி! உலகில் மனிதநேயத்தை விதைக்கின்ற புரட்சி! அந்தப் புரட்சி நடைபெற்றாலேயே உலகின் சதிப் புரட்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். சதி முயற்சிகளைத் தடுத்து நிறுத்தலாம்.

# ஸூரா யூசுப்:
## அழகிய சம்பவங்களும் படிப்பினைகளும்!

அஷ்ஷெய்க் தாஹிர் எம். நிஹால் (அஸ்ஹரி) அதிபர்,
கதீஜதுல் குப்றா மகளிர் கல்லூரி, வடதெனிய, வெலம்பொட.

*"இது தெளிவாக விவரிக்கும் வேதத்தின் வசனங்களாகும். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அரபு மொழியில் இக்குர்ஆனை நாம் இறக்கி வைத்துள்ளோம். (நபியே!) இந்தக் குர்ஆனை உமக்கு அறிவித்திருப்பதன் மூலம் மிக அழகான சம்பவங்களை நாம் உமக்கு எடுத்துரைக்கின்றோம். இதற்கு முன் நீர் (இதனை) அறியாதவராக இருந்தீர்." (12: 1-3)*



> திறந்த உள்ளங்களால் விடயங்களை உற்றுநோக்கினால் இழந்ததை மீளப் பெறுவதை விடவும் இல்லாததை உருவாக்குவதில்தான் பெரும் அத்தாட்சி அறிவுடையோருக்கு உள்ளது. அதனால்தான் அல்லாஹுத் தஆலா இல்லாமையிலிருந்து மனிதனைப் படைத்து அற்புதமான உறுப்புக்களை அருளி அத்தாட்சிகள் பற்றி சிந்திக்குமாறு மனிதனுக்கு அழைப்பு விடுக்கின்றான்.

திறந்த கண்களையும் தாழிடப்பட்ட உள்ளங்களையும் கொண்ட மனிதர்கள் அற்பமானதை அற்புதமாகவே பார்ப்பார்கள். இவர்கள் கண்களால் கண்டு காதுகளால் கேட்பதை மாத்திரம் அற்புதம் எனக் கருதுவார்கள். அல்லாஹுத் தஆலாவின் பெயர்பதிக்கப்பட்ட மரம், மீன், முட்டை, மேகம் போன்றவை இவ்வாறானமனிதர்களை மிகவும் கவரும். ஸுஜூது செய்வது போன்று அமைந்திருக்கும் மரம், குர்ஆனிய வசனங்கள் பதிக்கப்பட்டு பிறந்த குழந்தை, அனர்த்தத்தின்போது எல்லாம் அழிந்து எஞ்சியுள்ள மஸ்ஜித் போன்ற தலைப்புக்களும் காட்சிகளும் இவர்களை மிகவும் கவரும். இவ்வாறான புகைப்படங்களையும் வீடியோக்களையும் பார்ப்பதில் பரவசப்பட்டு, பிறருடன் பகிர்ந்து கொள்வதில் அவசரப்படுவார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்காலத்திலும் இவ்வாறான திறந்த கண்களையும் தாழிடப்பட்ட உள்ளங்களையும் கொண்ட மனிதர்கள் வாழ்ந்துவந்தார்கள். தாழிடப்பட்ட உள்ளங்களைத்தட்டும் மாமறை வேதத்தையும் உண்மையான அத்தாட்சிகளையும் அற்புதங்களையும் புறக்கணித்து வெறுக் கண்களால் பார்க்கக் கூடிய அற்பமானதைக் கொண்டு வருமாறு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வேண்டிக் கொண்டார்கள். இதனை அல்லாஹுத் தஆலா புனித அல்குர்ஆனில் பின்வருமாறு பதிவு செய்துள்ளான்:

*"இப்பூமியில் நீரூற்றை எங்களுக்காக நீர் ஓடச் செய்யாத வரை உம்மை நாங்கள் நம்பவே மாட்டோம்" என்று கூறுகின்றனர். அல்லது உமக்கு பேரீச்சை மற்றும் திராட்சைத் தோட்டம் இருக்க வேண்டும். அவற்றுக்கு இடையே நதிகளை நீர் பெருக்கெடுத்து ஓடச் செய்ய வேண்டும். அல்லது நீர் நினைப்பது போல் வானத்தைத் துண்டு துண்டாக எங்கள் மீது விழச் செய்ய வேண்டும். அல்லது அல்லாஹ்வையும் வானவர்களையும் நேரில் நீர் கொண்டு வர வேண்டும். அல்லது தங்கத்தால் உமக்கு ஒரு வீடு இருக்க வேண்டும். அல்லது வானத்தில் நீர் ஏற வேண்டும். நாங்கள் வாசிக்கும் விதமாக எங்களிடம் ஒரு புத்தகத்துடன் இறங்கினால் தவிர நீர் ஏறிச் சென்றதை நம்பமாட்டோம் (எனவும் கூறுகின்றனர்). 'என் இறைவன் தூயவன். நான் மனிதனாகவும் தூதராகவுமே இருக்கிறேன்' என்று (நபியே!) கூறுவீராக!" (17: 90-93)*

இவ்வாறான அற்பமானதையே அவர்கள் அற்புதம் எனக் கருதினார்கள். சம காலத்தில் இவ்வாறான அற்பமானவற்றை அற்புதங்களாகச் சித்திரிப்பதில் சமூக வலைத்தளங்கள் பெரும் பங்காற்றுகின்றன. தமக்குக் கிடைக்கும் புகைப்படங்கள், வீடியோக்களின் நம்பகத்தன்மையை ஆராயாது பகிர்ந்து கொள்வதன் மூலம் ஏற்படும் பின்விளைவுகளைப் பற்றி சிலர் பொருட்படுத்துவதில்லை. இதன் மூலம் இறை கட்டளைக்கு இவர்கள் மாறுசெய்து பாவிகளாகுவதையும் இவர்கள் உணர்வதில்லை.

*"நம்பிக்கை கொண்டோரே! தீயவன் ஒருவன் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால், அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தெரியாத்தனமாக ஏதேனும் ஒரு சமுதாயத்திற்குத் தீங்கிழைத்துவிட்டுப் பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது." (49: 6)*

சில நாட்களுக்கு முன் கஃபாவுக்கு மேலிருந்து இறங்கும் வானவர்கள்

எனும் போலியான வீடியோ சமூக வலைத்தளங்களில் உலா வந்து பலரை ஏமாற்றியது. அது போன்று கண் பார்வையை இழந்திருந்ததாகக் கூறும் ஒருவர் ஹரம் ஷரீபில் அஸர் தொழுகையின் பின் பார்வையை மீளப் பெற்றதாக மகிழ்ச்சியில் கூச்சலிடும் வீடியோ பலராலும் பேசப்பட்டு, பகிரப்பட்டு வந்தது. பின்னர் அவர் சொன்னது பொய் என்பது தெளிவாகியது. இவ்வாறான பொய்யான, போலியான காட்சிகளிலுள்ள ஆபத்து என்னவெனில், பல வீனமான நம்பிக்கை உடையவர்களுக்கு இவை பொய்யெனத் தெரிய வரும்போது அவர்களின் நம்பிக்கை இன்னும் பலவீனமாகுவதற்கான வாய்ப்புண்டு. அத்தோடு உண்மையான அத்தாட்சிகளைப் பார்த்து சிந்திப்பதற்கு இவை தடையாக அமைய வாய்ப்புக்களும் உள்ளன.

படித்துப் பயன் பெறக் கூடிய உண்மையான அற்புதங்களையும் அழகிய சம்பவங்களையும் அல்லாஹுத் தஆலா புனித அல்குர்ஆனில் பதிவு செய்து வைத்துள்ளான். நபிமார்களின் அற்புதமான சம்பவங்களைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளான். அந்த வகையில் 'ஸூரா யூசுப்' தனிச்சிறப்புப்பெற்ற ஸூராவாகும். காரணம், அதில் யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சிறு வயது முதல் பெரியவராகும் வரையிலான அழகிய சரிதை ஒரே தொடரில் கூறப்பட்டுள்ளமையாகும். ஏனைய நபிமார்களின் சரிதைகளை இவ்வாறு அல்லாஹுத் தஆலா ஒரே தொடரில் குறிப்பிட்டதில்லை.

மேலும் நிகழ்வுக்கு நிகழ்வு, நிலைக்கு நிலை என பல வகையான படிப்பினைகளை உள்ளடக்கியதாக 'ஸூரா யூசுப்' அமைந்துள்ளது. சோதனை- அருள், அவமானம்- கௌரவம், பயம்- பாதுகாப்பு, சிறை- அரசாட்சி, வரட்சி- செழிப்பு, உறவு- பிரிவு என நிலைக்கு நிலை மாற்றமான அழகிய சம்பவங்களை அற்புதமான வகையில் உள்ளடக்கியதாக 'ஸூரா யூசுப்' அமைந்திருக்கின்றது. இதனைத்தான் ''மிக அழகான சம்பவங்களை நாம் உமக்கு எடுத்துரைக்கின்றோம்'' என அல்லாஹுத் தஆலா குறிப்பிடுகின்றான்.

இழந்த கண் பார்வையை மீளப் பெற்ற அற்புதத்தை அறிந்து கொள்ள வேண்டுமாயின் 'ஸூரா யூசுபை' கற்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். நபி யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இழந்த கண் பார்வையை மீளப் பெற்ற அழகிய சம்பவத்தைப் அல்குர்ஆன் பின்வருமாறு விளக்குகிறது:

*''அவர்களை விட்டும் அவர் ஒதுங்கிக் கொண்டார்! 'யூஸுஃபுக்கு ஏற்பட்ட துக்கமே' என்றார். கவலையால் அவரது கண்கள் வெளுத்தன. அவர் (துக்கத்தை) அடக்கிக் கொள்பவராக இருந்தார்.''* (12: 84)

*'நற்செய்தி கூறுபவர் வந்து, அதை அவரது முகத்தில் போட்டார். உடனே அவர் பார்வை பெற்றவராக மாறினார். 'நீங்கள் அறியாததை நான் அல்லாஹ்விடமிருந்து அறிகிறேன் என உங்களிடம் கூறவில்லையா?' என்று அவர் கூறினார்.''* (12: 96)

திறந்த உள்ளங்களால் விடயங்களை உற்றுநோக்கினால் இழந்ததை மீளப் பெறுவதை விடவும் இல்லாததை உருவாக்குவதில்தான் பெரும் அத்தாட்சி அறிவுடையோருக்கு உள்ளது. அதனால்தான் அல்லாஹுத் தஆலா இல்லாமையிலிருந்து மனிதனைப் படைத்து அற்புதமான உறுப்புக்களை அருளி அத்தாட்சிகள் பற்றி சிந்திக்குமாறு மனிதனுக்கு அழைப்பு விடுக்கின்றான்.

*''அவனுக்கு இரண்டு கண்களையும் நாவையும் இரு உதடுகளையும் நாம் அமைக்கவில்லையா?''* (90: 8,9)

இல்லாமையிலிருந்து உருவாக்கப்பட்ட அல்லாஹ்வின் மாபெரும் அத்தாட்சியை மறந்து, இறந்த பின் மீட்டப்படுவதில் சந்தேகம் கொண்டவர்களுக்கு அல்லாஹுத் தஆலா பின்வருமாறு பதிலளிக்கின்றான்:

**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காலத்திலும் இவ்வாறான திறந்த கண்களையும் தாழிடப்பட்ட உள்ளங்களையும் கொண்ட மனிதர்கள் வாழ்ந்து வந்தார்கள். தாழிடப்பட்ட உள்ளங்களைத் தட்டும் மாமறை வேதத்தையும் உண்மையான அத்தாட்சிகளையும் அற்புதங்களையும் புறக்கணித்து வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடிய அற்பமானதைக் கொண்டு வருமாறு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வேண்டிக் கொண்டார்கள்.**

*''உமக்கு எவ்வாறு அவர்கள் உதாரணம் காட்டுகிறார்கள் என்று கவனிப்பீராக! இதனால் அவர்கள் வழிகெட்டனர். அவர்கள் நேர்வழியை அடைய இயலாது. 'நாங்கள் எலும்புகளாகி மக்கிப் போகும் போது புதுப் படைப்பாக மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவோமா?' என்று அவர்கள் கேட்கின்றனர். 'கல்லாகவோ இரும்பாகவோ அல்லது உங்கள் உள்ளங்களில் பெரிதாகத் தோன்றும் ஒரு படைப்பாகவோ ஆகுங்கள்! (எப்படி ஆனாலும் உயிர்ப்பிப்பான்)' என்று கூறுவீராக! 'எங்களை எவன் மீண்டும் படைப்பான்?' என்று அவர்கள் கேட்கின்றனர். 'முதல் தடவை உங்களை யார் படைத்தானோ அவன் (மீண்டும் படைப்பான்)' என்று கூறுவீராக! உம்மிடம் தங்கள் தலைகளைச் சாய்த்து, 'அது எப்போது வரும்?' என்று கேட்கின்றனர். 'அது சமீபத்தில் வரக் கூடும்' என்று கூறுவீராக!''* (17: 48-51)

அல்லாஹ்வின் பால் அழைப்பவர்கள் (தாஈக்கள்) கடைப்பிடிக்க வேண்டிய

அழகிய, சரியான அணுகுமுறைகளை 'ஸூரா யூசுப்' கற்றுத் தருவதாக அமைந்துள்ளது. நபி யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) தனது வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை தடுமாற்றமில்லாமல், பதற்றமில்லாமல் கடைப்பிடித்து வந்த நிதானமான அணுகுமுறை இறுதியில் அவரை வெற்றி பெறச் செய்தது. பொதுவாக தடுமாற்றம், பதற்றம், அநாவசிய அவசரம் போன்றவை தாஇக்களை தோல்வியின் பால் இட்டுச் செல்லும் என்பது யதார்த்தமாகும்.

"இதுவே எனது பாதை. நானும் என்னைப் பின்பற்றியோரும் தெளிவான விளக்கத்தில் இருந்து கொண்டு அல்லாஹ்வை நோக்கி அழைக்கிறோம். அல்லாஹ் தூயவன். நான் இணை கற்பிப்பவன் அல்லன்" என்று (முஹம்மதே!) கூறுவீராக!" (12: 108)

அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கையிழக்காது இலக்கை அடைவதற்குத் தேவையான விடாமுயற்சி இறுதியில் வெற்றியைத் தரும் என்பதும் 'ஸூரா யூசுப்' கற்றுத்தரும் முக்கிய படிப்பினையாகும்.

"என் மக்களே! நீங்கள் சென்று யூஸுஃபையும் அவரது சகோதரரையும் நன்றாகத் தேடுங்கள்! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழக்காதீர்கள்! (ஏக இறைவனை) மறுக்கும் கூட்டத்தைத் தவிர வேறு எவரும் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழக்க மாட்டார்கள் (என்றார்)." (12: 87)

'ஸூரா யூசுப்' ஆரம்பம் முதல் இறுதி வரை அழகிய படிப்பினைகளை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது. இந்த அற்புதமான ஸூராவுக்குப் பின்வருமாறு அல்லாஹுத் தஆலா முற்றுப் புள்ளி வைக்கின்றான்:

"அவர்களின் வரலாற்றில் அறிவுடையோருக்குப் படிப்பினை இருக்கிறது. (இது) இட்டுக்கட்டப்பட்ட செய்தி அல்ல. மாறாக, தனக்கு முன் சென்றதை உண்மைப்படுத்தி, ஒவ்வொரு பொருளையும் விளக்கிக் கூறுகிறது. நம்பிக்கை கொள்ளும் சமுதாயத்திற்கு நேர்வழியாகவும் அருளாகவும் உள்ளது." (12: 111)

"உறுதியாக நம்புவோருக்கு பூமியிலும் உங்களுக்குள்ளும் பல சான்றுகள் உள்ளன. சிந்திக்க மாட்டீர்களா?" (51: 20, 21)

After A/Ls

Become a

4 Months

Certified Islamic Banker

-Lead your career in a progressing industry-

**The Islamic Banking & Finance industry has been identified as one of the fastest growing sectors within the global economy. There is a great demand for professionals to serve this industry both locally and globally.**



*"Join the Islamic Finance journey with FGA to master the skills in your chosen field. I recommend FGA is the best place to qualify and develop your career in Islamic Banking & Finance"*

*Mohamed Ishrath, Amana Bank PLC*

CISI CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT — ACCREDITED TRAINING PARTNER

FGA Registered with TVEC under A05375

CLASS COMMENCEMENT
Date : 04 - September - 2016
Time : 9.30 am - 10.30 am

SPECIAL DISCOUNT
Register on or before 8-Sep-2016

**JOB**
Guaranteed Paid Internship of 3 months in leading Islamic Banks & Financial institutions in Sri Lanka.

**RECOGNITION**
This programme will lead to the Islamic Finance Qualification (IFQ) offered by CISI-UK.


**EXEMPTION**
this programe will offer exemption for Diploma in Islamic Banking & Finance (DIBF) offered by FGA.

REGISTER NOW 077-7703567 077-4616710

First Global Academy (FGA)
#4, Level 1, Collingwood Place,
Colombo 06, Sri Lanka.

+94 11 7395090-3
www.firstglobalacademy.com

ஹலாலான சம்பாத்தியத்தின் மூலம் உடை வாங்கி அணிந்து விட்டால் மட்டும் அது ஹலாலான ஆடையாக மாட்டாது. மாறாக, இஸ்லாமிய ஷரீஆ விதிமுறைகளைப் பேணி அவை தைக்கப்பட்டு அணியப்பட்டால் மட்டுமே அந்த ஆடையமைப்பு ஹலாலாகும். இன்று நமது யுவதிகள் அணிகின்ற நவீன மோஸ்தர் அபாயாக்கள் ஹராமான ஆடையலங்காரமாகும். அவ்வாறே மறைக்கப்பட வேண்டிய உடற்பாகங்கள் வெளியே தெரியக் கூடிய வகையில் இளைஞர்கள் அணிகின்ற நீண்ட காற்சட்டையும் ஹராமானதே! இவற்றை அணிந்த நிலையில் ஒரு யுவதியோ அல்லது ஓர் இளைஞனோ கேட்கும் துஆ அங்கீகரிக்கப்படுமா?



அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர்,
இஸ்லாஹிய்யா மகளிர் அரபுக் கல்லூரி, புத்தளம்

# அல்லாஹ் மிகவும் தூய்மையானவன்...
## அவன் தூய்மையானவற்றையே அங்கீகரிக்கின்றான்!

இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹுத்தஆலா தூய்மையானவன். அவன் தூய்மையானவற்றைத் தவிர வேறு எதனையும் ஏற்று அங்கீகரிப்பதில்லை. அல்லாஹுத்தஆலா இறைதூதர்களுக்கு கட்டளையிட்டதையே முஃமின்களுக்கும் கட்டளையிட்டான். அல்லாஹுத் தஆலா கூறுகிறான்:

''இறைதூதர்களே! தூய்மையானவற்றை சாப்பிடுங்கள். நற்செயல் புரியுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை நான் நன்கு அறிவேன்.''

*(அல்முஃமினூன்: 51)*

''இறை விசுவாசிகளே! நாங்கள் உங்களுக்கு வாழ்வாதாரமாக தந்தவற்றில் தூய்மையானவற்றை உண்ணுங்கள். நீங்கள் அவனை வணங்குபவர்களாக இருந்தால் அவனுக்கு நன்றி செலுத்துங்கள்.''

*(அல்பகரா: 172)*

பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு மனிதரைப் பற்றி குறிப்பிட்டார்கள். ''அந்த மனிதன் தூசு படிந்த நிலையில் தலைவிரி கோலமாக நீண்டதொரு பயணம் மேற்கொண்டு வரும்வேளையில் 'யா ரப்! யா ரப்!' என தனது இரு கரங்களையும் வானத்தை நோக்கி உயர்த்தி பிரார்த்திக்கிறான். ஆனால், அவனது உணவு ஹராமானது. அவனது ஆடை ஹராமானது. அவன் ஹராத்தினால் போஷிக்கப்பட்டுள்ளான். எனவே, அவனது பிரார்த்தனை எவ்வாறு அங்கீகரிக்கப்படும்?'' (ஸஹீஹு முஸ்லிம், முஸ்னத் அஹமத், திர்மிதி)

அல்லாஹுத் தஆலாவின் சட்ட வரம்புகள் பற்றிப் பேசுகின்ற மிகவும் முக்கியமான ஹதீஸ்களில் இதுவும் ஒன்று. நமது இவ்வுலக செயற்பாடுகள் அனைத்தும் இறைவனால் அங்கீகரிக்கப்படுகின்றபோது மட்டுமே மறு உலகில் எமக்குரிய நற்கூலி பதிவு செய்யப்படும். மீஸானுல் ஹஸனாத் கனதியாகும்.

ஹதீஸின் ஆரம்பத்தில் அல்லாஹுத்தஆலா மிகவும் தூய்மையானவன் என்ற வாசகம் பதிவாகியுள்ளது. 'தய்யிப்' எனும் அரபுப் பதம் மிகவும் தூய்மையானவன் என்ற கருத்தைத் தொனிக்கிறது. அதாவது, அனைத்து வகையான குறைபாடுகளை விட்டும் அவன் பரிசுத்தமானவன். அவன் பரிசுத்தமானவற்றையே ஏற்றுக் கொள்கிறான். அவ்வாறே மிகவும் தூய்மையான வார்த்தைப் பிரயோகங்களையும் நம்பிக்கை கோட்பாடுகளையும் பண்பாடுகளையும் ஏற்றுக் கொள்கிறான். கெட்ட வார்த்தைகளையும் கெட்ட செயற்பாடுகளையும் கெட்ட மனிதர்களையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. நல்லதும் கெட்டதும் சமமாக மாட்டாது.

''(நபியே) கெட்டது அதிகமாக உம்மை ஈர்த்தாலும் நல்லதும் கெட்டதும் சமமாக மாட்டாது.''

*(அல்மாயிதா: 100)*

''தூய வார்த்தைகளும் நற்செயல்களும் அவனை நோக்கி மேலுயர்ந்து செல்கின்றன.''

*(பாதிர்: 10)*

செயற்பாடுகளில் தூய்மையானவற்றைத்தவிர வேறு எதனையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். குறிப்பாக, தூய்மையானஸதகாவையே அல்லாஹ்

ஏற்றுக் கொள்கிறான். ஹராமான சம்பாத்தியத்தின் மூலம் செய்யப்படும் தர்மங்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. ஹராமான உழைப்பின் மூலம் தர்மம் செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிடவில்லை. ''முதலில் சொத்து செல்வத்தைதூய்மைப்படுத்து! பின்னர்தர்மம் செய்!'' என்றே இஸ்லாம் கட்டளையிடுகிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

''தூய்மையான நிலையிலன்றி நிறைவேற்றப்படும் தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மோசடி மூலம் பெற்ற பணத்தைக் கொண்டு செய்யப்படும் தர்மமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.''

(ஸஹீஹு முஸ்லிம், முஸ்னத் அஹமத், திர்மிதி)

ஹராமான முறையில் உழைத்த பணத்தை ஸகாத் கொடுத்து அதனை தூய்மைப்படுத்திக் கொள் என்று இஸ்லாம் சொல்லவில்லை. ''அந்தப் பணத்தை நீ உன்னிடமிருந்து முழுமையாக விடுவித்துக் கொள். அதன் சொந்தக்காரர்களிடம் அந்த செல்வத்தை ஒப்படைத்து விடு. உனக்கு ஸகாத் கடமையில்லை'' என்று இஸ்லாம் கூறுகிறது. ஏனெனில், ஸகாத்துக்குரிய கடமைகளில் முதன்மையானது சொத்துரிமையாகும். சொத்துரிமை பெறாதவர் ஸகாத் கொடுப்பது கடமை இல்லை.

''அவர்களின் சொத்து செல்வங்களிலிருந்து ஸகாத்தைப் பெற்று அவர்களையும் அவர்களது செல்வத்தையும் தூய்மைப் படுத்துவீராக!''

(அத்தெளபா : 103)

ஹராமான முறையில் உழைத்து பள்ளிவாசலை நிர்மாணித்தால் அல்லது சமூக நலன்புரி திட்டத்தை அமுல்படுத்தினால் அல்லது ஓர் அநாதைக்கு கொடுத்தால் ஓர் ஏழைக்கு வழங்கினால் அல்லாஹ் ஒருபோதும் அந்த ஸதகாவை ஏற்றுக் கொள்ள மாட்டான். இத்தகைய மோசமான தர்மம் செய்வோர் குறித்து அபூ தர்தா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் ''இவர்கள் அநாதையின் சொத்தை அபகரித்து விதவைக்கு ஆடை அணிவித்தவர்களைப் போலாவார்கள்'' எனக் கூறினார்கள். ஹராமான உழைப்பின் மூலம் பெற்ற பணத்திற்கும் தர்மத்திற்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாது. எமது உணவு ஹலாலாக அமைய எமது உழைப்பு ஹலாலாக அமைய வேண்டும். எமது ஸதகா ஹலாலாக அமைய எமது சம்பாத்தியம் ஹலாலாக அமைய வேண்டும். கெட்ட ஸதகாவுக்குரிய கூலி நரகப் பெருநெருப்பாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''எவர் ஒருவர் ஹராமான வழியில் சம்பாதித்து தர்மம் செய்தால் அதற்கு எந்தவொரு நற்கூலியும் கிடையாது; அவருக்குப் பாவம் உண்டு.''

(இப்னு குஸைமா, இப்னு ஹிப்பான்)

ஹராமான ஒன்றை நாம் உரிமை கொண்டாட முடியாது அடுத்தவரின் சொத்தை அபகரித்து ஒருவர் நீண்ட பல வருடங்கள் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும் அது அவருக்கு ஹலாலாக மாட்டாது. அடுத்தவரின் சொத்து செல்வம் நீண்ட பல வருடங்கள் ஒருவரின் கையில் இருந்தால் அவருக்கு சொந்தமாகும் என்று மனித சட்டங்கள் சொன்னால் கூட இஸ்லாம் அதனை அவரது சொத்தாகக் கருத மாட்டாது. ஹராமான சொத்து செல்வத்தை ஸதகா மூலம் தூய்மைப்படுத்தவும் முடியாது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

''ஹராமான முறையில் சொத்து செல்வத்தை சம்பாதித்து தர்மம் செய்பவரது தர்மத்தை அல்லாஹ் ஏற்று அங்கீகரித்து அதில் வளம் சேர்க்க மாட்டான். அதனை அல்லாஹ் அவனது முதுகுக்குப் பின்னால் விட்டு விடுவான். அது அவனை நரகத்திற்கு கொண்டு சேர்க்கும் கட்டுச்சாதமாக மாறும் வரை அல்லாஹ் கெட்டதை கெட்டதைக் கொண்டு அழிப்பதில்லை. கெட்டதை நல்லதைக் கொண்டு அழிக்கின்றான். கெட்டவை கெட்டவற்றை அழிக்காது.''

(முஸ்னத் அஹ்மத், பஸ்ஸார், பைஹகீ)

ஒரு மனிதன் ஹராமான வழிகளில் சம்பாதித்து அதனை ஸதகா செய்ய விரும்பினால் அது சிறுநீரைக் கொண்டு நஜீஸை சுத்தம் செய்யும் செயற்பாடாகும். அந்த நஜீஸ் சுத்தமாக மாட்டாது.

ஹலாலான சம்பாத்தியத்தின் மூலம் ஸதகா செய்தால் அது பயனளிக்கும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

''நல்ல சம்பாத்தியத்தின் மூலம் ஒரு பேரீச்சம் பழத்திற்கு நிகரான ஒன்றை தர்மம் செய்தால்-அல்லாஹ் தூய்மையானதைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக் கொள்ள மாட்டான். அதனை தனது வலக்கரத்தால் அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான். பின்னர் உங்களில் ஒருவர் தனது ஒட்டகக் குட்டியை வளர்ப்பதுபோல அந்த ஸதகாவை ஸதகா செய்தவருக்காக உஹுத் மலையைப்போல ஆகும்வரை வளர்க்கின்றான்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

ஹராமான சம்பாத்தியம் புனித யாத்திரையான ஹஜ்ஜைக் கூட நாசப்படுத்தி விடுகிறது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

''ஒருவர் நல்ல சம்பாத்தியத்தின் மூலம் ஹஜ் செய்யப் புறப்பட்டு தனது குதிரையின் மீது ஏறி அமர்ந்து தனது காலை குதிரையில் வைக்க வேண்டிய இடத்தில் வைத்துக் கொண்டு ஆயத்தமாகின்றபோது 'லப்பைக அல்லாஹும்ம லப்பைக்க' என தல்பிய்யா சொல்கிறார். அப்போது வானத்திலிருந்து அழைப்பாளர் ஒருவர் 'உமது வரவு நல்வரவாகட்டும்! உமது கட்டுச்சாதம் ஹலாலானது! உமது வாகனம் ஹலாலானது! உமது ஹஜ் பாவங்கள் கலக்காத சிறந்த ஹஜ்ஜாக அமைந்து

விட்டது!' எனக் கூறுகிறார். ஒருவர் கெட்ட சம்பாத்தியத்தின் மூலம் ஹஜ் செய்யப் புறப்பட்டு குதிரையின் மீது ஏறி அமர்ந்துகொண்டு குதிரையில் தனது காலை வைத்துக் கொண்டு ஆயத்தமாகி 'லப்பைக அல்லாஹும்ம லப்பைக்க' எனத்தல்பிய்யாசொன்னால், வானத்திலிருந்து அழைப்பாளர் ஒருவர் 'உமது வரவு நல்வரவாக அமையாமல் இருக்கட்டும்! உமது கட்டுச்சாதம் ஹராமானது! உமது சம்பாத்தியம் ஹராமானது! உமது ஹஜ் நல்ல ஹஜ் அல்ல'' எனக் கூறுகிறார்.''

(தபரானி, அல்ஹைதமி)

அல்லாஹுத் தஆலா தனது தூதர்களுக்கும் இறை விசுவாசிகளுக்கும் எவ்விதபாரபட்சமுமின்றி நல்லவற்றைப் புசிக்குமாறும் நல்லதையே செய்யுமாறும் கட்டளையிட்டுள்ளான். அவனது பார்வையில் எல்லோரும் அவனது நல்லடியார்களே! ஹராமானகெட்ட உணவு வாய்க்கு எவ்வளவுதான் ருசியாக அமைந்தாலும், உடலில் செரித்தாலும் அது அல்லாஹ்வின் பார்வையில் கெட்ட உணவு. அதனது இறுதி முடிவு நரகமே! ஹராமான உணவைச் சாப்பிட்டவன் நரக நெருப்பையே சாப்பிட்டான்.

ஹராமான உணவு துஆக்கள் அங்கீகரிக்கப்படுவதைத் தடுத்துவிடும். இதனைநபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அழகான உவமானத்தின் ஊடாக விளக்குகின்றார்கள். பயணம் துஆக்கள் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்ற அரிய சந்தர்ப்பமாகும். தனது பிறந்தகத்தை விட்டும், தனது தேசத்தை விட்டும் தனியே பயணிக்கின்ற ஒரு பயணியின் உற்ற தோழனாக அல்லாஹ் இருக்கின்றான். அவனது வீட்டாரின் பிரதிநிதியாக அல்லாஹ் இருக்கின்றான். அநாதரவான நிலையில் இருக்கும் அவனுக்கு அல்லாஹ் ஆதரவுக் கரம் நீட்டுகின்றான். ஆனால், அவன் ஒரு வகைப் பயணியை விட்டும்தூரவிலகி விடுகின்றான். அந்தப் பயணி யார்? தனது உணவையும் குடிபானத்தையும் ஆடையையும் ஹராமானதாக மாற்றிக் கொண்ட பயணி.

ஒரு மனிதன்தனது வறுமையை அல்லது கஷ்ட நிலையை முன்னிறுத்திப் பிரார்த்தித்தால் அல்லாஹ் அவனது தேவையை நிறைவு செய்கின்றான். இரு கரம் ஏந்திப் பிரார்த்திப்பது கூட துஆக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கான ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது. ''யாரப்! யாரப்!'' என அல்லாஹ்வை வற்புறுத்தி அழைப்பது கூட துஆக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு வழிவகுத்து விடுகின்றது. இந்தப் பயணி இவ்வளவு செய்தும் அல்லாஹ் அவனது பிரார்த்தனையை அங்கீகரிக்கவில்லை! ஏன்? அவன்துஆக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கான அடிப்படையான முன்நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை! அதாவது அவனது இரத்தத்தில் ஹராம் கலந்துள்ளது. அவனது உடலும் ஹராத்தினால் போஷிக்கப்பட்டுள்ளது.

ஓர் அடியானுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையேயுள்ள உறவுக் கயிறுதான் துஆ! அந்தக் கயிற்றை ஹராம் என்னும் கத்தியைக் கொண்டு வெட்டி அல்லாஹ்வோடுள்ள உறவை முறித்துக் கொள்கின்றான் அடியான். ஆரம்ப கால ஸலபுகள் தமது உணவுக் கவளம் குறித்து விழிப்புணர்வுடன் இருந்தார்கள். இந்த உணவுக்கவளம் எங்கிருந்து வந்தது? இந்த திர்ஹம் எங்கிருந்து வந்தது? இந்த தீனார் எங்கிருந்து வந்தது? என்று சுயவிசாரணைசெய்து ஹலாலாக அவை அமைந்தால் மட்டும் அதை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், எமது காலப் பிரிவில் தமது உணவு, உடை, குடிபானம், சொத்து, செல்வம் எவ்வழியில் ஈட்டப்பட்டது? என்ற பிரக்ஞை இன்றியே மனிதர்கள் வாழுகின்றார்கள். துஆப் பிரார்த்தனை செய்கின்றார்கள். அவர்களது துஆக்கள் அங்கீகரிக்கப்பட்டதாக இல்லை. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

''மனிதர்களுக்கு ஒருகாலம் வரும். அந்தக் காலத்தில் மனிதன் தான் பெற்றுக் கொண்டது ஹலாலான வழி மூலமா? அல்லது ஹராமான வழி மூலமா? என்று கூட கவனத்திற் கொள்ள மாட்டான்.''

(ஸஹீஹுல் புகாரி, நஸாஈ)

முஸ்லிம்கள் உணவுப் பொருட்கள் ஹலாலாக அமைய வேண்டும் என்று சிந்திப்பதும் அது குறித்து கூடுதல் கவனம் செலுத்துவதும் நியாயமானதே! அவர்களுக்குள் அல்குர்ஆனும் ஸுன்னாவும் இஸ்லாமிய ஷரீஆவும் அத்தகைய உள்ளுணர்வைத் தோற்றுவித்துள்ளன. தான் கொள்வனவு செய்வது நொறுக்குத் தீனியாக இருந்தாலும் E-Code இலக்கத்தை அவதானித்து விலை கொடுத்து வாங்கும் கலாசாரம் வளர்ந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயம். ஆனாலும், நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்டுள்ள ஹதீஸ் ஹராத்தை உணவுப் பண்டங்களுடன் மட்டும் தொடர்புபடுத்திப் பேசவில்லை. உடையும் குடிபானமும் ஹராமாக அமையக் கூடாது என்று வலியுறுத்துகின்றது.

இஸ்லாம் வலியுறுத்துகின்ற ஹலால்-ஹராம் கோட்பாடு விரிவானது; வியாபகமானது; துல்லியமானது. வியாபாரம், தொழில் முதலானவை ஹலாலானதுதான். ஆனால், ஷரீஆ சட்ட வரம்புகளையும் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பேணாமல் முன்னெடுக்கப்படும் தொழில் முயற்சிகள் ஹராமானவை என்ற சிந்தனையும் வளர்க்கப்படல் வேண்டும்.

ஹலாலான சம்பாத்தியத்தின் மூலம் உடை வாங்கி அணிந்து விட்டால் மட்டும் அது ஹலாலான ஆடையாக மாட்டாது. மாறாக, இஸ்லாமிய ஷரீஆ விதிமுறைகளைப் பேணி அவை தைக்கப்பட்டு அணியப்பட்டால் மட்டுமே அந்த ஆடையமைப்பு ஹலாலாகும். இன்று நமது யுவதிகள் அணிகின்ற நவீன மோஸ்தர் அபாயாக்கள் ஹராமான ஆடையலங்காரமாகும். அவ்வாறே மறைக்கப்பட வேண்டிய உடற்பாகங்கள் வெளியே தெரியக் கூடிய வகையில் இளைஞர்கள் அணிகின்ற நீண்ட காற்சட்டையும் ஹராமானதே! இவற்றை அணிந்த நிலையில் ஒரு யுவதியோ அல்லது ஓர் இளைஞனோ கேட்கும் துஆ அங்கீகரிக்கப்படுமா? ஹராத்தை

(57 ஆம் பக்கம் பார்க்க)

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், அமீர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

# விசாலிப்பதே 'இஸ்லாம்' சுருங்குதலே 'குப்ர்'

மனிதர்களில் அதிகமானவர்கள்தங்களது உலகை விசாலமாக்கி உள்ளத்தைச் சுருக்கி வைத்திருக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களோதான் அனுபவித்த உலகை சுருக்கி வைத்திருந்த நிலையில் தனது உள்ளத்தை விசாலப்படுத்தியிருந்தார்கள்.

இவற்றுள் எது இஸ்லாம்?

அல்குர்ஆன் கூறுகிறது: "அல்லாஹ் ஒரு மனிதனுக்கு நேர்வழியைக் காட்ட விரும்பினால் அவனது உள்ளத்தை இஸ்லாத்தின்பக்கம்அவன்விசாலமாக்கி வைப்பான்." (6: 125)

இஸ்லாம் விசாலமானது. அதனை நோக்கி தானும் விரிந்து விசாலமடையும் உள்ளமே நேர்வழியைப் பெறத் தகுதியானது என்பதைத்தான் இந்த அல்குர்ஆன்வசனம் எடுத்துரைக்கிறது.

இதனை அற்புதமாக விளக்கும் இஸ்லாமாகி விட்டன என்று இந்த வசனம் கூறுகின்றது.

85ஆவது வசனம் கூறுகின்றது: "இஸ்லாம் அல்லாத ஒன்றைத் தனது மார்க்கமாக்கிக் கொள்ள விரும்புகின்றவன் மறுமையில் (பெரும்) நட்டவாளிகளில் ஒருவனாக இருப்பான். அவனிடமிருந்து (எந்த நட்ட ஈடும்) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது."

இஸ்லாத்தை இழந்தவன் மறுமையில் அனைத்தையும் இழந்தவனாக மாறுகின்றான். இழப்பின் பாரதூரம் அப்போதுதான் அவனுக்குப் புரிகிறது. தனதுள்ளம் எதனையும் பற்றிப் பிடித்துக் கொள்ளாமல் சுருங்கிப் போனதன் விளைவை அப்போது அவன் பார்க்கிறான். தனதுள்ளத்தை இஸ்லாத்தினால் நிரப்பி விரிவடையச்செய்வதற்குத்தவறிவிட்ட குற்றத்தை உணருகின்றான். உலகின் செல்வங்களால் உள்ளத்தை வளப்படுத்த முயன்ற அவன் அந்த முயற்சியில் தான் தோற்றுப் போனதை இப்போது நிதர்சனமாகக் காண்கின்றான்.

இந்த உண்மையை உணருகின்றபோது "பூமியளவு தங்கம் அத்தகைய ஒரு மனிதரிடமிருந்து அதனை அவன் (தனதிழப்பிற்கு) நட்ட ஈடாகக் கொடுத்த போதிலும் அது அவனிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது" என அதே அத்தியாயத்தின் 91 ஆவது வசனம் கூறுகின்றது.

பூமியளவு தங்கம் இருந்தால் அதனை அவன் நிச்சயமாகக் கொடுக்க முன்வருவான் என்பதையே இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது. உலகில் பூமியளவு செல்வம் சேர்த்து அதனால் தன்னை வளப்படுத்த விரும்பியவன்தான் அவன். எனினும், அந்த செல்வத்தால் செய்ய முடியாத வேலையை இஸ்லாத்தினால் செய்திருக்க



மற்றுமொரு குர்ஆனிய அணுகுமுறையை அத்தியாயம் ஆலு இம்ரானில் நாங்கள் பார்க்கலாம். அந்த அத்தியாயத்தின் 83 ஆவது வசனமும் 85 ஆவது வசனமும் 'இஸ்லாம்' பற்றி பேசுகின்றன. மத்தியிலுள்ள 84 ஆவது வசனம் முஸ்லிம்களைப் பற்றி பேசுகின்றது.

83 ஆம் வசனம் கூறுகின்றது: "அல்லாஹ்வின் மார்க்கமல்லாத வேறு ஒன்றை அவர்கள் விரும்புகின்றார்களா? வானங்களிலும் பூமியிலுமுள்ள அனைத்தும் விரும்பியோ வெறுத்தோ இஸ்லாமாகி விட்டன. அனைவரும் அவனிடமே (இறுதியில்) கொண்டு செல்லப்படுவார்கள்."

இஸ்லாம் என்பதன் ஒரு பொருள் 'கட்டுப்படுதல்' ஆகும். அந்தப் பொருளில் இஸ்லாம் பற்றிப் பேசியிருக்கிறது இந்த வசனம். அதாவது, வானம் பூமியிலுள்ள அனைத்துப் படைப்புகளும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதன் மூலம்

குப்ர் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டியவற்றை ஏற்க முடியாதளவு உள்ளம் சுருங்கிப் போவதையே குறிக்கின்றது. இதற்கு நேரெதிரானதே இஸ்லாம். ஏற்றுக் கொள்ள வேண்டிய அனைத்தையும் ஏற்குமளவு விரிந்து விசாலமடைவதே இஸ்லாம். இஸ்லாத்தை ஏற்ற முஸ்லிம்களும் இஸ்லாம் ஏற்றுக் கொண்ட எதனையும் ஏற்க முடியாத குறுகிய உள்ளம் படைத்தவர்களாக இருக்க மாட்டார்கள்.

முடியும். நான் செய்யத் தவறி விட்டேன். இஸ்லாத்தின் பெறுமதி இப்போது விளங்குகிறது என்பதை உணரும் தருணமே அது.

இவ்வாறு இஸ்லாம் பற்றி 83 மற்றும் 85 ஆவது வசனங்கள் பேசுகின்ற அதேநேரம் நடுவில் இருக்கும் 84 ஆவது வசனம் முஸ்லிம்கள் பற்றி என்ன சொல்கிறது என்பதைக் கவனியுங்கள்.

''நபியே! கூறுங்கள். நாங்கள் அல்லாஹ்வையும் (அவனிடமிருந்து) எங்களுக்கு இறக்கியருளப்பட்டவற்றையும் ஈமான் கொண்டோம். அத்துடன் இப்ராஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக், யஃகூப் மற்றும் யஃகூபின் வழித்தோன்றல்கள் ஆகியோர் மீது இறக்கியருளப்பட்டவற்றையும் ஈமான் கொண்டோம். மேலும் மூஸா, ஈஸா மற்றுமுள்ள நபிமார்களுக்கு அவர்களது இரட்சகனிடமிருந்து இறக்கியருளப்பட்டவற்றையும் ஈமான் கொண்டோம். இந்த நபிமார்களுக்கிடையே நாங்கள் எவ்வித வேற்றுமையும் காட்டுவதில்லை. இந்நிலையில் நாம் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுகின்ற முஸ்லிம்களாக இருக்கின்றோம்.''

அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுகின்ற முஸ்லிம்கள் மிகவும் விசாலமானவர்கள். அவர்கள் அனைத்து வேதங்களையும் ஈமான் கொள்பவர்கள்; அனைத்து நபிமார்களையும் கௌரவிப்பவர்கள்; நபிமார்களிடையே வேறுபாடு காட்டாதவர்கள். ஒரு நபியை உயர்த்தி ஒரு நபியைத் தாழ்த்துமளவு அவர்களது உள்ளங்கள் குறுகியவையல்ல. இந்த விசாலத் தன்மை ஏனைய நபிமார்களைப் பின்பற்றும் சமூகத்தவர்களிடையே இல்லாதிருக்கிறது. இந்த மனநிலை அவர்கள் மத்தியிலும் வரமுடியுமாக இருந்தால் உலக சமூகங்கள் நிம்மதியாக வாழும் ஒரு சூழ்நிலை ஏற்படலாம். எனினும், அது முஸ்லிம்களிடம் தான் இருக்கின்றது என்பதை நபியே! நீங்கள் கூறிவிடுங்கள் என்பதாக இந்த வசனம் அறிவுறுத்துகின்றது.

ஆக, இஸ்லாம் என்பது விசாலமானது. அதனை ஏற்ற முஸ்லிம்களும் விசாலமாகவே இருப்பார்கள் என்ற செய்தியைத்தான் ஆலு இம்ரானின் வசனங்கள் எடுத்துக் கூறுகின்றன.

எனினும், இந்த விசாலத்தன்மை இன்றைய முஸ்லிம்களிடம் இருக்கிறதா? அல்லது இஸ்லாத்தின் விசாலத்தை உள்வாங்க முடியாதளவு அவர்களது உள்ளங்கள் குறுகி விட்டனவா?

ஆம், அன்று இஸ்ராயீலின் சந்ததிகளது உள்ளங்கள் இது போன்று குறுகிவிட்ட செய்தியை தொடராக வருகின்ற 86 ஆவது வசனத்தில் அல்லாஹ் பிரஸ்தாபிக்கின்றான். அவர்கள் ஈமான் கொண்ட பின் நிராகரித்தார்கள் என அது பற்றி அந்த வசனம் கூறுகின்றது.

''இறைதூதர் உண்மையானவர் என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்களிடம் (அதற்கான) தெளிவான அத்தாட்சிகளும் வந்திருக்கின்றன. இந்நிலையில் ஈமான் கொண்ட பின்னர் நிராகரிப்பவர்களுக்கு அல்லாஹ் எங்ஙனம் நேர்வழியைக் காட்டுவான். அல்லாஹ் அநியாயம் இழைத்துக் கொண்ட சமூகத்திற்கு வழிகாட்டுவதில்லை.''

மதீனாவில் இருந்த யூதர்களின் நிலையை இந்த வசனம் விளக்குகின்றது. அவர்கள் ஏற்கனவே வேதம் பற்றிய அறிவைப் பெற்றவர்கள்... நபிமார்களைப் பற்றி அறிந்தவர்கள்... எனினும், அவர்களுடைய உள்ளங்கள் இறுதி நபியையும் அவர் கொண்டுவந்த வேதத்தையும் ஏற்க மறுத்தன. அவற்றை ஏற்குமளவு விசாலத்தன்மை இல்லாமலிருந்ததே அவர்களிடமிருந்த குப்ர் என்பதையும் இந்த வசனம் தெளிவுபடுத்துகின்றது. பின்னர் இந்தக் குப்ருக்கான தண்டனைகள், விளைவுகளைப் பற்றி தொடர்ந்து வரும் வசனங்கள் பிரஸ்தாபிக்கின்றன.

எனவே, குப்ர் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டியவற்றை ஏற்க முடியாதளவு உள்ளம் சுருங்கிப் போவதையே குறிக்கின்றது. இதற்கு நேரெதிரானதே இஸ்லாம். ஏற்றுக் கொள்ள வேண்டிய அனைத்தையும் ஏற்குமளவு விரிந்து விசாலமடைவதே இஸ்லாம். இஸ்லாத்தை ஏற்ற முஸ்லிம்களும் இஸ்லாம் ஏற்றுக் கொண்ட எதனையும் ஏற்க முடியாத குறுகிய உள்ளம் படைத்தவர்களாக இருக்க மாட்டார்கள்.

வேதத்தில் தங்களுக்கு சாதகமானவற்றை ஏற்றுக் கொண்டு மற்றும் சிலதை ஏற்காதிருப்பவர்களை குப்ரில் இருப்பதாகவே 2:85 ஆவது வசனமும் அடையாளப்படுத்துகிறது. அவர்களுக்கு உலகில் இழிவும் மறுமையில் கொடிய வேதனையும் இருப்பதாக அதே வசனம் எச்சரிக்கின்றது. அவர்கள் சிலதை ஈமான் கொண்டு சிலதை நிராகரிக்கும் பண்பினராக இருக்கின்றனர் என அந்த வசனம் கூறுகின்றது. அதே போன்று முஸ்லிம்களையும் அவர்களது விசாலத்தன்மையும் பற்றி பேசுகின்ற மற்றொரு தொகுதி வசனங்கள் அத்தியாயம் ஆலு இம்ரானின் 102 முதல் 107 வரை இடம்பெற்றிருக்கின்றன.

அந்த வசனங்கள் பேசுகின்ற செய்தியின் சுருக்கம் யாதெனில் ''நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்க வேண்டாம்'' என்ப

தாகும். அல்லாஹ்வை அஞ்சி முஸ்லிம்களாக வாழ்ந்து மரணிப்பதற்கு அவசியமான போதனைகளை அவ்வசனங்கள் தொடர்ந்தும் முன்வைக்கின்றன. அவற்றை பின்வருமாறு கூறலாம்:

01. அல்லாஹ்வின் கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; பிரிந்து விடாதீர்கள்.

02. நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் சமூகமாக இருங்கள். நேர்வழி கிடைத்த பின் பிரிந்து சென்றவர்களைப் போல் பிரிந்து விடாதீர்கள். அவர்களுக்கு மகத்தான தண்டனை இருக்கிறது.

முஸ்லிம்களாக வாழ்ந்து மரணிப்பதற்கு அவசியமான இந்தப் போதனைகளை மீறுபவர்களுக்குரிய தண்டனைகள் தொடர்ந்தும் அவ்வசனங்களில் வருகின்றன.

இந்தப் போதனைகளை மீறியோரின் முகங்கள் அன்றைய நாளில் கறுத்திருக்கும். அந்தக் கறுத்த முகத்தையுடையவர்களிடம் கேட்கப்படும் ''ஈமான் கொண்டதன் பின்னர் நீங்கள் குப்ரிற்குச் சென்றீர்களா? நிராகரித்து விட்டீர்களா?'' என்பதாக.

மேலேயுள்ள வசனங்களில் முஸ்லிம்களாக வாழ்ந்து மரணிப்பதற்கு மூன்று முக்கிய அடிப்படைகளை அல்லாஹ் சுட்டிக்காட்டியுள்ளான்.

01. அல்லாஹ்வின் கயிறான இஸ்லாத்தை (குர்ஆன் மற்றும் ஸுன்னாவை) பற்றிப் பிடித்தல்.

02. இஸ்லாமியப் பணியை செய்யும் சமூகமாக இருத்தல்.

03. பிரிந்து சின்னாபின்னப்படாதிருத்தல்.

இந்த மூன்றிலும் முகம் கறுக்கும் நிலை ஏற்படுவது மூன்றாவதில்தான். அதாவது, இஸ்லாம் என்ற கயிற்றைப் பற்றிப் பிடிக்கின்றபோதோ இஸ்லாமியப் பணியில் ஈடுபடுகின்ற போதோ அவர்களது முகங்கள் கறுப்பதில்லை. மாறாக, தங்களுக்குள் பிரிந்து விடுகின்ற நிலை ஏற்படுகின்றபோதே பிரிந்த ஒரு சாரார் மறு சாராரைப் பார்த்து முகம் கறுக்கிறார்கள். அவர்களது முகம் இருண்டு போவதற்கான காரணம் வேறு ஒன்றுமல்ல, தங்களது சகோதரர்களுக்கு இடமளிக்குமளவு அவர்களது உள்ளங்கள் விசாலிப்பதில்லை. சுருங்கிப்போன அவர்களது உள்ளங்கள் தங்களது சகோதரர்களை வெறுக்கவும் காணும்போது கறுக்கவும் பழகிவிடுகின்றன. அவ்வாறு உலகிலேயே கறுத்துப் போன முகங்களையுடையவர்கள் மறுமையிலும் கறுத்த முகங்களுடனேயே எழுப்பப்படுகின்றனர். அப்போது அவர்களிடம் கேட்கப்படுகின்ற கேள்வி,

''...ஈமான் கொண்டதன் பின் குப்ரிற்குச் சென்று விட்டீர்களா?... நிராகரித்து விட்டீர்களா?...'' என்பதாகும்.

பிளவுபட்டு, வெறுப்பை வளர்த்து, தங்களது உள்ளங்களை சுருக்கிக் கொண்டவர்களைப் பார்த்து அல்லாஹ் மறுமையில் கேட்கும் கேள்வி ''ஏன் பிரிந்தீர்கள்?'' என்பதல்ல. ''ஏன் நிராகரித்தீர்கள்?'' என்பதே.

இங்கு பிளவு ஒரு நிராகரிப்பாக சித்திரிக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். காரணம், பிளவு என்பது தனது சகோதரர்களை அல்லது அவர்களில் சிலரைத் தனது உள்ளத்திலிருந்து ஒருவர் வெளியேற்றுவதையே குறிக்கிறது. உள்ளம் சுருங்கும்போது இந்த வெளியேற்றம் இடம்பெறுகிறது. சுருங்கியதோர் உள்ளத்திலிருந்து இஸ்லாம் முற்றிலுமாக வெளியேறலாம் அல்லது இஸ்லாத்தின் அடிப்படையான அம்சங்களுள் ஒன்று வெளியேறலாம் அல்லது இஸ்லாத்தின் ஒரு பகுதி வெளியேறலாம். நாங்கள் இதுவரை பார்த்த குர்ஆனின் உதாரணங்கள் ஒவ்வொன்றும் சுருங்கிய உள்ளங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட பல அம்சங்களை சுட்டிக்காட்டுகின்றன.

அது ஒரு நபியாக இருக்கலாம் அல்லது ஒரு வேதமாக இருக்கலாம் அல்லது இஸ்லாத்தில் ஒன்றிணைந்த சகோதரர்களாக இருக்கலாம். இஸ்லாம் அங்கீகரிக்குமாறு கூறும் ஒன்றுக்கு இடம் தர முடியாதளவு உள்ளங்கள் சுருங்குவதும் வேறுபாடு காட்டி அவற்றை ஒதுக்குவதும் குப்ராக சித்திரிக்கப்படுகிறது. இது ''அல்லாஹ்வை நிராகரிக்கும் குப்ர்'' இற்கு நிகரானதா? இல்லையா? என்ற விவாதத்தில் நான் நுழையவில்லை. எனினும், ''பிளவுபட்டு வெறுப்பை வளர்த்து தங்களது உள்ளங்களிலிருந்து தங்களது சகோதரர்களை வெளியேற்றியவர்கள் ஈமான் கொண்டதற்குப் பின்னர் நிராகரித்தார்கள் என்று கூறி அதற்கான தண்டனையையும் சுவையுங்கள்'' என (3: 106) அல்லாஹ் எச்சரிப்பதை எப்படி நாம் புறக்கணிக்க முடியும்.

இன்று இஸ்லாத்தை நேசிப்பவர்கள், அதனைப் பிறருக்குப் போதிப்பவர்கள், தங்களைப் போன்றே அதனை நேசிக்கும்... போதிக்கும்... மற்றுமொரு சாராரை வெறுக்கின்றனர். தங்களது உள்ளங்களிலிருந்து வேறுபாடு காட்டி அவர்களை வெளியேற்றுகின்றனர். அவர்களுடன் பிளவுபட்ட மனப்பான்மையை வளர்த்துக் கொள்கின்றனர். பிளவுபடுவதற்கான காரணிகளைத் தேடித் தேடிப் பரப்புகின்றனர். அவர்கள் தேடுவதெல்லாம் வேறுபடுவதற்கும் விலகி நிற்பதற்குமான வழிகளைத்தான்... ஆராய்ச்சி செய்து அவற்றைத் தேடிக் கொண்டிருப்பவர்களாக அவர்கள் மாறியிருக்கின்றனர்.

'குப்ர்' என அல்லாஹ் வர்ணிக்கும் ஒன்றின்பால் இவ்வளவு ஆர்வத்துடனும் பரபரப்புடனும் பலர் விரைந்து செல்வதனைப் பார்த்து விட்டு அதனை உணர்த்தாமல் இருப்பது எங்ஙனம்? அவர்கள் அறியாமையில் இதனைச் செய்கிறார்களா? அல்லது இஸ்லாம் என்று நினைத்துக் கொண்டு இதனைச் செய்கிறார்களா? (56 ஆம் பக்கம் பார்க்க)



முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி,
மாதம்பை, E-mail: zackymfm@gmail.com

# துருக்கி இராணுவப் புரட்சி:

## மேற்குலகை ஜனநாயகப் பரீட்சைக்கு உட்படுத்த வேண்டும்!

''துருக்கியின் தோல்வியடைந்த இராணுவப் புரட்சி'' அல்லது ''மக்கள்புரட்சி'' என்ற இரு சொற்களைக் கொண்டு ஊடகங்கள் நிகழ்வை அழைக்கின்றன. காரணம், தேர்தலுக்கூடாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியொன்றை பதவி கவிழ்ப்பதற்கான இராணுவத்தின் முயற்சியை மக்கள் பலம் தோல்வியடையச் செய்தமையே. அரபுலகெங்கும் மக்கள் தமது நாடுகளின் சர்வாதிகார ஆட்சியாளர்களை பதவி விலகுக! என குரலெழுப்பும் வேளை 'தமது வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை இராணுவத்திற்கு அடகுவைக்க முடியாது என துருக்கிய மக்கள் வீதிக்கு வந்து போராடினார்கள். இரண்டே இரண்டு நிமிடங்கள் சீ.என்.என் துருக்கி அலைவரிசையில் ''உங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு வீதிக்கு வாருங்கள்'' என ஜனாதிபதி விடுத்த அழைப்பே இத்தனையும் நடந்து முடிவதற்கு பின்புலமாகும். அதாவது, துருக்கி அரசாங்கத்தின் ''ஜனநாயகம்'', ''ஸ்திரத்தன்மை'', ''சட்டபூர்வத்தன்மை'' என்பவற்றை மக்கள் உளப்பூர்வமாக அங்கீகரித்ததன் விளைவே, ஜனாதிபதி அர்துகானுடைய அழைப்பை ஒரே நிமிடத்தில் ஏற்று மக்கள் வீதிக்கு இறங்க தீர்மானித்தமைக்கான நியாயமாகும். இதே அழைப்பை அரபு மன்னர்கள் விடுத்திருந்தால் அல்லது எகிப்து, அல்ஜீரியா மற்றும் மொரித்தானிய இராணுவ ஆட்சியாளர்கள் விடுத்திருந்தால், தமது ஆட்சியாளர்களைப் பாதுகாக்க மக்கள் வீதிக்கு வந்திருக்க மாட்டார்கள். பல்லாயிரக்கணக்கான டொலர்கள் செலவளித்து தமது ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள சூழ்ச்சி வகுக்கும் உலகில், வெறும் ஐ போனின் ஐந்து நிமிட உரை ஜனாதிபதி அர்துகானுடைய ஆட்சியை பாதுகாத்திருக்கிறது என்பது துருக்கியின் ஜனநாயகத்திற்கும் மக்கள் பலத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக வரலாறு பதிந்து கொள்ள வேண்டும்.

சுவாரஷ்யமான அம்சம் என்னவென்றால், ஜனநாயகத்தின் காவலலர்களாக தம்மை நிறுத்திக் கொள்ளும் மேற்குலக ஊடகங்களும் ஆய்வாளர்களும் அரசியல்வாதிகளும் ''இராணுவப் புரட்சியை'' விவரணம் செய்த முறை ஜனநாயகத்தின் அடிப்படை விழுமியங்களில் இவர்களுக்கு சாணளவு நம்பிக்கையுண்டா? என வியக்குமளவுக்கு இரட்டை நிலைப்பாடுகளுடன் நடந்து கொண்டதாகும். ஜனநாயகம், சட்டவாட்சி, மக்கள் பலம் போன்ற ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளை அப்படியே மறந்துவிட்டு, ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது முழுக் குற்றத்தையும் பழிபோடும் நோக்கில் அவர்களது ஆய்வுகள், கருத்துக்கள் மற்றும் பத்திக் கட்டுரைகள் அமைந்திருந்தன. துருக்கியின் இராணுவப் புரட்சி மற்றும் அதற்கெதிரான மக்கள் புரட்சி என்பவற்றை எவ்வாறு மேற்குலக மையநீரோட்ட மீடியாக்களும் அரசாங்க பிரதிநிதிகளும் அணுகின என்பதனை கத்தார் பல்கலைக்கழக முதுநிலை பேராசிரியர் மஃஜூப் ஸுவைரி கூறும்போது ''ஒன்று அர்துகானின் சர்வதிகாரத்தை ஏற்க வேண்டும் அல்லது இராணுவத்தின் கிளர்ச்சியை சந்திக்க வேண்டும். இவை இரண்டுமே துருக்கி மக்களின் முன்னாலுள்ள இரு தெரிவுகளாகும் என்ற அடிப்படையில் துருக்கிய விவகாரங்களை மேற்குலகம் வடிவமைக்க முயல்கிறது. உண்மையில், இந்த இரண்டு தெரிவுகளிலும் மக்கள் தெரிவு

செய்த ஆட்சியாளரே அர்துகான் என்ற உண்மையை மறைக்க முற்படுகின்றன'' என்கிறார்.

இராணுவப் புரட்சியின் ஆரம்பத்தில் இங்கிலாந்தின் டெய்லி டெலிகிராப் பத்திரிகையின் டுவீட்டர் செய்தி, ''நாட்டினுடைய மதச்சார்பற்ற தன்மையின் பாதுகாவலராக இராணுவம் மீண்டுமொருமுறை தன்னை பிரகடனம் செய்திருக்கிறது'' என குறிப்பிட்டது. அதேபோன்று, டய்மஸ் ஒப் மோல்டா பத்திரிகை ''இராணுவப் புரட்சி வெற்றி பெறும். அதிகளவான ஜனரல்கள் ஆதரவு'' என செய்தி வெளியிட்டிருந்தது. ஸ்புட்னிக் நிவுஸ் பத்திரிகை ''இராணுவப் புரட்சியை மக்கள் ஆரவாரமாக கொண்டாடுகின்றனர்'' என ஊடக தர்மத்தை சற்றும் மதிக்காமல் அர்துகான் ஆதரவாளர்களது போட்டோக்களை பிரசுரித்தது. இங்கிலாந்தின் பிரபல டேய்லி பீஸ்ட் பத்திரிகை ''ஜெர்மனியில் தஞ்சம் புகுவதற்கு அரசாங்கம் மறுப்பு. தற்போது, இலண்டன் நகரை நோக்கி விரைவு'' என செய்தி வெளியிட்டது மட்டுமன்றி, அர்துகானுக்கு சார்பாக களத்தில் இறங்கிய பல கட்சிகளையும் சேர்ந்த ஜனநாயக விரும்பிகளை Sheep of Erdogen'' (அர்துகானின் ஆடுகள்) மற்றும் Islamist mobs (இஸ்லாமிய வாதக் கும்பல்கள்) என அடைமொழியிட்டு அழைத்தமையும்கூட, மேற்குலக ஊடகங்களது ஜனநாயகத்திற்கான வெற்று அர்ப்பணிப்பை கோடிட்டுக் காட்டுகின்றன. இவை இராணுவப் புரட்சி துவங்கப்பட்டு சில நிமிடங்களில் பிரபல்யம் பெற்ற பத்திரிகைகள் பிரசுரித்த செய்திகள். இதற்கப்பால், எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகளுடைய அரச பத்திரிகைகள் ''அர்துகானை வீழ்த்தியது இராணுவம்'' என ஆரவாரமான தலைப்பிட்டு செய்திகளை பிரசுரித்தன. ஒரே இரவிலேயே இரணுவப் புரட்சி ''மக்கள் புரட்சியாக'' பரிமாற்றம் பெற்றதும் அத்தனை பத்திரிகைகளையும் கிடப்பில் போட வேண்டிய நிலையேற்பட்டமையும் நோக்கத்தக்கது.

சரி, இராணுவப் புரட்சியை மக்கள் தமது நெஞ்சுரத்தினால் எதிர்கொண்ட பின்னரான சூழமைகளைப் பற்றிய அரசியல் நோக்குகளை முன்வைப்பதில் மேற்குலக மீடியாக்களும் அரசியல் தலைமைகளும் நேர்மையாக நடந்து கொண்டார்களா? என்ற விடயத்தை அவதானிக்கும்போது, அதன் ஆதிக்க அரசியலுக்கான கருவியே ''போலி ஜனநாயக கோஷம்'' என்ற உண்மை இன்னும் தெளிவாகிறது. இராணுவப் புரட்சியின் பின்னால் யார் இருந்தார்கள்? உண்மையில் உள்ரங்கத்தில் என்ன நடந்தது? என்ற தேடலில் ''முழு உலகமும் மூழ்கியிருந்தபோது, தோல்வியடைந்த இராணுவப் புரட்சி அர்துகானுடைய சர்வதிகாரத்தை வலுப்படுத்தும்'' மற்றும் ''இராணுவப் புரட்சியில் ஈடுபட்ட இராணுவ வீரர்களை மனிதநேயமற்ற முறையில் அரசாங்கம் நடத்துகிறது'' என முதலைக் கண்ணீரை வடித்ததை திசைதிருப்பும் நோக்குடன் மேற்குலக அரசியல் விமர்சகர்கள் விவாதித்தார்கள். குறிப்பாக, அரசியல் வியூகவியலாளர் (Political Strategist) என அழைக்கப்படும் அமெரிக்காவின் போர் வெறிபிடித்த Fox தொலைக்காட்சி சேவையின் அரசியல் விமர்சகர் ரோல்ப் பீடர் ''இஸ்லாமிய சர்வதிகாரத்திலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான கடைசி அவகாசமும் கைநழுவிச் சென்று விட்டது'' என தனது பத்தி கட்டுரையில் எழுதியிருந்தார். அதே போன்று, சர்வதேச புகழ் பெற்ற Foreign Policy பத்திரிகையில் ''அர்துகானின் சர்வதிகாரமே அவருக்கெதிரான புரட்சிக்கு காரணம்'' என ஆய்வாளர் மிச்சல் ரோபின் கூறுகிறார்.

அமெரிக்காவின் போர் வெறிபிடித்த Fox தொலைக்காட்சி சேவையின் அரசியல் விமர்சகர் ரோல்ப் பீடர் ''இஸ்லாமிய சர்வதிகாரத்திலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான கடைசி அவகாசமும் கைநழுவிச் சென்று விட்டது'' என தனது பத்தி கட்டுரையில் எழுதியிருந்தார். அதே போன்று, சர்வதேச புகழ் பெற்ற Foreign Policy பத்திரிகையில் ''அர்துகானின் சர்வதிகாரமே அவருக்கெதிரான புரட்சிக்கு காரணம்'' என ஆய்வாளர் மிச்சல் ரோபின் கூறுகிறார்.

இறுதியாக, இராணுவப் புரட்சியை மக்கள் வெற்றி கொண்ட இரு தினங்களில், BBC வெப்தளம் ''அர்துகான்: ஒரு மிலேச்சத்தனமான ஜனாதிபதி'' என ஆவணக் கட்டுரையொன்றை வெளியிட்டு தனது ஜனநாயக விழுமியங்களுக்காக போலி விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பித்தது.


இவ்வாறு, இராணுவப் புரட்சியின்போதும், அதனை மக்கள் வெற்றி கொண்ட பின்னரும் மேற்குலக ஆய்வாளர்களும் ஊடகங்களும் நடந்து கொண்ட முறை சில பல யதார்த்தங்களை தோலுரித்துக் காண்பிக்கின்றன. அதாவது, ஜனநாயகம், நல்லாட்சி விழுமியங்களின் அடிப்படையில் இஸ்லாமிய தனித்துவத்துடன் கூடிய பலமான தேசமொன்று எழுந்து வருவதனை மேற்குலக அதிகார பீடங்கள் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை. குறிப்பாக, சர்வதேச அதிகார பீடங்களுடன் போட்டி போடும், அவற்றுக்கு சவால் விடும் முஸ்லிம் அரசியல் தலைமைகளை மக்கள்தாம் தெரிவு செய்தாலும் ''அங்கீகரிக்க மாட்டோம்'' என்பதே துருக்கிய இராணுவப் புரட்சியை அணுகியதற்கூடாக மேற்குலக மைய நிலை மீடியாக்கள் சொல்லவரும் செய்தியாகும்.

மறுபுறம், முஸ்லிம் உலகில் நீதியான தேர்தலொன்றுக்

கூடாக தெரிவு செய்யப்பட்ட ஒரே ஜனாதிபதி அர்துகான் மட்டுமே. இந்தப் பின்புலத்தில், பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த அரபுலக சர்வதிகாரிகளுடன் பேசும்போது பயன்படுத்தும் கனிவான வார்த்தைகளாவது முறையாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியின் விவகாரத்தை அலசும்போது ஏன் மேற்குலக மீடியாக்களால் பயன்படுத்த முடியாது போனது? என டியுனீசிய அரசியல் விமர்சகர் சுமையா கன்னூஷி எழுப்பும் கேள்வி மிக நியாயமானதே.

தெளிவாகச் சொல்வதானால், அர்துகானுடனும் ஏ.கே.பி அரசாங்கத்துடனும் மேற்குலகிற்குள்ள பிரச்சினை ஒன்று தான். அதாவது, சர்வதேச அதிகார பீடங்களின் அநீதிகளுக்கு எதிராக அவர் குரல் கொடுக்கிறார் என்பது மட்டுமே. சர்வதேச பாதுகாப்பு சபையை நோக்கி ''உலகம் ஐந்து பேரை விட அகலமானது'' என அவர் கூறுகிறார். ''சர்வதேச சபைகளில் ஆபிரிக்காவுக்கான உரிய இடம் வழங்கப்படுவதில்லை. நீங்கள் மறைமுகமாக ஆபிரிக்காவை சுரண்டுகிறீர்கள்'' என ஆபிரிக்கா கண்டம் திட்டமிட்டு சர்வதேசஅரசியல் மேடைகளில் புறக்கணிக்கப்பட்டதற்கு எதிராக அர்துகான்கேள்வியெழுப்புகிறார். அதனோடிணைந்த வகையில், நவீனசிந்தனைகளான ஜனநாயகம், மனித உரிமைகள் கோட்பாடு, பொருளாதார அபிவிருத்தி போன்ற உயர் இலக்குகளை இஸ்லாமியத் தனித்துவங்களுடன் அடைந்து கொள்ள முடியும் என்ற முன்மாதிரி அரசியல் முறைமையொன்றை கோட்பாட்டுத் தளத்திலிருந்து செயற்பாட்டுத் தளத்திற்கு- பல்வேறு குறைகள் காணப்பட்ட போதிலும் - பரிமாற்றம் அடையச் செய்வதிலும் அதனை நோக்கி முஸ்லிம் உலகை அவர் அழைக்கிறார். ''மக்கள் பலம், ஜனநாயகம் என்றால் எங்களிடம் கற்றுக் கொள்ளுங்கள்'' என ஐரோப்பிய யூனியனுடைய பொருளாதார ஏகாதிபத்தியத்தை விமர்சனம் செய்கிறார். இவைதாம், அர்துகானுடனும், ஏ.கே.பி அரசாங்கத்துடனும் மேற்குலகிற்கு உள்ள கணக்கு வழக்குகளாகும்.

உண்மையில், சமீபத்திய அரசியல் காய் நகர்த்தல்களில் ''மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம்'' சார்ந்து சில விமர்சனங்கள் ஏ.கே.பி அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்பட்டன. ஆனால், அவ்விமர்சனங்களை துருக்கி எதிர்கொள்ளும் பிராந்திய அரசியல், சமூக மற்றும் பொருளாதாரரீதியான சவால்களை இணைத்து மதிப்பீடு செய்வதற்கு அவை தயாராக இல்லை. குறிப்பாக, குர்திஷ் பிரச்சினை, சிரிய சிவில் யுத்தம், குலான் அமைப்பின் நிழல் அரசு, ஐ.எஸ்.ஐ. எஸ். வன்முறைக் குழுக்களின் குண்டுத் தாக்குதல்கள் என்பன துருக்கியின் உள்நாட்டு ஸ்திரத்தன்மையையும் தேசியப் பாதுகாப்பையும் அச்சுறுத்தும் அளவு அபாயமானது. இத்தகைய பல்பரிமாண சவால்களுக்குள் துருக்கியும் அதன் அரசாங்கமும் சிக்கித் தவிப்பதற்கு மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் தொடர்பாக மேற்குலகின் இரட்டை நிலைப்பாடுகளே காரணம் என்பது தனியாக அலசப்பட வேண்டிய விடயம்.




இறுதியாக, ஆப்கான், ஈராக், எகிப்து மற்றும் பலஸ்தீன் என ஒன்றன் பின் ஒன்றாக மேற்குலகின் ஜனநாயக வேஷம் கிழிக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த வரிசையில் ''துருக்கி விவகாரம்'' அதன் மற்றோர் அத்தியாயம் என அழுத்தமாகக் கூறலாம். எனவேதான், ஜனநாயகத்தை நிலைநாட்டல் என வல்லரசு நாடுகளும் அதன் மீடியா கம்பனிகளும் முஸ்லிம் உலகில் மூன்று தசாப்த காலம் பல மில்லியன் டொலர்களை செலவிட்டிருக்கிறது. அத்தனை முயற்சிகளும் ''வன்முறைக் குழுக்களை'' ''தீவிரவாதத்தை'' மற்றும் ''தோல்வியடைந்த தேசங்களை'' மட்டுமே உருவாக்கியுள்ளன. மறுபுறம், ஒப்பீட்டளவில் ஜனநாயக கலாசாரத்தை சுவாசிக்கும் தேசம் துருக்கி மட்டுமே. ஆனால், அதனை ''ஜனநாயகமற்ற சர்வதிகார தேசம்'' என மேற்குலக அதிகாரபீடங்களும் மீடியா மாபியாக்களும் கூறுகின்றன. இந்த ''பார்வைக் கோளாறை'' சீர்படுத்துவதற்கு ஒரே தீர்வு 'West must face a democracy test'' என்கிறார் World bulleting இணையத்தளத்தின் பத்தி எழுத்தாளர் டெனிஸ் பர்ஸான். அதாவது, ஜனநாயகம் பற்றிய பரீட்சையொன்றை நடத்தி, அவர்கள் அதனைசரியாக விளங்கியுள்ளனரா? என மதிப்பீடு செய்வதே அந்தத் தீர்வு.

ஓர் அரிய சந்தர்ப்பம்
கண்ணில் வெள்ளை படர்தல்
நோய்க்கான சத்திர சிகிச்சை
(Cataract Surgery)
▲ கட்டணம் ரூபா 9500.00
▲ விஷேட வில்லை தேவைப்படின்
▲ கட்டணம் ரூபா 15000.00
இடம்: குவைத் வைத்தியசாலை.புத்தளம்
தொடர்புகளுக்கு: 0322266480, 0777272107, 0773171720

★தமிழில்: ஆஸிம் அலவி★



(கடந்த 15.07.2016 அன்று துருக்கியில் இடம்பெற்ற இராணுவ சதி முயற்சி தொடர்பாக துருக்கி அரசாங்கம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ ஊடக அறிக்கையே இது.)

# இராணுவ சதி முயற்சி: நடந்தது என்ன?

அமெரிக்காவின் பென்சில்வேனியாமாநிலத்தில்வசித்துவரும்பத்ஹுல்லா கூலன் என்பவரின் தலைமையில் இயங்கும் பயங்கரவாத அமைப்பான Fetullah Terrorise Organization (FETO) துருக்கிய இராணுவத்திலுள்ள அதன் அங்கத்தவர்களின் துணையுடன் ஒரு சதி முயற்சியை கடந்த ஜுலை 15 அன்றிரவு மேற்கொண்டது. 240 பேரை பலியெடுத்த இந்த சதி முயற்சி, துருக்கிய பொது மக்களினதும் மற்றும் அரச நிறுவனங்களினதும் முன்மாதிரிமிக்க எதிர்ப்பு நடவடிக்கையினால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

## FETO என்றால் என்ன?

கூலன் வழிபாட்டுக் குழு (Gulen Cult) என அழைக்கப்படும் FETO, பத்ஹுல்லாஹ் கூலன் என்பவரால் வழிநடத்தப்பட்டு வருகின்றது. மூடநம்பிக்கைகொண்ட அவரது சீடர்கள் அவர்தான் 'எதிர்பார்க்கப்பட்ட மஹ்தி' என நம்புகின்றனர். இக்குழு 1970 களில் கல்விச் சேவைகள் வழங்கும் ஓர் இயக்கமாக ஆரம்பித்தது.

கல்விப் பணியாற்றும் ஓர் இயக்கமாகவே FETO தன்னை வெளிக்காட்டிக் கொள்கிறது. அதன் ஊழியர்கள் ஓர் இறுக்கமான கட்டமைப்புக்குள் இருந்து இயங்கிவருவதோடு, வெளிநாடுகளில் தம்மை கல்விச் சேவகர்களாகவும் சமாதானத் தொண்டர்களாகவுமே இனங்காட்டிக் கொள்கின்றனர். இருப்பினும், இவ் இயக்கத்தின் கட்டமைப்பை நாம் அவதானிக்கும்போது, இவர்கள் தமது உண்மையான முகத்தை மறைத்து மிகப் பிரதானமான அரச நிறுவனங்களான இராணுவம், நீதித்துறை, சிவில் பாதுகாப்புத் துறை, புலனாய்வுத்துறை, சிவில் நிர்வாகத்துறை போன்றவற்றினுள் ஊடுருவுகின்றனர். இதற்காக இடதுசாரி, வலதுசாரி, தாராளவாதம் (Liberal) அல்லது பக்தியுள்ள முஸ்லிம் என்ற அடையாளங்களில் ஒன்றை தமது வசதிக்கேற்ப பொருத்திக் கொள்கின்றனர். நிலைமைக்கேற்ப முத்திரையொன்றைக் குத்திக் கொண்டு செயற்படும் இவர்களின் சேவை இயக்கம் Hizmet Movement என்ற பெயரிலேயே வெளிநாடுகளில் இயங்குகின்றன.

## FETO இன் குறிக்கோள்

கேந்திர முக்கியத்துவமிக்க ஸ்தாபனங்களைக் கைப்பற்றும் நோக்கோடு பாடசாலைகள், கல்வி-கலாசார, நிறுவனங்கள், தொழில்சார் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOS) முதலானவற்றில் வெளிப்படையாக செயற்படுவர். இவர்களது வழிகெட்ட நம்பிக்கைப்படி, இத்தகைய கைங்கரியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு மோசடி, ஏமாற்று, எத்தகைய சூழ்ச்சிகளையும் செய்வது ஆகுமானதாகும். மனிதர்களை இக்கட்டில் மாட்டிவிடல், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடல் அனைத்தும் அனுமதிக்கப்பட்டவையாகும். தமது இலக்கை எப்படியாவது அடைந்து கொள்வது இவற்றை விடப் புனிதமானது. தமது ''உலக இமாம்'' இன் சிந்தனைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் அமைய புதியதோர் உலகை ஒழுங்கமைக்கவே இவர்கள் பாடுபடுகின்றனர். பல்லாண்டு கால இரகசிய பயிற்சி மற்றும் கடுமையான கொள்கைத் திணிப்பு பயிற்சிகளின் பின் சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாதளவு அதியுயர் நிபுணத்துவமுள்ள விற்பன்னர்களாக மாறியுள்ளனர்.

FETO வின் அங்கத்தவர்கள் அதி உன்னத தியாகத்துடன் தமது எதிர்பார்க்கப்பட்ட மஹ்தியின் கட்டளைக்கு அடிபணிகின்றனர். அத்தோடு தம்மை தனித்துவமிக்க சிறப்புப் பொருந்திய மனிதர்கள் எனக் கருதுகின்றனர். இவர்கள் எந்த அணியுடனும் இணைந்து கொள்வார்கள். தமது அடையாளங்களை தேவைக்கேற்ப மாற்றிக் கொள்வார்கள். அவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட தயங்குவதில்லை. அவசியமெனில் கொலையும் செய்வார்கள்.

## FETO இதுவரை சாதித்தது என்ன?

குறிப்பாக கடந்த 10 வருடங்களில் இதில் அங்கத்துவம் பெற்றுள்ள நீதிபதிகள், அரச சட்டத்தரணிகள் மற்றும் சிவில் பாதுகாப்புத் துறையினர் ஓர் இரகசிய திட்டத்

துடன்செயற்பட்டு, தமதுதிட்டத்துடன் ஒத்துப் போகாத ஏராளமான இராணு வத்தினரையும், பொலிஸ்உத்தியோகத் தர்களையும் சிவில் உத்தியோகத்தர்க ளையும் போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்துசிறையில்தள்ளியும்வேறு வழிகளிலும் தண்டித்துள்ளனர்.

2012இல் நாட்டு நிர்வாகத்தை தம் மால்கைப்பற்ற முடியும் என்ற அவர்களது நம்பிக்கைமேலோங்கியது.அவ்வாண்டும் ஒரு சதி முயற்சியை முன்னகர்த்தினர். அதாவது, உளவுப் பிரிவுத் தலைவர் குர்திஷ் தீவிரவாதிகளுடன் இணைந்து சட்டத்துக்கு முரணான வகையில் செயற் படுவதாக குற்றஞ்சாட்டி அவரைக் கைதுசெய்ய முயன்றனர். இச்சதி முயற் சியின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அமைந்த இந்நிகழ்வு தோல்வியடைந் தது. அதன் பிறகு 2013 டிசம்பர் 17-25 வரை சோடிக்கப்பட்ட ஊழல் குற்றச் சாட்டுகளின் பேரில் அரசாங்கத்தின் முன்னணி உறுப்பினர்களை சட்ட விரோதமாகக் கைது செய்ய முயற்சி செய்தனர். அதுவும் தோல்வியிலேயே முடிவடைந்தது.

FETO சமாதானத்தை விரும்பும் மத ரீதியான ஓர் அமைப்பாக தன்னை அடையாளப்படுத்தி சமாதானம், கலந் துரையாடல் மற்றும் சகிப்புத்தன்மை போன்ற விழுமியங்களை தவறாகப் பயன்படுத்தி வருகிறது. இதனூடாக நாட்டின் பாதுகாப்பு, நீதித்துறை மற்றும் புலனாய்வுத்துறைஆகியவற்றில்இவர் கள் ஊடுருவுகின்றனர்.

## ஜூலை 15 அன்று நடந்தது என்ன?

இராணுவத்தினுள்பின்னிப்பிணைந் திருந்த FETO உறுப்பினர்கள் ஒரு புதுவிதமானசதிமுயற்சியைமேற்கொண்ட னர். கனரக யுத்த உபகரணங்களான யுத்த விமானம், யுத்த தாங்கிகள் மற்றும் ஹெலிகொப்டர்களைக் கொண்டு தாக் குதல் தொடுத்தனர். FETO வின் சதியை முறியடிக்க துணிந்து நின்ற பொது மக்களைகொலைசெய்தனர்.ஜனாதிபதி வாசஸ்தலம் மற்றும் பாராளுமன்றக் கட்டிடத்தின் மீது யுத்த விமானங்கள் தாக்குதல் நடத்தின. இஸ்தான்பூல், அன்காரா முதலான நகரங்களில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்மீது குண் டுத் தாக்குதல் நடத்தினர். ஜனாதிபதி ரஜப் தையிப் அர்துகானை கொலை செய்ய எடுத்த முயற்சியும் தோல்விய டைந்தது. இதன்போது 173 பொது மக்க ளும் 62 பொலிஸாரும் 5 இராணுவத்தின ரும் உயிரிழந்தனர். சுமார் 1491 பேர்காய மடைந்தனர்.

இந்தசதி முயற்சி வெற்றியளித்திருந் தால் ஆயிரக் கணக்கான பொது மக்கள் பலியாகியிருப்பார்கள். சுதந்திரமும் ஜனநாயகமும் கட்டுப்படுத்தப்பட்டு பத்ஹுல்லாஹ் கூலனின் வழிபிறழ்ந்த மத சிந்தனைகளின் அடிப்படையில் ஒரு சர்வாதிகார அமைப்பு கட்டியெழுப் பப்பட்டிருக்கும். இந்த நாசகார முயற்சியை சமூகத்திலுள்ள அனைத்து மக்களும்கட்சி, மதம், இனம், இயக்கம், சிந்தனைப் போக்கு அனைத்துக்கும் அப்பால் நின்று முறியடித்தனர். தொழி லாளர்கள், வர்த்தக அமைப்புக்கள், சமூக நிறுவனங்கள், ஊடகத் துறையி னர் என அனைவரும் ஓரணி திரண்டு சதிக்கெதிராக போராடினர்.

## FETO துருக்கிக்கு மாத்திரமா அச் சுறுத்தல்?

அரங்கேறிய சதி முயற்சியிலிருந்து வெளிச்சத்துக்குவரும் விடயம் யாதெனில், வழிபிறழ்ந்த ஒரு மத நம்பிக்கையின் அடிப்படையில் ஓர் இராணுவ சர்வா திகாரத்தையே FETO ஸ்தாபிக்க முயற் சிக்கிறது என்பதுதான். அதற்காக அவர் கள் எந்தவொரு சட்டவிரோத நடவடிக் கையிலும் ஈடுபடுவார்கள். 15 ஆம் திகதியன்று அரங்கேறிய சதி முயற்சி யின்போதும் பொது மக்களைக் கொன் றொழித்தாவது தமது இலக்கை அடை வதற்கே முழுமுயற்சியையும் மேற்கொண்டனர். இவர்களை சமாதா னத்தைப்பரப்பும்ஓர்அமைப்பாக கருது வது பொருத்தமற்றதாகும். ஆள்மா றாட்டம் செய்தல், சூழ்ச்சி செய்தல், இரகசியமாக இயங்குதல் முதலானவற்

**FETO சமாதானத்தை விரும்பும் மத ரீதியான ஓர் அமைப்பாக தன்னை அடையாளப்படுத்தி சமாதானம், கலந் துரையாடல் மற்றும் சகிப்புத்தன்மை போன்ற விழுமியங்களை தவறாகப் பயன்படுத்தி வருகிறது.**

றில் மிக நுணுக்கமான பயிற்சிகளைப் பெற்றுள்ளதால் இவர்களை இலகு வில் அடையாளம் காண முடியாதுள் ளது. தமது வழிகெட்ட மத நம்பிக்கை யின் அடிப்படையில் உருவான அதிகா ரத்தைக் கைப்பற்றும் இரகசியத் திட் டத்தை முன்னகர்த்தி வருகின்றனர். எனவே, இவ்வியக்கம் எந்த நாடுகளி லெல்லாம் இயங்கி வருகிறதோ அந்த நாடுகளுக்கும் மனித குலத்துக்கும் அச் சுறுத்தலாகவே அமையும்.


## செய்ய வேண்டியது என்ன?

FETO, Boko Haram, ISIS முதலான அமைப்புக்களுக்கு எதிராக முழு உல கும்ஓரணிதிரண்டு அவற்றை எதிர்த்துப் போராட வேண்டும். இவ் அமைப்புகள் அனைத்தும்தமதுவழிதவறியசிந்தனை களின் அடிப்படையிலேயே மார்க்கத் துக்கு வியாக்கியானம் வழங்குகின்றன.

இந்தசந்தர்ப்பத்தில்வெளிநாடுகளில் வசிக்கும் எமது பிரஜைகள், எமது சொந்த பந்தங்கள், எமது உறவுகள், வெளிநாடுகளிலுள்ள அமைப்புகள் மற்றும் ஜனநாயகத்தை மதிக்கும் மக்கள், நாட்டின் இறைமையையும் மனித உரி மைகளையும் சுதந்திரத்தையும் பாது காக்க எமக்கு வழங்கிய அனைத்து உத விகளையும் நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம்.

மேலும் நடந்தேறிய சதிமுயற்சியை நாம் மிகவும் வன்மையாக கண்டிப்ப தோடு, இதில் உயிர் நீத்த எமது வீரர்க ளாகிய பொது மக்கள், பொலிஸார் மற் றும் இராணுவத்தினருக்கு அல்லாஹ் தனது அருள்மாரியைச்சொரிய வேண்டு மெனவும் படுகாயமடைந்தோர் பூரண சுகம் பெறவும் பிரார்த்திக்கின்றோம்.

முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி,
மாதம்பை, E-mail: zackymfm@gmail.com



# ஸாகிர் நாயிக் குற்றச்சாட்டுக்கள்:

## பெரிய ஜனநாயகத்தை வழிநடத்தும் இன மேலாண்மைவாதம்!

தெற்காசியப் பிராந்தியத்தில் பொதுவாகவும் வங்காளத்தில் குறிப்பாகவும் நடைபெற்ற தீவிரவாத, கடும்போக்குவாத மற்றும் தற்கொலை குண்டுத் தாக்குதல்களுக்கு ஸாகிர் நாயிக்கின் உரைகளும் கருத்துக்களுமே காரணமாகும் என்றதொரு சர்ச்சை கிளப்பப்பட்டது. அதற்கு சான்றாக குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட்ட நபர்களின் தனிப்பட்ட பேஸ்புக் கணக்குகள் மற்றும் பிரத்தியேக ஆவணங்களில் ஸாகிர் நாயிக் மற்றும் அவரது உரைகள் காணப்பட்டதாக செய்திகள் பரப்பப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஸாகிர் நாயிக்கின் Peace TV யை தடைசெய்யுமாறு தீவிர மதவாதிகள் மற்றும் இந்துத்துவ சக்திகள் கோரிக்கை விடுத்தன. மதத் தீவிரவாதத்தைப் போதிக்கும் வேறு சிலர் ஸாகிர் நாயிக்கின் தலையைக் கொய்வதற்கு பணம் தரப்படும் எனவும் முஸ்லிம்களற்ற பாரதம் அமைப்போம் எனவும் பகிரங்கமாக அறிக்கை விட்டனர். இதன் பின்னர் தீவிரவாதம், கடும்போக்குவாதம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஊடகவியலாளர்களது குற்றச்சாட்டுகளுக்கு ஸாகிர் நாயிக் தெளிவாக பதிலளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இக்குறித்த சிக்கலில் ஸாகிர் நாயிக் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை இரண்டு வகையாக பிரித்து நோக்க முடியும். முதலாவது, தீவிரவாதம் மற்றும் வன்முறைச் சிந்தனை, கடும்போக்குவாதம் போன்றவற்றுக்கு ஸாகிர் நாயிக்கின் கருத்துக்கள் துணை செய்துள்ளன என்பதாகும். இரண்டாவது, ஸாகிர் நாயிக்கின் தஃவா அணுகுமுறைகள் பன்மைத்துவ இந்தியச் சூழலுக்கும் கலாசாரம் சார்ந்த பின்புலங்களைக் கொண்ட சமூக சூழலுக்கும் பொருத்தமானதல்ல என்பதாகும். இங்கு, இரண்டாவது வகையான விமர்சனங்களுக்குள் கட்டுரை நுழையவில்லை. மாறாக, முதலாவது வகை குற்றச்சாட்டுக்களையே கட்டுரை அலசுகிறது.

இந்த வகையில், இந்தியாவின் மதப் பாஸிச உணர்வுகள் அபாயகரமான எல்லையைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கின்றன என்ற உண்மையை ஸாகிர் நாயிக்கின் மீதான கெடுபிடிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஏனெனில், மதங்களுக்கு இடையிலான நம்பிக்கைக் கோட்பாடுகளை ஒப்பீட்டாய்வு செய்யும் தளத்தில் ஸாகிர் நாயிக் தொழிற்படுகிறார். அவர் இந்திய அரசின் பொது எஜன்டாவையோ அல்லது அரசாங்கத்தின் போக்குகளையோ விமர்சிக்கும் அழைப்பாளர் அல்ல. மேலும், இந்தியாவின் மதத் தீவிரவாத கட்சிகள், இயக்கங்களுக்கு எதிராக நேரடியாக தொழிற்பட்டவரும் அல்ல. இவ்வாறிருந்தபோதிலும் தீவிரவாதம், கடும்போக்குவாதம் மற்றும் ஸாகிர் நாயிக்கின் தலைக்கு இவ்வளவு இலட்சம் ரூபாய் என குரலெழுப்பும் அளவுக்கு இந்தியாவின் மதக்கடும்போக்குத் தன்மை அதிரித்துள்ளதனையே அது எடுத்துக் காட்டுகிறது. அதாவது, இந்திய முஸ்லிம்களின் எத்தகையதொரு மதப் பிரசாரத்தையும் சுதந்திரத்தையும் ஆர்.எஸ்.எஸ், பிஜேபி, விஷ்வ இந்து பர்ஸத் போன்ற மையநீரோட்ட அரசியல் மற்றும் சிவில்

இயக்கங்கள் ஏற்பதற்கு தயாராக இல்லை என்ற யதார்த்த நிலையை புலப்படுத்துகின்றன.

இந்திய முஸ்லிம்கள், ஏனைய சிறுபான்மைகள், தாழ்த்தப்பட்ட இனங்களுக்கு எதிரான இந்திய மதக் கடும்போக்கு முகாம்களின் நடவடிக்கைகள் ஸாகிர் நாயிக்கின் சம்பவத்துடன் எழுந்தவையல்ல. மாறாக, கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு தோற்றப்பாடாகும். உதாரணமாக, இந்திய-பாகிஸ்தான் பிரிவினை, காஷ்மீர் விவகாரம், குஜராத் படுகொலைகள், பாபர் மஸ்ஜித் தகர்ப்பு போன்றன இந்திய முஸ்லிம்களின் பொது உளவியலை இன்றும் உலுக்கிக் கொண்டிருக்கும் சம்பவங்களாகும். மட்டுமன்றி, இஸ்லாமிய சிவில் நிறுவனங்களை அச்சக் கண்கொண்டு அவதானித்தல், குண்டுத் தாக்குதல்களின்போது போலிக் குற்றச்சாட்டுக்களை சோடித்து முஸ்லிம் இளைஞர்களை ஓரங்கட்டுதல், முஸ்லிம் விவகாரத்துடன் தொடர்பான வழக்குகளை பல வருட காலங்கள் பிற்படுத்தல், சிறுபான்மை மத உரிமைகள் தொடர்பான சட்ட மூலங்களுக்கு எதிராக பிரசாரம் செய்தல், முஸ்லிம்களின் மதக் கடமைகளை நிறைவேற்ற விடாமல் நிந்தனை செய்தல் போன்றன சமீபகாலமாக அவதானிக்கப்படும் சில தீவிர இந்துத்துவசக்திகளின் கெடுபிடிகளாகும். இத்தகைய நீண்ட வரலாற்றின் பின்புலத்தில் ஸாகிர் நாயிக்கின் சம்பவம் ஒரு சிறிய அத்தியாயம் மட்டுமே.


ஆகவேதான், 1900 இற்கு பிற்பட்ட இந்தியமையநீரோட்ட அரசியலை ''தெளிவான இனவாத அரசியல்'' என அ. மார்க்ஸ் போன்ற இந்திய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது, இந்திய முஸ்லிம்களை சுற்றிவளைக்கப்பட்ட மனோநிலையில் *(Encircled Psychology)* அல்லது பதற்றமான மனோநிலையில் *(Tension situation)* வைத்துக் கொள்வதற்காக 1990 களுக்குப் பிறகு அதீத பிரயத்தனங்களை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் மதத்தை, இனத்தை அடிப்படையாக வைத்து இயங்கும் பெரும்பான்மைச் சமூகத்தின் சில சிவில் இயக்கங்களும் மேற்கொண்டுள்ளன என அவர் குறிப்பிடுகிறார். அதேபோன்று, கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர் பிரபல ஹாமித் தப்பாஷி, ''Great Democracy என வர்ணிக்கப்படும் இந்தியாவில் எப்போதும் இல்லாதளவுக்கு முஸ்லிம் சிறுபான்மை ஓரங்கட்டப்படுகிறது; நிந்திக்கப்படுகிறது. எனவே, Great என்ற அடைமொழியைக் கொண்டு இந்தியாவின் Democracy ஐ தொடர்ந்தும் அழைக்க முடியுமா?'' என கேள்வி எழுப்புகிறார். இவ்வாறு, ஸாகிர் நாயிக்கின் மீதான சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இந்தியாவின் அரச ஆதரவுடன் வழிநடத்தப்பட்டு வரும் புதிய இன மேலாண்மை கலாசாரத்தின் ஒரு பக்க விளைவு எனலாம்.

அதனோடிணைந்த வகையில், முஸ்லிம் சிறுபான்மையின் ''அடையாளங்கள்'' (Icons) மீது தாக்குதல் நடத்துதல், அதனை தேசிய அச்சுறுத்தலாகக் காட்டுதல் என்பன சர்வதேச அளவில் பரப்பப்படும் இஸ்லாமோபோபியா நிகழ்ச்சி நிரலின் பிரதான விடயதானமாகும். இந்திய இனமேலாண்மைவாத கட்சிகள், இயக்கங்கள் என்பன பாபர் மஸ்ஜித், காஷ்மீர் தீவிரவாதிகள், ஸாகிர் நாயிக் என அதே பேசுபொருளையே பின்பற்றி வருகின்றன. பொதுமக்களை முஸ்லிம் சிறுபான்மைக்கு எதிராக திரட்டுவதற்கும் இன உணர்வலையை மேலிருந்து செயற்கையாக மக்களது உள்ளங்களில் உருவாக்குவதற்கும் முஸ்லிம் சிறுபான்மை அடையாளங்கள் மீது வெறுப்பு அலைகளை கிளறி விடுவது இலகு வானவியூகமாகும். சில அரசியல் ஆய்வாளர்கள் அமெரிக்கா, ஜேர்மன், இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் தீவிரமாக எண்ணெய்யூற்றப்பட்டு போஷிக்கப்படும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை திட்டமிடுதல், செயற்படுத்தல் கட்டமைப்பில் ஸியோனிஸ, தீவிர கிறிஸ்தவ அமைப்புகளுடன் இந்திய இனமேலாண்மை கட்சிகளின் கிளைகளும் நாடுகடந்த பிரதமர் மோடியின் பிஜேபி கட்சியின் நண்பர்கள் குழுக்களும் நெருக்கமாக செயற்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

மேலும் தீவிர கலாசார பின்புலத்தைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் எவ்வாறு முஸ்லிம்கள் இனமேலாண்மை கடும்போக்குவாதத்தை எதிர்கொள்ள முடியும்? என்பதனை ஆராய்வதும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது, தாக்கப்படும் அடையாளங்களைப் பாதுகாத்தல், அது தொடர்பான சரியான விளக்கத்தை சமூகமயப்படுத்தல் என்பன மட்டுமே அகன்ற ஏகாதிபத்திய நலன்களின் அனுசரணையில் நடத்தப்படும் இஸ்லோமோபோபியாவிற்கு எதிரான நேரெதிர் செயற்பாடாக அமைய முடியாது என்பதே கலாசார ஆய்வாளர்களது அவதானமாகும். மாறாக, இன மேலாண்மைவாத சக்திகளின் இலக்குகளை முழுமையாக சரியாகப் புரிந்து அதற்கு தீர்வை முன்வைக்க வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர். உதாரணமாக, இன மேலாண்மைவாதிகள் ''தேசம்'' பற்றிய கருத்தாடலை இந்து மதசமூகங்

இந்தியாவின் மதப் பாஸிச உணர்வுகள் அபாயகரமான எல்லையைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கின்றன என்ற உண்மையை ஸாகிர் நாயிக்கின் மீதான கெடுபிடிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஏனெனில், மதங்களுக்கு இடையிலான நம்பிக்கைக் கோட்பாடுகளை ஒப்பீட்டாய்வு செய்யும் தளத்தில் ஸாகிர் நாயிக் தொழிற்படுகிறார். அவர் இந்திய அரசின் பொது எஜண்டாவையோ அல்லது அரசாங்கத்தின் போக்குகளையோ விமர்சிக்கும் அழைப்பாளர் அல்ல.

> **கொலம்பியா பல்கலைக் கழக பேராசிரியர் பிரபல ஹாமித் தப்பாஷி, "Great Democracy என வர்ணிக்கப்படும் இந்தியாவில் எப்போதும் இல்லாதளவுக்கு முஸ்லிம் சிறுபான்மை ஓரங்கட்டப்படுகிறது; நிந்திக்கப்படுகிறது. எனவே, Great என்ற அடை மொழியைக் கொண்டு இந்தியாவின் Democracy ஐ தொடர்ந்தும் அழைக்க முடியுமா?" என கேள்வி எழுப்புகிறார்.**



களுக்குமட்டுமேயுரியதாகவடிவமைக்கின்றனர். "இந்தியா என்பது இந்துக்களுக்கு மட்டுமே உரியது. முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு செல்லுங்கள்" என்பதே இந்திய இன மேலாண்மைவாதிகளின் வாதமாகும். "மக்காவா? இந்தியாவா? எதனை முஸ்லிம்கள் தெரிவு செய்யப் போகிறார்கள்?" போன்ற கேள்விகளுக்கு ஊடாக முஸ்லிம் சிறுபான்மையை அந்நியவர்களாகக் காட்சிப்படுத்தும் அணுகுமுறையே இனவாத சக்திகளின் கோட்பாட்டுத்தளம் ஆரம்பிக்கும் புள்ளியாகும். இதற்கு பன்மைத்துவம், கலாசார சுதந்திரம் மற்றும் ஜனநாயக விழுமியங்கள் போன்ற தளங்களில் இதர மனித உரிமைப் போராளிகளுடன் இணைந்த போராட்டமொன்றை இந்திய முஸ்லிம்கள் கொண்டு செல்ல வேண்டும் என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மட்டுமன்றி, முஸ்லிம்களுக்கு எதிராக அவிழ்த்து விடப்பட்டுள்ள மத நிந்தனை நிகழ்ச்சி நிரல்களின் பின்னால் இந்திய பொருளாதாரத்தை அடிமைப்படுத்தும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ சக்திகளின் உபாயங்களை மக்கள் மத்தியில் பேசுபொருளாக மாற்ற வேண்டும். உண்மையில், இது ஓர் இனத்திற்கு எதிராக வடிவமைக்கப்பட்டாலும், முழு இந்தியாவினதும் தேசிய நலன்களை நுணுக்கமாகப் பாதிக்கும் அளவுக்கு அது பரிணாமமடையக் கூடியது என்ற கருத்தை தோலுரித்துக் காட்ட வேண்டும். இறுதியாக, ஸாகிர் நாயக் தீவிரவாதத்தை அனுமதித்தாரா? இல்லையா? அவர் கடும்போக்கு சிந்தனைகளை பேசினாரா? இல்லையா? என்ற குறுகிய வினாக்களுக்கான பதிலை தேடல் என்ற வட்டத்துடன் மட்டுமே சுருக்கிக் கொள்ளாமல், இந்தியாவின் அகன்ற அரசியல், சமூக சூழமைவுடன், சர்வதேச இஸ்லாமோ போபியா போக்குகளுடன் தொடர்புபட்டதாக இணைத்து நோக்க வேண்டும். தீர்வுக்கான பார்வைகளும் நிலைப்பாடுகளும் பொது அபிப்பிராயங்களும் முழுமைத்துவப் பார்வையில் அமைய வேண்டும்.


## ஐந்து வருட சந்தாவில் அழகிய தருமம் அல்ஹஸனாத் வழங்கும் அரிய சந்தர்ப்பம்!

### புரவலர் சந்தாவில் இணைந்து கொள்ளுங்கள் நிலையான தர்மத்தின் பயன்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்

அல்ஹஸனாத் அதன் பொருளாதார ஸ்திரப்பாடு கருதி முதலீடு ஒன்றுக்கான நிதியீட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. அதன் ஒரு வழிமுறையாக ரூபா. 8000/- பெறுமதியான ஒரு தொகைப் புரவலர் சந்தாக்களுக்கான விண்ணப்பத்தைக் கோருகிறது.

**நிபந்தனைகள்**

- ஒரு புரவலர் சந்தா ஐந்து வருடங்களைக் கொண்டது.
- 5 வருடங்களுக்குமான சந்தா 8000.00 ரூபா மட்டுமே.
- 5 வருடங்களிலும் சந்தா விலையில் மாற்றங்கள் இல்லை.
- இலங்கை முகவரிக்கு மட்டுமே புரவலர் சந்தா பெறப்பட முடியும்

**புரவலர் சந்தாவினால் பயன்பெறுவோர் இலங்கையிலுள்ள....**

- உங்களது உறவினர்கள்
- நண்பர்கள்
- நீங்கள் விரும்பும் ஷரீஆ மற்றும் கல்வி நிறுவனங்கள்
- நூலகங்கள்
- மத்ரஸா மாணவர்கள்
- தேடலில் ஆர்வமுள்ள, வசதி குறைந்தவர்கள்
- அநாதை இல்லங்கள்
- அல்ஹஸனாத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நீங்கள் கருதுபவர்கள்

**தொடர்புகளுக்கு:**
சகோதரர் ஆர். அப்துல்லாஹ் அஸ்ஸாம்
TP: +94 777874984 Email:rabdullahazzam@gmail.com

# உம்மு ஸுலைம் பின்த் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹா)

## இஸ்லாத்தை வாழச் செய்யும் ஈமானிய சந்ததிகளை நோக்கி...

உம்மு ஸுலைம் பின்த் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த பெண்ணாவார். மதீனாவில் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களுள் இவரும் ஒருவர். உம்மு ஸுலைம் எனும் புனைப் பெயரால் வரலாற்றில் பிரபல்யம் அடைந்த இவரது உண்மையான பெயர் எது என்பதில் அறிஞர்கள் பாரிய அளவில் கருத்து வேறுபடுகின்றனர். ஸஹ்லா, மலீகா, ருமைலா, குமைஸா, ருமைஸா போன்ற பல பெயர்களால் இவர் அழைக்கப்படுகிறார்.

உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் முதலில் மாலிக் இப்னு அந்நள்ர் என்பவரை மணமுடித்திருந்தார். அவர் இஸ்லாத்தை ஏற்கவில்லை. உம்மு ஸுலைம் தன் கணவருக்கு இஸ்லாமிய அழைப்பு விடுக்க விடுக்க அவரும் அதிலிருந்து வெகுதூரமாக விலகியே சென்றார். பெருமையடித்து நிராகரித்த அந்த மனிதன் இஸ்லாத்துக் கெதிராகவே நின்று இறுதியில் சிரியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் அங்கேயே இணைவைப்பாளராக மரணித்து விட்டார்.

உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) தன் கணவர் மூலமாக அனஸ் இப்னு மாலிக் மற்றும் அல்பராஉ இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இரு ஆண் பிள்ளைகளைப் பெற்றார். உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) எந்தளவு புத்திக்கூர்மையுள்ள ஒரு தாயாகத் திகழ்ந்தாரெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவுக்கு இடம்பெயர்ந்தபோது பத்து வயதைக்கூட அடையாத தன் மைந்தர் அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை நபிகளாரிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தார். உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் இப்படிக் கூறினார்: ''அல்லாஹ்வின் தூதரே! என் மகன் அனஸ் உங்களுடைய பணியாளராக இருக்கட்டும். அல்லாஹ்வின் அருள் வேண்டி அவருக்கு துஆ செய்யுங்கள்.'' நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 'யா அல்லாஹ்! அவரது செல்வத்தையும் குழந்தைகளையும் அதிகரிக்கச் செய்து நீ அவருக்குக் கொடுப்பவை அனைத்திலும் அவருக்கு பரகத் செய்வாயாக!''' என்று பிரார்த்தித்தார்கள். (அல்புகாரி)

மற்றோர் அறிவிப்பில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பிரார்த்தனை இவ்வாறு அமைந்துள்ளது: 'யா அல்லாஹ்! அவரது செல்வத்தை அதிகரிக்கச் செய்வாயாக. அவருக்கு குழந்தைகளை அளிப்பாயாக. அவருடைய ஆயுளை நீடிக்கச்செய்வாயாக. மேலும் அவரை சுவர்க்கத்தில் நுழைவிப்பாயாக!''

அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்: ''நான் அவற்றில் இரண்டைப் பார்த்து விட்டேன். மூன்றாவதை எதிர்பார்த்திருக்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அதிகமான செல்வத்தைப் பெற்றுள்ளேன். எனது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நூறை எட்டியது.''
(ஸீரதுந் நபவிய்யா- இப்னு கஸீர்)

பிறிதோர் அறிவிப்பில் ''எனது திராட்சைத் தோட்டம் ஓர் ஆண்டில் இருமுறை விளைச்சலைத் தரும். மேலும் எனது சந்ததி 106 குழந்தைகளைக் கொண்டது'' என்று அவர் கூறுகிறார்.

அல்லாஹ்வின் தூதரிடம் பல வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தின் சுருக்கத்தை அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் விவரிக்கிறார்: ''நான் அல்லாஹ்வின் தூதருக்கு வீட்டிலும் பயணங்களின்போதும் பணிவிடை புரிந்துள்ளேன். அன்னார் என்றைக்காவது நான் செய்த ஒரு வேலையைப் பார்த்து 'ஏன் இதைச் செய்தீர்?' என்றோ நான் செய்யாத ஒரு வேலையை 'ஏன் நீர் இதனை செய்யவில்லை?' என்றோ கூறியதில்லை.''
(அல்புகாரி)

அகிலத்தின் அருட்கொடை அண்ணலின் வீட்டில் பணி புரிந்த அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு கிடைத்த ஆன்மிகப் பயிற்சிகளும் அருள்களும் அவர் வளர்த்துக்கொண்ட சன்மார்க்க அறிவும் சாதாரணமாக எடைபோட முடியுமானவை யல்ல. அந்நிலைக்கு அவரை உருவாக்கிய பெருமை அவரது தாயையே சாரும்.

உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் தனது அடுத்த புதல்வரான அல்பராஉ இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை மிகப் பெரிய போராளியாகப் பயிற்றுவித்து உருவாக்கினார். அவர் போர்க்களங்களில் நூற்றுக் கணக்கான எதிரிகளை வெட்டி வீழ்த்திய வீரராவார்.

முதல் கணவர் இறந்த பிறகு உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை கண்ணியமும் அந்தஸ்தும் மிக்க பலர் மணமுடிக்க விரும்பினர். ஏனெனில், அவருடைய நற்பண்புகளை மனிதர்கள் அறிந்திருந்தனர். அவ்வாறு அவரை மணக்க முன்வந்தவர்களுள் ஒருவர்தான் பிரபல

மான நபித் தோழரும் போர்க்களங்களில் நபிகளாரைப் பெரிதும் பாதுகாத்தவருமான அபூ தல்ஹா அல்அன்ஸாரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களாவார். ஆனால், அப்போது அபூதல்ஹா இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை. உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அபூதல்ஹா விடம் ''நான் இப்போது முஸ்லிமாக உள்ளேன். நீரோ நிராகரிப்பாளராக இருக்கிறீர். எனவே, நாம் திருமண பந்தத் தால் ஒன்றிணைய முடியாது. ஆனால், நீர் இஸ்லாத்தைத் தழுவினால் நான் அதனையே எனது மஹராகவும் ஆக்கிக் கொண்டு உம்மை மணப்பதில் பெருமகிழ்ச்சி அடைவேன்'' என்றார். அப்போது அபூதல்ஹா தான் இது பற்றி ஆழமாக சிந்தித்துப் பார்ப்பதாகக் கூறினார். பின்னர் அவர் இஸ்லாத் தில் நுழைந்தார். ஆனால், அவர் உம்மு ஸுலைம் (ரழியல் லாஹு அன்ஹா) அவர்களைத் திருமணம் முடிப்பதற்காக என்ற ஒரே நோக்கத்துடன் மாத்திரம் அவ்வாறு முஸ்லிமாக வும் இல்லை. தனக்கு மஹராக திர்ஹத்தையோ தீனாரையோ பெற்றுக் கொள்ள விரும்பாத உம்மு ஸுலைம் (ரழியல் லாஹு அன்ஹா) அபூதல்ஹா இஸ்லாத்தை ஏற்றுக் கொண் டதைதான் பூமியில் மிகப் பெறுமதியான மஹராகப் பெற்றுக் கொண்டதாகப் பெருமைப்படுவார்.

இந்தத் தம்பதியினருக்கு அபூ உமைர் (ரழியல்லாஹு அன்ஹு) என்ற குழந்தை பிறந்தது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இக்குழந்தையை நேசிப்ப வராகவும் அவரது வீட்டுக்குச் சென்று விளையாடுபவரா கவும் இருந்துள்ளார்கள். அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) ஒரு பயணத்திலிருந்தபோது இக்குழந்தை நோய் வாய்ப்பட்டு மரணித்து விட்டது. வீடு திரும்பிய அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) ''குழந்தை இப்போது எப்படி உள்ளது?'' என்று கேட்க உம்மு ஸுலைம் (ரழியல் லாஹு அன்ஹா) ''முன்னரை விட அது அமைதியாக உள்ளது'' என்று கூறினார். பின்னர் அறுசுவை உணவை தன் கணவருக் காகத் தயாரித்துப் பரிமாறிவிட்டு, தன்னை நன்கு அலங்கரித் துக் கொண்டு அன்றைய இரவை இருவரும் மகிழ்ச்சியாகக் கழித்தனர்.

காலையில் எழுந்தவுடன் உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர் களிடம் ''ஒருவர் தன் அண்டை வீட்டுக்காரரிடம் ஒரு பொருளை அமானிதமாக ஒப்படைத்து விட்டு பின்னர் அதனைத் திருப்பிக் கேட்டால் அவர் அதனை கொடுக்கா மல் மறுக்க முடியுமா?'' என்று கேட்டார். அதற்கவர் ''நிச்சய மாக மறுக்க முடியாது'' என்றார். அப்போது உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) ''அபூ தல்ஹாவே! அல்லாஹ் உமது குழந்தையின் ஆன்மாவைக் கைப்பற்றிக் கொண் டான்'' என்றார். அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) நடந்தவற்றை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் சென்று முறையிட்டபோது ''அல்லாஹ் உங்க ளது நேற்றைய இரவுக்காக அருள் புரிவானாக'' என்று பிரார்த்தித்தார்கள். உண்மையில் அன்றைய இரவு ஓர் அருள் பாலிக்கப்பட்ட இரவேயாகும்.

அவரது சந்ததிகளில் அறிஞர்களும் போராளிகளும் குர்ஆனை மனனம் செய்தவர்களும் அதிகமாக உருவானார்கள். உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் தீர்மானங்களும் முன்னெடுப்புக்களும் முயற்சிகளும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் இஸ்லாம் மார்க் கத்திற்கும் அவருடைய உள்ளத்திலிருந்த ஆழமான நேசத்தை எடுத்துக் காட்டுகிறது. உம்மு ஸுலைம் நபிகளாருடன் போராட்டக் களங்களிலும் பங்குபற்றி பணி புரிந்துள்வார்.

சிறிது காலத்தில் உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) கர்ப்பம் தரித்து ஓர் ஆண் குழந்தையை பெற்றெடுத்தார். அவ ருக்கு அப்துல்லாஹ் இப்னு அபூ தல்ஹா என்ற பெயரும் சூட்டப்பட்டது. அவரது சந்ததிகளில் அறிஞர்களும் போரா ளிகளும் குர்ஆனை மனனம் செய்தவர்களும் அதிகமாக உருவானார்கள்.

உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் தீர்மானங்களும் முன்னெடுப்புக்களும் முயற்சிகளும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் இஸ்லாம் மார்க் கத்திற்கும் அவருடைய உள்ளத்திலிருந்த ஆழமான நேசத்தை எடுத்துக் காட்டுகிறது. உம்மு ஸுலைம் நபிகளாருடன் போராட்டக் களங்களிலும் பங்குபற்றி பணி புரிந்துள்ளார்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கைபரில் ஸஃபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை மணமுடித்துக் கொண்டு திரும்பும் வழியில் ஸஃபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை தலைவாரி தயார்படுத் தியவர் உம்மு ஸுலைம் பின்த் மில்ஹான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களாவார். (இப்னு இஸ்ஹாக்)

அவ்வாறே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மாரியா என்ற அடிமைப் பெண்ணையும் அவரு டைய சகோதரியையும் உம்மு ஸுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களிடமே தங்க வைத்திருந்தார்கள். அங்கு சென்று அவர்களை சந்திக்கக் கூடியவராக நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இருந்துள்ளார்கள்.



# பாசத்தால் பண்படுத்துவோம்

கலாநிதி ஸமீர் யூனுஸ்
தமிழில் பர்ஹான் மன்சூர்

குழந்தை வளர்ப்பு சம்பந்தமான ஒரு பயிற்சிப் பட்டறையில் இடைவேளையின் போது எல்லோரும் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தோம். அப்போது அவ்விடத்திலிருந்த ஒரு மனிதர் ''நான் சிறுவனாக இருக்கும்போது எனது தந்தை எனக்கு நன்றாக அடிப்பார். என்னோடு கடுமையாக நடந்து கொள்வார். பாடசாலையில் ஆசிரியரும் அவ்வாறே கடுமையாக இருப்பார். அதன் காரணமாக நான் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தேன். அவ்வாறே நானும்இவற்றைபிரயோகித்து எனது பிள்ளைகளை கட்டுப்பாட்டுடன் வளர்க்கிறேன்'' என்று கூறினார்.

இது ஒரு சிறந்த வழிமுறையாக இருக்க முடியாது. இஸ்லாம் இவ்வாறு வழி காட்டவுமில்லை. சமூகத்தில் நிறையப் பேர் பிள்ளைகளுக்கு அடிப்பதை சிறந்த வழிமுறையாகக் கருதுகின்றனர்.

**கடின உள்ளங்கொண்ட பெற்றோருக்கு...**

உங்கள் குழந்தைகள் அல்லாஹ்வின் நிஃமத் என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். உலகில் ஒரு மனிதன் பெறும் அருட்களில் மிகப் பெரிய அருளே குழந்தைச் செல்வமாகும். இந்த அருளுக்காக பலர் தவமிருக்கிறார்கள். உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடியவர்கள் குழந்தைகள். ஒரு குழந்தையைப் பெறும் உன்னததருணத்தை இலகுவில் யாரும் மறந்து விட முடியாது. இவ்வுலக விமோசனத்துக்கு மாத்திரமன்றி, மறுமை வாழ்வுக்கும் பிள்ளைகள் அவசியப்படுகிறார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்: ''ஒரு மனிதன் மரணித்து விட்டால் 3 விடயங்கள் தவிர ஏனைய அனைத்தும் துண்டிக்கப்பட்டு விடும். அதில் ஒன்று அம்மனிதனுக்காக பிரார்த்தனை புரியக் கூடிய ஸாலிஹான குழந்தைகள்...''

> நபி யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) தனது மகனைப் பார்த்து ''எனதருமை மகனே! உனது கனவை உன் சகோதரர்களிடம் கூற வேண்டாம்'' எனச் சொன்னதை ஸூரா யூஸுப் சுட்டிக்காட்டுகிறது. அல்லாஹ்வின் அடியார் லுக்மான் தனது மகனிடம் ''எனதருமை மகனே! நீ தொழுகையை நிலை நாட்டி, நன்மையை ஏவி, தீமையை தடுப்பாயாக...'' என்று நீண்ட உபதேசம் செய்ததை ஸூரா லுக்மான் பேசுகிறது.

நாம் குழந்தைகளுடன் கடுமையாக நடந்து விட்டு குழந்தை எம்முடன் அன்பாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்க முடியாது. நாம் அல்லாஹ்வுக்கு மாறு செய்துவிட்டு எமது பிள்ளைகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஒரு தந்தை தனது ஆதங்கத்தை என்னிடம் இவ்வாறு வெளிப்படுத்தினார்:

''எனக்கொரு மகள் இருந்தாள். அவள் வைத்தியசாலையில் இயந்திரங்களுக்குள் சிக்கிக் கிடப்பதை பார்த்தபோது எனதுள்ளம் நின்று விடும் போலிருந்தது. எனக்கு உலகம் இருளாக இருந்தது. அவளது இதயம் மாத்திரமே துடித்துக் கொண்டிருந்தது. என் மகளின் அழகிய குரலை என்னால் கேட்க முடியவில்லை. இவ்வாறு நாட்கள் நகர்ந்தன. நான் வியாபார விடயமாக தூர இடங்களுக்குச் சென்றேன். சில நாட்கள் கழிந்து எனது மனைவியிடமிருந்து ஓர் அழைப்பு வந்தது.

அவரால் பேச முடியவில்லை அழுதார். எனதுள்ளம் என் மகளை நினைத்தது. என் மனைவியிடமிருந்து வார்த்தைகள்

வெளிவரவில்லை. வைத்தியர் ஒருவர் தொலைபேசியை வாங்கி 'இன்னாலில் லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்' என்றார். அவர் எனக்கு ஆறுதல் கூறினார். என் அருமை மகள் எனக்குக் கிடைத்த பெரும் செல்வம்; அவளால் நாங்கள் சந்தோஷப்பட்டோம். அவளது புன்னகை எம்மை மகிழ்வித்தது. அவளது மழலை மொழி எம்மைச்சிரிப் பூட்டியது. எல்லாமே முடிந்து விட்டது. நாளைமறுமையில் அல்லாஹ் அவளையும் என்னையும் சுவனத்தில் சேர்க்க வேண்டும். அவளை நான் நெஞ்சோடு அணைத்துக் கொள்ள வேண்டும்.''

### தந்தைமாருக்கான அல்குர்ஆனிய வழிகாட்டல்கள்

அன்போடும் பாசத்தோடும் தமது பிள்ளைகளை ''எனதருமை மகனே...'' என நபிமார்கள், நல்லடியார்கள் பேசிய பல வசனங்களை அல்குர்ஆன் கற்றுத் தருகிறது. நூஹ் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் தனது மகனை ''எனதருமை மகனே! நீ எங்களோடு வந்துவிடு; நிராகரிப்பாளர்களுடன் இருக்காதே'' எனக் கூறியதை ஸூரா ஹூத் குறிப்பிடுகிறது. நபி யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) தனது மகனைப் பார்த்து ''எனதருமை மகனே! உனது கனவை உன் சகோதரர்களிடம் கூற வேண்டாம்''எனச் சொன்னதை ஸூரா யூஸுப் சுட்டிக்காட்டுகிறது. அல்லாஹ்வின் அடியார்லுக்மான்தனது மகனிடம் ''எனதருமை மகனே! நீ தொழுகையை நிலைநாட்டி, நன்மையை ஏவி, தீமையை தடுப்பாயாக...'' என்று நீண்ட உபதேசம் செய்ததை ஸூரா லுக்மான் பேசுகிறது.

அதே போன்று நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) தனது மகன் இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அறுப்பது போன்று கனவு கண்டு அதை தனது மகனிடம் கூறிய நிகழ்வையும் அல்குர்ஆனிலே காணலாம். இவை வெறும் கதைகளல்ல. இவற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய நிறைய பாடங்களும் படிப்பினைகளுமுள்ளன. பெற்றோர்- பிள்ளை உறவு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு அல்குர்ஆனை விட அழகிய வழிகாட்டல்களை வேறு எங்கும் நாம் கண்டுவிட முடியாது.

நபிமார்கள், ரஸூல்மார்கள் அழகிய முன்மாதிரிகளை எமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். அல்லாஹ்வின் நேசத்துக்குரிய தூதர்களின் நாவிலிருந்து வெளியாகிய வார்த்தைகளை நாம் அவதானித்துப் பார்த்தால் அங்கு அன்பு, இரக்கம், பாசம் போன்றவற்றை கண்டு கொள்ள முடியும்.

இப்போது நாம் எமது பிள்ளைகளுடன் எவ்வாறு நடந்து கொள்கிறோம் என எம்மை நாமே ஒரு கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. எமது பிள்ளைகள் விடயத்தில் எமது நாவிலிருந்து எவ்வாறான வார்த்தைகள் வெளிப்படுகின்றன என்று நாம் சிந்திப்பதில்லை. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது பிள்ளைகளோடும் பேரப் பிள்ளைகளோடும் மிகவும் அன்பாக நடந்து கொண்டார்கள். அதே வழியில் ஸஹாபாக்கள் பயணித்தார்கள். நாமும் அதே முன்மாதிரிகளைப் பின்பற்றுவதற்கு வல்ல அல்லலாஹ் துணை புரிவானாக!

## நேரம்... கண்ணுக்குப் புலப்படாத ஓர் எண்ணற்ற அதிசயம்...

50 வருடங்களுக்கு முன் எல்லா இடங்களிலும் சலவை இயந்திரம் இருக்கவில்லை. டீ.வி இருக்கவில்லை. கம்பியூட்டர் வசதிகள் இருக்கவில்லை. கார் வசதிகள் இருக்கவில்லை. மொத்தத்தில் மனிதனின் தேவைகளை விரைவாக செய்யக் கூடிய சாதனங்கள் இருக்கவில்லை. ஆனால், அப்போது அவனுக்கு அதிகமான நேரம் இருந்தது.

அதேபோல் நகரங்களில் நேரத்தின் வேகம், கிராமங்களை விட அதிகமாக இருக்கும்.

அதே வினாடி... அதே நிமிடம்... அதே மணி... அதே கடிகாரம்...

எப்படி இது சாத்தியம்?

யாழ்ப்பாணத்தில் நகரும் நேரத்தின் வேகம், இக்கிரிகொல்லாவையில் நகரும் நேரத்தின் வேகத்தை விட அதிகமாக இருந்ததையும் கொழும்பில் நேரத்துக்கு உள்ள பரக்கத், லண்டனில் நேரத்துக்கு உள்ள பரக்கத்தை விட அதிகமாக உள்ளதையும் கண்முன்னே கண்டு அதிசயித்து இருக்கிறேன். வேளைப் பளு காரணமாக இருக்கலாம் என்று சில வேளைகளில் எண்ணியதுண்டு. காலை முதல் இரவு வரை ஓய்வு நாளில் ஒரு வேலையும் செய்யாமல் இருந்தபோதுதான் வேளைப் பளுவில் எதுவுமே இல்லை. நமது கண்ணுக்கு தெரியாத ஓர் அதிசயம் நேரத்தில் இருப்பதை உணர முடிந்தது.

அரைமணி நேரத்தில் சலவை இயந்திரம் துணிகளை துவைக்கிறது. கைகளால் துணிகளை துவைக்கும்போது முன்னர் ஒரு சில மணி நேரங்கள் எடுக்கும். கால்நடையாக பிரயாணம் செய்த போது முன்னர் பல மணிநேரங்கள் எடுத்தன. இப்போது வாகனங்களில் பிரயாணிக்கின்றபோது சில நிமிடங்கள் மாத்திரமே எடுக்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு செயற்பாடும் முன்னைய காலங்களில் அதிக நேரத்தை எடுத்த போதும் மக்களுக்கு அதிக நேரம் கிடைத்தது. நேரத்தின் வேகம் குறைவாக இருந்தது.

முன்னர் செய்த அதே வேலைகளை இப்போதெல்லாம் குறைந்த நேரத்தில் செய்யும் நிலையில் அதிக ஓய்வு நேரம் கிடைத்திருக்க வேண்டுமே!


ஆனால், யாரைப் பார்த்தாலும் 'நேரம் இல்லை' என்ற முணுமுணுப்புத்தான்... நேரத்தில் பரக்கத் இல்லாமல் போய் விட்டது.

பல கோடிகள் உழைப்பவன் வாழ்வில் இருக்காத பரக்கத் பல ரூபாய்களை உழைப்பவன் வாழ்க்கையில் இருப்பது போன்ற கண்ணுக்கு எட்டாத ஒன்றுதான் அதிசயமான நேரம் மீதான பரக்கத்...

''மறுமை நெருங்குகின்றபோது நேரம் சுருங்கும். ஒரு வருடம் ஒரு மாதம் போன்றும் ஒரு மாதம் ஒரு நாள் போன்றும் ஒரு நாள் ஒரு மணி போன்றும் ஒரு மணி நேரம் எரிகின்ற இலை போன்றும் இருக்கும்'' என்று கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியிருப்பது மறுமையை நோக்கி நாம் செல்வதை உணர்த்துகிறது.

★ முஹம்மது ராஜி ★

# பிரிய பிரியாவிடை கொடுத்தோர்



இறை நேசராக
இபாதத்தாளிகளாக
போன வருடம் போல்
இவ்வருடமும் ஒன்றிணைந்தீர்!

முப்பது நாட்கள் நோன்பிருந்தீர்
முறையாக தொழுது நின்றீர்
நடுநிசி தொழுகையென்றும்
நீண்ட இராத் தொழுகையென்றும்...

கருணையாளன் அருளை வேண்டி
கால் கடுக்க வணக்கம் செய்தீர்
தராவீஹ் தொழுகையிலும்
தஹஜ்ஜுத் தொழுகையிலும்
இணையற்ற அல்லாஹ்விடம்
இறைஞ்சி வேண்டி தௌபா செய்தீர்
இபாதத்துக்கள் குறைந்திடாது
இலக்கு வைத்து நிறைவு செய்தீர்
ஷவ்வால் பிறை தென்படவே
சங்கை நோன்புக்கு விடைகொடுத்து
புத்தாடைகள் அணிந்து
பொலிவுடனே பெருநாள் ஏற்றீர்!

தோளோடு தோள் இணைய தேம்பி
முகமன் கூறி
கையசைத்து கலைந்து சென்றீர்
அடுத்த ரமழான் வரை
அல்லாஹ்வின் மாளிகைக்கு விடை
கொடுத்து...

இராணி பௌசியா
கல்லளை


# அத்துமீறும் இராணுவ வீரனுக்கு...

இனியும் இந்த பூமியில் கருகிவிழ
எந்தவொரு இதழும்
எஞ்சவில்லை.
எம் சோகங்களை சொல்லியழ
துளிக்கண்ணீரும் இல்லை

அழகின் அரியாசன பூமி இன்று
அகங்காரத்தின் அக்கிரமத்தில்
அழுகிக் கொண்டிருக்கிறது
நள்ளிரவில் வீடு புகுந்து என்னை எட்டியுதைத்து
நெற்றியில் சுட்டு
எமது தேசப்பற்றை பரிசோதிக்கிறாய் நீ..!

அழக்கூட அனுமதியற்ற அதிகார கவ்வலில்
ஆர்ப்பாட்டம் செய்ய மட்டும் நீ
விட்டுவிடுவாயா...?
எமது இருவிழிகளையும் இறப்பர் குண்டுகளால்
துளைத்து

இருட்டு வாழ்வில் மொத்தமாக மூழ்கடித்துவிட்டு
மதச் சார்பற்ற நாடு என மார்தட்டிக் கொள்கிறாய்!
சுட்டு வீழ்த்தப்பட்ட எமது சடலங்களின் மீது
ஏறி நின்று இறுமாப்புடன் தேசிய கீதம் பாடச் சொல்லி
ஆணையிடுகிறாய்!
காஷ்மீரின் போராட்டம் அற்ப வரிச் சலுகை



ளுக்காகவல்ல
அகம்பாவத்துடன் அடுக்களைவரை அத்துமீறும்
உன்னை எதிர்த்து

பள்ளி செல்லும் பாலகனும்
பாடசாலையிலிருந்து திரும்பும் தங்கையும்
முழுமையாக திரும்பி வர வேண்டும் என்கிற
அடிப்படை உரிமைக்காக
எழுபது வருட சிறைவாழ்வின் இந்த இரத்த இரைச்சல்
இனியும் வேண்டாம் என்பதற்காக!

இப்போது எம் விலாக்களை உடைத்து இந்த
போராட்டத்தை நீ முடக்கலாம்
ஆனாலும், காஷ்மீரிகளின் கழுத்தில் மாட்டப்பட்டுள்ள
அனல் சங்கிலிகள் அகற்றப்படும் வரை
இந்தப் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்...!

நிஸ்மிஹார் நஸீர் (நளீமி)
உடத்தலவின்ன




புதுப் புது நாகரிகங்கள்
வேகமாய் வளர்ந்து
வேகமாய் வீழ்ந்து
ஒய்வெடுத்துக் கொண்ட
புவிப் பந்தின் மத்தியில்
உருவெடுத்துயின்னும்
ஓய்வில்லாது ஓயாது போராடி
வளர்ந்து வீழ்ந்து கொண்டிருக்கும்
ஒரு நாகரிகமிருப்பதை
யாரறிவீர்?

வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்ட
உலகையே ஒளிரவிட்ட அந்த
ஓயாத நாகரிக வரலாறுகளை
யூப்ரடீஸ்- டைகரீஸ்
நதிக் கரைகளில்
கரையவிட்டதை யாரறிவீர்?

கருவிழிகளுக்குள் காரிருளாய்
காட்சியாக்கப்படும் நாகரிகமதற்குள்தான்
ஒளிவிளக்குகள் புதைந்திருக்கின்றன
என்பதை யாரறிவீர்?

போர்முரசு கொட்டியவன்
போராளியானபோது
எதிர்முரசு கொட்டியவன் இங்கு
தீவிரவாதியானான்!

சாபசியோநீசம் கூட
சுதந்திரத்தை சுவாசித்த
அந்த நாகரிகம்
துரோகத்தால் வீழ்த்தப்பட்டபோது
ஸ்தான்பூல் கட்டிட கோபுரங்களும்
கண்ணீர் விட்டழுததற்கு
கதிரவனும் நிலவும்
மாத்திரமேதான்
மிஞ்சிப்போன சாட்சியங்கள்!

**ஜே.எம். முபாரிஸ்- உலப்பனை**

# குர்ஆனே!

அழகான இயற்கையில்
உன்னுடன் அதிகமாக
அளவளாவிட வேண்டும் இவளுக்கு...

மகிழ்ச்சியான நேரங்களில்
உன்னை முத்தமிட்டு
கொண்டாட வேண்டும் இவளுக்கு...

மனம் தளரும் பொழுதுகளில்
உன்னை நெஞ்சோடு
அணைத்துக் கொள்ள வேண்டும் இவளுக்கு...


பெருமையின் சிகரங்களையும்
புகழ்களின் உயரங்களையும்
நான் தொடும் பொழுதுகளில்
உன் வசனங்களோடு நெற்றி
ஸஜதாவில் விழ வேண்டும் இவளுக்கு...

தொடரும் துயரங்களில்
உன் தோள்களில்
தஞ்சமாகிட வேண்டும் இவளுக்கு...

இப்படி எப்போதும்
நீயே வேண்டும் இவளுக்கு
எந்நேரங்களிலும்!

உன்னைக் காதலிக்கும்
உண்மை இதயத்தின்
அதிகபட்ச எதிர்ப்பார்ப்பு
குர்ஆனே!
பரிந்துரை செய்திடு
நிழலில்லா மஹ்ஷர் வெளியில்
எனக்காக!

**ஹுமதா ஏ. கப்பார்- மாவனல்லை**



# இளகும் கற்களும் இறுகிய உள்ளங்களும்


இஸட்.ஏ.எம். பவாஸ்,
சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழகம், மலேசியா

பனூ இஸ்ரவேலர்கள் மனித வரலாற்றில் தோன்றிய ஒரு மிகப் பெரிய உம்மத்தாகும். அவர்கள் அறிவில் உயர்ந்த நிலையில் இருந்தார்கள். ஆனால், அவர்களது உள்ளத்தில் இறையுணர்வு இருக்கவில்லை. பல அத்தாட்சிகளை ஒன்றன் பின் ஒன்றாகப் பார்த்த பின்னரும் அவர்களது உள்ளங்கள் நெகிழ்ந்து கொடுக்கவில்லை. அவர்களைப் பாதுகாத்து ஈடேற்ற வேண்டிய அறிவு அவர்களுக்குப் பயனளிக்கவில்லை. ஏனெனில் அறிவு, எது சரி? எது பிழை? என்று மனிதனுக்குப் பிரித்து வேறுபடுத்திக் காட்டும். ஆனால், மனிதனது தீர்மானங்கள் உள்ளத்திலிருந்தே ஊற்றெடுக்கின்றன. உள்ளத்தை அவர்கள் பெற்றிருந்த அறிவால் பயன்படுத்தி பலப்படுத்தியிருந்தால் அவர்களது தீர்மானங்கள் நன்மையின் பக்கம் சாய்ந்ததாகவே இருந்திருக்கும்.

பனூ இஸ்ரவேலர்களது நிலைப்பாட்டை அல்லாஹ் இப்படி விவரிக்கிறான்: ''இதன் பின்னரும் உங்கள் உள்ளங்கள் கற்பாறை போன்று அல்லது அதை விடக் கடினமாக இறுகி விட்டன. ஏனெனில், நிச்சயமாக சில கற்பாறைகளில் ஆறுகள் பீறிட்டு வருவதுண்டு. இன்னும் அவற்றில் சில பிளந்து அதனால் தண்ணீர் வெளியேறுவதும் உண்டு. அல்லாஹ்வின் அச்சத்தால் உருண்டு விழும் கற்பாறைகளும் அவற்றில் உள்ளன.'' (2: 74)

அல்குர்ஆனில் நிறைய உவமானங்கள் உள்ளன. இந்த வசனத்தில் மூன்று வகையான உள்ளங்களை அல்லாஹ் மூன்று வகையான கற்களுடன் ஒப்பிடுகிறான். நீண்ட காலம் ஆகியும்கூட பனூ இஸ்ரவேலர்களின் உள்ளங்கள் அறிவுரைகளை ஏற்க மறுத்து இறுகிப்போய் விட்டன. இத்தனைக்கும் அவர்கள் ஏராளமான சான்றுகளையும் அற்புதங்களையும் நேரில் பார்த்து விட்டனர்.

அவர்களின் உள்ளங்கள் இளக வைப்பதற்கு வாய்ப்பே இல்லாத பாறைகளைப் போன்று அல்லது பாறைகளை விடவும் கடினமாக இறுகி விட்டன. ஏனெனில், சில பாறைகளிலிருந்து நீரூற்றுக்கள் ஆறுகளாகப் பெருக்கெடுத்து ஓடுகின்றன. சில பாறைகள் வெடித்துப் பிளந்து அவற்றிலிருந்து நீர் பெருக்கெடுத்து ஓடா விட்டாலும் ஓரளவுக்கு வழிவதுண்டு. சில பாறைகள் அல்லாஹ்வின் மீதான அச்சத்தால் மலை உச்சியிலிருந்து உருண்டு விழுவதுண்டு.



முதல் இரண்டு வகைக் கற்களிலும் தண்ணீர் பற்றி குறிப்பிடப்படுகிறது. அவை நெகிழ்ந்து கொடுக்கின்ற நல்லுணர்ச்சி பெறுகின்ற வஹியின் அதிர்வுகளால் தாக்கம் பெறுகின்ற உள்ளங்களாகும். நீரூற்றுக்கள் பெருக்கெடுத்து ஓடுவது போல் அல்லது கற்பாறைகள் இரண்டாகப் பிளந்து நீர் வழிந்து ஓடுவது போல் அவரவர் இறை நம்பிக்கைக்கேற்ப உள்ளங்கள் வேறுபடுகின்றன. ஆனால், மூன்றாவது வகைக் கற்பாறையில் தண்ணீர் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அவை இறை நம்பிக்கையே அற்ற உள்ளங்களாகும்.

அல்லாஹ் கூறுகின்ற இந்த உவமானம் பனூ இஸ்ரவேலர்களுக்கு பரிச்சயம் இல்லாத ஒன்றல்ல. அவர்கள் தாகித்திருந்த வேளையில் கற்பாறையிலிருந்து நீரூற்றுக்கள் பீறிட்டதை கண்கூடாகப் பார்த்தார்கள். ''மூஸா தன் சமூகத்திற்காக தண்ணீர் புகட்ட வேண்டியபோது 'உமது கைத்தடியால் இப்பாறையில் அடிப்பீராக' எனக் கூறினோம். அவர் அடித்ததும் உடனே பன்னிரெண்டு ஊற்றுக்கள் அதிலிருந்து பீறிட்டன.'' (2: 60) அவ்வாறே அல்லாஹ் தன்னுடைய மகத்துவத்தை மலை மீது அனுப்பியபோது அந்த மலை வெடித்துச் சிதறுவதையும் அவர்கள் கண்டார்கள். (பார்க்க- 7: 143)

அல்லாஹ்வை அஞ்சுவதற்கான உணர்ச்சி மலைகளுக்கு இருக்கவே

செய்கிறது. அல்லாஹ் கூறுகிறான்:

''நாம் இந்தக் குர்ஆனை ஒரு மலையின் மீது இறக்கியிருந்தால் அல்லாஹ்வின் அச்சத்தினால் அது நடுங்கிப் பிளந்து விடுவதை நபியே நீர் காண்பீர். மனிதர்கள் சிந்திக்கும் பொருட்டு இவ்வுதாரணங்களை அவர்களுக்கு நாம் கூறுகிறோம்.'' (59: 21)

பின்வரும் ஹதீஸ்களை நோட்டமிட்டாலும் கற்பாறைகளும் மலைகளும் ஏதோ ஒரு வகையான உணர்வுகளைக் கொண்டவையாகவே நமக்குத் தோன்றுகின்றன. ''இந்த உஹுத் மலை நம்மை நேசிக்கிறது. நாமும் அதனை நேசிக்கிறோம்.''(அல்புகாரி)

''நான் மக்காவிலுள்ள ஒரு கல்லை நன்கறிவேன். நான் நபியாக அனுப்பப்படுவதற்கு முன்பே அக்கல் எனக்கு ஸலாம் சொல்லிக் கொண்டிருந்தது. அதனை நான் இப்போதும் அறிவேன்.'' (ஸஹீஹு முஸ்லிம்)

''ஹஜருல் அஸ்வத் எனும் கஃபாவிலிருக்கும் கறுப்புக் கல்லை நல்லெண்ணத்தோடு முத்தமிட்டவருக்கு அந்தக் கல் மறுமை நாளில் சாதகமாக சாட்சி கூறும்.''
(இப்னு மாஜா, அத்திர்மிதி- ஹஸன்)

மேற்கூறிய 2: 74 ஆவது வசனத்தில் ''கற்பாறை போன்று அல்லது அதைவிடக் கடினமாக இறுகி விட்டன'' என்பதில் இடம்பெற்றுள்ள 'அவ்' (அல்லது) எனும் இடைச்சொல்லுக்கு 'வாவு' (இன்னும்) எனும் இணை இடைச் சொல்லின் பொருள் அளிக்க வேண்டும். இதன்படி ''பாறையைப் போன்றும் அதைவிடக் கடினமாகவும் அவர்களின் உள்ளங்கள் இறுகி விட்டன'' எனப் பொருள் விரியும் என சில அறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

வேறு சிலர் மேற்கண்ட வசனத்தில் 'அவ்' எனும் இடைச்சொல் 'பல்' எனும் இடைச் சொல்லின் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ''அவர்களின் உள்ளங்கள் பாறையைப் போன்று ஏன் அதைவிடக் கடினமானவையாக இறுகி விட்டன'' எனப் பொருள் விசாலப்படும் என்று குறிப்பிட்டுள்ளனர். இதே மொழிநடை குர்ஆனில் வேறு சில வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக ''நாம் யூனுஸை ஓர் இலட்சம் பேருக்கு ஏன் அதைவிட அதிகமானோருக்கு தூதராக அனுப்பினோம்.'' (37:147)

''அவர் வில்லின் இரு முனைகளுக்கு சமமான அளவு ஏன் அதை விடவும் அதிக அளவு நெருக்கமானார்.'' (53: 9)

மற்றும் சிலர் இப்படி விளக்கம் கூறியுள்ளனர்:

உங்களின் உள்ளங்கள் இந்த இரண்டு நிலைகளில் ஏதேனும் ஒன்றுக்குப் பொருந்தாமல் போகாது. ஒன்று அவை பாறைகளைப் போன்று இறுகிப் போயிருக்கும் அல்லது அவற்றைவிட கடினமானவையாக இருக்கும். இந்த விளக்கத்தின்படி ''அவற்றில் சில உள்ளங்கள் பாறைகளைப் போன்று இறுகியும் இன்னும் சில உள்ளங்கள் அவற்றைவிட கடினமானவையாகவும் உள்ளன'' என்று இப்னு ஜபீர் (ரஹிமஹுல்லாஹ்) கூறுகிறார்.
(தஃப்ஸீர் இப்னு கஸீர்)

மனித உள்ளத்தின் வேறுபட்ட நிலைகளையும் உள்ளத்தின் வகைகளையும் இஸ்லாமிய அறிஞர்கள் மிக விரிவாக விளக்கியுள்ளனர். ஆரோக்கியமான உள்ளம், நோய்வாய்ப் பட்ட உள்ளம், இறந்துபோன உள்ளம் என்றெல்லாம் அவர்கள் வகைப்படுத்துகின்றனர். அல்குர்ஆனில் மனித உள்ளம் பூமிக்கும் ஒப்பிடப்படுகிறது. அல்லாஹ் எவ்வாறு வானிலிருந்து மழையைப் பொழிவித்து இறந்த பூமியை உயிர்ப்பிக்கின்றானோ அவ்வாறே வானத்திலிருந்து இறங்கிய வஹீ மூலம் மனிதனுடைய உள்ளம் உயிர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அல்லாஹ் உணர்த்துகிறான். ''அல்லாஹ்தான் வானத்திலிருந்து மழையை இறக்கி பூமி இறந்த பின் அதனை அவன் தன் மூலம் உயிர்ப்பிக்கிறான்.'' (16: 65)

நீங்கள் மனிதனின் உள்ளத்தில் அல்லாஹ்வுடைய வேதம் ஏற்படுத்தும் தாக்கத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமெனில், தண்ணீர் புவியில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். தண்ணீர் புவிக்கு வாழ்வளிக்கிறது. புவி புத்துயிர் பெறுவதற்கு தண்ணீர் அவசியமாகிறது. அவ்வாறே அல்லாஹ்வுடைய வஹீ ஆன்மிக ரீதியாக வரண்டு கிடக்கின்ற உள்ளங்கள் செழிப்புறுவதற்கு அவசியமாகிறது. எனவே, இதற்கு முன்னுள்ள வசனத்தில் அல்லாஹ்

> **முதல் இரண்டு வகைக் கற்களிலும் தண்ணீர் பற்றி குறிப்பிடப்படுகிறது. அவை நெகிழ்ந்து கொடுக்கின்ற நல்லுணர்ச்சி பெறுகின்ற வஹியின் அதிர்வுகளால் தாக்கம் பெறுகின்ற உள்ளங்களாகும். நீரூற்றுக்கள் பெருக்கெடுத்து ஓடுவது போல் அல்லது கற்பாறைகள் இரண்டாகப் பிளந்து நீர் வழிந்து ஓடுவது போல் அவரவர் இறை நம்பிக்கைக்கேற்ப உள்ளங்கள் வேறுபடுகின்றன. ஆனால், மூன்றாவது வகைக் கற்பாறையில் தண்ணீர் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அவை இறை நம்பிக்கையே அற்ற உள்ளங்களாகும்.**

அல்குர்ஆனில் மனித உள்ளம் பூமிக்கும் ஒப்பிடப்படுகிறது. அல்லாஹ் எவ்வாறு வானிலிருந்து மழையைப் பொழிவித்து இறந்த பூமியை உயிர்ப்பிக்கின்றானோ அவ்வாறே வானத்திலிருந்து இறங்கிய வஹீ மூலம் மனிதனுடைய உள்ளம் உயிர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அல்லாஹ் உணர்த்துகிறான்.

இப்படிக் கூறுகிறான்:

''நம்பிக்கை கொள்ளும் சமூகத்திற்கு நேர்வழியாகவும் அருளாகவும் இருக்கவே இவ்வேதத்தை உம்மீது நாம் இறக்கினோம்.'' (16: 64)

மழை பொழிவதற்கு முன்னர் உள்ள பூமியின் நிலை குர்ஆனில் هَامِدَةً خَاشِعَةً ஆகிய இரண்டு பிரயோகங்கள் மூலம் காட்சிப்படுத்தப்படுகிறது. இந்த இரு பிரயோகங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை ஸய்யித் குத்ப் (ரஹிமஹுல்லாஹ்) தனது ''அத்தஸ்வீருல் ஃபன்னீ ஃபில் குர்ஆன்'' என்ற நூலில் விளக்கியுள்ளார்.

''நீர் பூமியை வரண்டதாகக் காண்கிறீர். நாம் அதன் மீது மழையை இறக்கினால் அது அதிர்வுற்று வளமாகி அழகான அனைத்து வகைப் புற்பூண்டுகளையும் முளைப்பிக்கச் செய்கிறது.'' (22: 5)

இங்கு வரண்டது என்பதைக் குறிக்க மூலத்தில் هَامِدَةً எனும் சொல் ஆளப்பட்டுள்ளது. இது புற் பூண்டு எதுவும் முளைக்காத காய்ந்து பட்டுப்போன பொட்டல் பூமியைக் குறிக்கும் வரண்ட அந்த நிலத்தின் மீது அல்லாஹ் மழை பொழியச் செய்தால் அதனுள் உயிர்ப்புத் தன்மை ஊடுருவி பயிர்கள் துளிர்க்கின்றன. நிலத்தினுள் இருக்கும் ஈரப்பதத்தால் தாவரங்கள் ஓங்கி வளர்கின்றன. பின்னர் பல வண்ணங்கள், பல்வேறு சுவைகள், மணங்கள், தோற்றங்கள், பயன்கள் உள்ள பலதரப்பட்ட தாவரங்களையும் கனிவர்க்கங்களையும் பயிர்களையும் அந்தப் பூமி முளைக்கச் செய்கிறது.

''நிச்சயமாக நீர் பூமியை வரண்டு போனதாகக் காண்பதும் பின்னர் அதில் நாம்மழையை இறக்கினால்அது செழித்து வளர்வதும் அவனது அத்தாட்சிகளில் உள்ளவையாகும்.'' (41: 39)

இந்த வசனத்தில் வரண்ட பூமி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள خَاشِعَةً என்ற சொல் பணிவையும் கீழ்ப்படிதலையும் சிரமேற் கொண்டு செயற்படும் மனோபாங்கையும் குறிக்கும். ஆனால், இங்கு மழை பொழிய முன்பு இருந்த பூமியின் உயிரற்ற தன்மையை சித்திரிக்கிறது. அது புற்பூண்டுகளை முளைப்பிக்க முடியாத இறந்த பூமியாகும். அதன் மீது மழை பொழிவிக்கப்பட்ட பின்னர் அது அசைந்து அதிர்வுக்குள்ளாகிறது. இத்தகைய அசைவும் அதிர்வுமானது தான் உயிர் வாழ்வதற்கு தனக்கு உபகாரம் புரிந்ததற்காக நன்றி செலுத்துவது போல் காட்சிப்படுத்தப்படுகிறது.

அல்லாஹ் குர்ஆனை தன்னுடைய தூதரின் உள்ளத்திற்கே இறக்கினான். ''நிச்சயமாக ஜிப்ரீல் அல்லாஹ்வின் அனுமதிப்படி உமது உள்ளத்திற்கு குர்ஆனை இறக்கி வைக்கிறார்.'' (2: 97)

அல்லாஹ்வுடைய தூதரும் தான் சந்திக்கும் மனிதர்களின் உள்ளங்களுக்கே அந்தக் குர்ஆனை சமர்ப்பித்தார். அதனால்தான் அவர்களின் உள்ளங்கள் பாரிய மாற்றங்களுக்கு உட்பட்டு உலகத்திலும் மிகப் பெரிய புரட்சிகளைத் தோற்றுவித்தது.

பனூ இஸ்ரவேலர்களின் உள்ளங்கள் இனி ஒருபோதும் இளகாத பாறைகளைப் போன்று ஆகிவிட்டன என்று கூறும் அல்லாஹ் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சமூகத்தினரை இப்படி எச்சரிக்கிறான்:

''இறை நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வின் நினைவாலும்அவனால்அருளப்பெற்றசத்தியவேதத்தாலும் அவனுக்குப் பணியும் நேரம் இன்னும் அவர்களுக்கு வரவில்லையா? முன்னர் வேதம் வழங்கப்பட்டோரைப் போன்றுஅவர்கள்ஆகிவிடவேண்டாம். ஏனெனில், அவர்களுக்கு காலம் நீண்டிருந்தும்கூட அவர்களுடைய உள்ளங்கள் இறுகி விட்டன. அவர்களில் பெரும்பாலானோர் குற்றவாளிகளாவர்.'' (57: 16)

அல்லாஹ்வுடைய தூதர் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்: ''நான்கு விடயங்கள் துர்ப்பாக்கியத்தில் அடங்கும். அவையாவன:

01. உறைந்துபோன அழுகையே வராத கண்

02. இறுகிய உள்ளம்

03. நீண்ட காலம் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பு

04. உலகத்தின் மீதான பேராசை.''

(முஸ்னத் அல்பஸ்ஸார்)

# இஸ்லாமிய சட்டவாக்க சிந்தனையை

## அதன் இலக்குகளுடன் இணைக்கும் ஐந்து பரிமாணங்கள்

அரபு மொழியில்: கலாநிதி ஜாஸிர் அவ்தா
தமிழில்: அஷ்ஷெய்க் இப்னு பவ்ஸ் (நளீமி)

கலாநிதிஜாஸிர்அவ்தாஎகிப்தை பூர்விகமாகக் கொண்ட இஸ்லாமிய சட்ட சிந்தனையாளர். இன்று இஸ்லாமியஷரீஆவின்இலக்குகள் தொடர்பானஆய்வுப்பரப்பில்முன்னணி வளவாளராகவும் கருதப்படுகிறார். மட்டுமன்றி, அத்துறையில் நீண்ட அனுபவமும் அதனை அபிவிருத்தி செய்வதற்கான புதிய செயற்திட்டங்களையும் தலைமை தாங்கி வழிநடத்தி வருகிறார். லண்டன் நகரை மையப்படுத்தி இயங்கிய மகாஸித் நிலையம், கட்டாரில் அமைந்துள்ள இஸ்லாமிய சட்டவாக்கத்திற்கும் பண்பாட்டிற்குமான ஆய்வு நிலையம் போன்ற நிறுவனங்களில்முன்னணிஉறுப்பினராக இருந்தவர். இன்று, கனடாவின் கார்ல்டன் பல்கலைக்கழகம், தென்னாபிரிக்காவின் கேப்டவுன் பல்கலைக்கழகம் போன்றவற்றில் இஸ்லாமிய சட்ட சிந்தனை தொடர்பான முதுமாணிக் கற்கை நெறிக்கான கொள்கை வகுப்பாளராக பணி புரிகிறார். சர்வதேச இஸ்லாமியஅறிஞர்கள்ஒன்றியத்தின்நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் இவர் செயற்பட்டு வருகின்றமை நோக்கத்தக்கது. சமீபத்தில் கட்டாரில் அமைந்துள்ள இரண்டாம் ஹம்ந் இப்னு கலீபா பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய சட்டபீட மாணவர்களுக்கு நிகழ்த்திய ஆய்வுரையின் சுருக்கத்தை இக்கட்டுரை தொகுத்து வழங்குகிறது.



இன்று ''இஸ்லாமிய சட்டவாக்கம்'' (Islamic Legislation) என்ற சொல்லாடல் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இஸ்லாமிய அறிஞர்கள் இரண்டு கோணங்களில் அதனை வரையறை செய்கின்றனர். முதலாவது, தனி மனித நடத்தையுடன்தொடர்பானசட்டங்களை பெறுதல் என்பதாகும். சிலபோது ''பிக்ஹுல் இஸ்லாமி'' என்ற பதப்பிரயோகமும் ''இஸ்லாமிய சட்டவாக்கம்'' என்ற சொல்லுக்கு நிகராக பயன்படுத்த முடியும். அடுத்து, இஸ்லாமிய மூலாதாரங்களிலிருந்து ''பொதுக் கொள்கை'' (Public Policy) அல்லது ''பொதுச் சட்டங்கள்'' (Law) வகுப்பதனையும் இஸ்லாமிய சட்டவாக்கம் என்ற சொல் குறித்து நிற்கிறது. மறுபுறம், இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகள் அல்லது மகாஸிதுஷ் ஷரீஆ என்ற ஆய்வுப் பரப்பு இஸ்லாமிய ஷரீஆ தனது முழு மொத்த கட்டமைப்பும் இணைந்து அடைய விரும்பும் இறுதி இலக்குகளைப் பற்றி ஆய்வு செய்கிறது. இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகள் என்ன? என்பதில் இஸ்லாமிய அறிஞர்கள் நிறையவே எழுதியுள்ளனர். அதில், மனிதனின்அடிப்படை நலன்களான மார்க்கம், உயிர், அறிவு, பரம்பரை, சொத்து போன்றவற்றைப்பாதுகாத்தலே ஷரீஆவின் இலக்குகள் என இஸ்லாமிய அறிஞர்கள் உடன்பட்டுள்ளனர். அதே போன்று, மனித தேவைகளான வியாபாரம், விவசாயம், போக்குவரத்து போன்றவற்றை அடைந்து கொள்வதும் ஷரீஆவின் இலக்குகளில் ஒரு பகுதியாகும். இதனை ''அல்ஹாஜிய்யாத்''(மேலதிகதேவைகள்) என அறிஞர்கள் பெயரிடுகின்றனர். இதற்குமப்பால், ''அத்தஹ்ஸீனிய்யாத்'' என்ற மனிதனின் மேலதிக வசதி வாய்ப்புகளை மேம்படுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவதும் மூன்றாவது தரத்திலமையும் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளாகும்.

மறுபுறம், இஸ்லாமிய ஷரீஆவின் மொத்த இலக்குகளாக ஏகத்துவம்,உளத்தூய்மை,நீதி, அன்பு, சுதந்திரம் போன்றவற்றைசில அறிஞர்கள் அடையாளப்படுத்துவர். அதே போன்று, இஸ்லாமிய சட்டத்தின் ஆய்வுப் பரப்புகளான வணக்க

**''இஸ்லாமிய ஷரீஆ என்பது முழுமையாக நீதியை, அன்பை அடிப்படையாகக் கொண்டதாகும். எந்த சட்டங்கள் அவ்விரண்டை விட்டும் விலகிச் செல்கிறதோ அவை இஸ்லாமிய சட்டங் களாக கொள்ளப்பட மாட்டாது. எத்தகைய விளக்கங்க ளைக் கொண்டு நியாயப்படுத்தினாலும் சரியே''**

வழிபாடுகள் (இபாதத்), குற்றவியல், குடும்பவியல், பொருளியல் போன்ற அத்தியாயங்களின் இலக்குகளை ''பகுதி இலக்குகள்'' என இக்கலை சார்ந்த அறிஞர்கள் வகைப்படுத்துகின்றனர். அதனையும் சுருக்கி ''தொழுகையின் நோக்கங்கள்'' ''நோன்பின் நோக்கங்கள்'' மற்றும் ''ஸகாத்தின் நோக்கங்கள்'' என ''குறிப்பான இலக்குகள்'' பெயரிடப்படுகின்றன.

மேலே குறித்துக் காட்டப்பட்ட இஸ்லாமிய சட்டவாக்க செயற்பாட்டுடன் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகள் ஏன் தொடர்புபட வேண்டும்? என்ற விரிவான கேள்விக்கே இவ்வாய்வுரை விடை காண்பதற்கு முயற்சி செய்கிறது. உண்மையில், இஸ்லாமிய சட்டவாக்கம் என்ற செயற்பாட்டை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கும், அதனை மிகச் சரியாகச் செயற்படுத்துவதற்கும் இஸ்லாமிய ஷரீஆவின் நோக்கங்களுடன் இணைத்து நோக்குவதே பொருத்தமானதாகும். இந்தப் பின்புலத்தில், இஸ்லாமிய சட்டவாக்கமானது பின்வரும் ஐந்து முக்கியமான பரிமாணங்களுக்கூடாக இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளுடன் தொடர்புபடுகின்றது.

01. இஸ்லாமிய சட்டவாக்கத்தின் தத்துவம் என்ற வகையில்

02. இஸ்லாமிய சட்டவாக்கத்தின் அடிப்படை என்ற வகையில்

03. இஸ்லாமிய சட்டவாக்க செயற்பாட்டில் வணக்க வழிபாட்டுப் பகுதியையும் மற்றும் இஜ்திஹாதுக்குரிய பரப்பையும் வரையறை செய்தல் என்ற வகையில்

04. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நடத்தையைப் புரிந்து கொள்ளல் என்ற வகையில்

05. சட்டவாக்கத்தின் விளைவுகளை மதிப்பீடு செய்தல் என்ற வகையில்

**மகாஸிதுஷ் ஷரீஆ இஸ்லாமிய சட்டவாக்கத்தின் தத்துவம் (Philosophy):**

இஸ்லாமிய சட்டங்களைப் பெறுவதே இஸ்லாமிய சட்டவாக்க செயற்பாட்டின் நோக்கமாகும். இந்த வகையில், அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் உள்ள சட்டங்கள் ஏன் அருளப்பட்டன? என்ற தத்துவார்த்த கேள்விக்கான விடையை அடைந்து கொள்வதற்கு மகாஸிதுஷ் ஷரீஆ அவசியப்படுகின்றது. அல்குர்ஆனோ ஸுன்னாவோ எந்தவொரு சட்டத்தையும் நோக்கங்களின்றி பேசவில்லை. இஸ்லாமிய சட்டவாக்கத்தின் அடிப்படை மூலமான அல்குர்ஆன் இறக்கப்பட்டதன் தத்துவம் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: ''நாம் அல்குர்ஆனையும் மீஸானையும் (நபிகளாரின் ஸுன்னா) மனிதர்களுக்கு மத்தியில் நீதி செலுத்துவதற்காகவே அருளியுள்ளோம். அதாவது, நீதியை மக்களுக்கு மத்தியில் நிலைநாட்டுவதே அல்குர்ஆன் இறக்கப்பட்டதன் பின்புலத் தத்துவம் எனலாம். இஸ்லாமிய சட்டங்களின் தத்துவங்கள் என்ன? அதனை செயற்படுத்துவதன் மூலம் எவற்றை அடைந்து கொள்ளலாம்? என்ற விடையை திருப்திகரமாக ஒரு மனிதன் உணர்ந்து கொள்ளும் பொழுதுதான், குறித்த சட்டங்களை இதயசுத்தியுடன் பின்பற்ற முடியும். ஒரு மனிதனின் மார்க்கம், உயிர், அறிவு, பரம்பரை, சொத்து என்பவற்றைப் பாதுகாப்பதுவே இஸ்லாமிய சட்டங்கள் அனைத்தினதும் அடிப்படைத் தத்துவம் என்பதே இங்கு புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படையான அம்சமாகும்.

மறுபுறம், பலபோது இஸ்லாமிய சட்டவாக்கத்தின் அல்லது சட்டங்களின் தத்துவம் என்பது சுதந்திரம், செல்வம், அமைதி, அறிவு அபிவிருத்தி போன்ற சடவுலக அடைவுகளை அடைந்து கொள்வது மட்டுமே என சிலர் வரையறை செய்கின்றனர். உண்மையில், இது தவறான விளக்கமாகும். இஸ்லாமிய சட்ட சிந்தனையானது சட ரீதியான இலக்குகளை அடைந்து கொள்வதனை விட ஆன்மிக ரீதியான அடைவுகளை மனிதனுக்கு பெற்றுக் கொடுப்பதனையே முன்னுரிமையாகக் கருதுகிறது. இதனையே இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய ''அத்தஸவ்வுப்'' (Sufism) பகுதி ஆய்வு செய்கிறது. அதாவது, இஸ்லாமிய சட்ட சிந்தனையின் ஆன்மிக தத்துவத்தை அல்லது உள ரீதியான அடைவுகளை மனிதர்களுக்கு கொண்டு சேர்ப்பது அத்தஸவ்வுப்பின் மூல நோக்கமாகும். இஸ்லாமிய சட்டங்கள் மற்றும் சட்டவாக்க சிந்தனையின் சட ரீதியான அடைவுகளை விட ஆன்மிக இலக்குகளை ஒரு மனிதன் அடைந்து

கொள்வதே ''அல்பிக்ஹுல் ஹகிகி'' (உண்மையான பிக்ஹ்) என இமாம் கஸ்ஸாலி (ரஹிமஹுல்லாஹ்) குறிப்பிடுவதன் இரகசியமும் இதுவாகும். எனவே, மகாஸிது ஷரீஆ என்ற ஆய்வுப் பரப்பில் தஸவ்வுப் துறை அறிஞர்களது வகிபாகம் ஆழமானது.

**மகாஸிதுஷ் ஷரீஆ இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படை (Foundation):**

''சட்டமியற்றுவதற்கான அடிப்படை'' என்பது இஸ்லாமிய சட்டவாக்கச் செயற்பாடானது ஷரீஆவின் இலக்குகளுடன் தொடர்புபடும் மற்றொரு தளமாகும். அதாவது, குறித்ததோர் இஸ்லாமிய சட்டம் ஷரீஆவின் உயர் இலக்குகளை மையப்படுத்தி உருவாக்கப்பட முடியும். ஏற்கனவே நாம் கலந்துரையாடிய ''ஷரீஆவின் தத்துவம்'' என்ற அம்சத்திற்கும் ''ஷரீஆ சட்டங்களுக்கான அடிப்படை'' என்ற பதத்திற்கும் வேறுபாடு காணப்படுகிறது. அதாவது, இஸ்லாமிய ஷரீஆவின் தத்துவம் என்பது சட்டமொன்று அடைய விரும்பும் இலக்கை குறிக்கிறது. ஆனால், ஷரீஆவின் அடிப்படை என்பது சட்டமொன்று இயற்றப்படும்போது இலக்குகளை மையப்படுத்தி சிந்திப்பதாகும். தத்துவம் என்பது சட்டத்திற்கு பின்னரும், அடிப்படை என்பது சட்டத்திற்கு முன்னரும் ஷரீஆ கருத்திற் கொள்ளும் அம்சங்களாகும். இது தொடர்பாக இமாம் இப்னுல் கையிம் (ரஹிமஹுல்லாஹ்) குறிப்பிடும்போது ''இஸ்லாமிய ஷரீஆ என்பது முழுமையாக நீதியை, அன்பை அடிப்படையாகக் கொண்டதாகும். எந்த சட்டங்கள் அவ்விரண்டை விட்டும் விலகிச் செல்கிறதோ அவை இஸ்லாமிய சட்டங்களாக கொள்ளப்பட மாட்டாது. எத்தகைய விளக்கங்களைக் கொண்டு நியாயப்படுத்தினாலும் சரியே'' என்கிறார். அதாவது, இஸ்லாமிய ஷரீஆ சட்டங்கள் தோற்றம் பெற முடியுமான அடிப்படைகளாக நீதி, அன்பு போன்ற உயர் இலக்குகளை இமாம் இப்னுல் கையிம் அடையாளப்படுத்துகிறார். எனவே, மனிதனது மதத்தை, அறிவை, உயிரை, மானத்தை, செல்வத்தை, பரம்பரையை பாதிக்கும் சட்டங்களை இஸ்லாமிய ஷரீஆ என்ற பெயரில் உருவாக்க முடியாது. உதாரணமாக, அரபுலகில் அரபு வசந்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் ''ஆர்ப்பாட்டம் செய்வது தடை'' என பத்வாக்கள் வழங்கப்பட்டன. இவை, சர்வாதிகாரத்தை அங்கீகரித்து, மனித சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. எனவே, இவை தவறான மற்றும் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படைகளைக் கருத்திற் கொள்ளாத பத்வாக்களாகும். எந்த விளக்கங்களின் அடிப்படையில் பத்வாவை நியாயப்படுத்திய போதிலும் சரியே.

**பூரணமாக கட்டுப்பட வேண்டிய பகுதியையும் மற்றும் இஜ்திஹாதுக்குரிய பரப்பையும் வரையறை செய்தல்:**

இஸ்லாமிய சட்டவாக்கச் செயற்பாட்டில் ''இஜ்திஹாதிற்குரிய பரப்பு'' என்ன? பூரணமாகக் கட்டுப்பட வேண்டிய பகுதி என்ன? என்பதனைப் புரிந்து கொள்வதற்கும் மகாஸிதுஷ் ஷரீஆ பின்புலமாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில், இஸ்லாமிய சட்டவாக்கத்தில் பூரணமாகக் கட்டுப்பட வேண்டிய பகுதியில் இஜ்திஹாத்கள் மேற்கொள்ள முடியாது. அப்பரப்பில் உள்ளடங்கியுள்ள சட்டங்களை ஏன்? எதற்கு? என்ற கேள்விகளுக்கூடாக பகுத்தறிவாய்வுக்கு (Rationalization) உட்படுத்த முடியாது. இஸ்லாமிய ஷரீஆவின் நிலைத்த தன்மையை உத்தரவாதப்படுத்தும் பரப்பும் இதுவே. அதேபோன்று, இஸ்லாமிய சட்ட சிந்தனையில் ''இஜ்திஹாதிற்குரிய பரப்பு'' என்று வரையறை செய்யப்பட்ட பகுதியும் மிக முக்கியமானது. இஸ்லாத்தை கால மாற்றத்திற்கு ஏற்ற வகையில் தகவமைப்பதில் இப்பகுதி பெரிதும் பங்களிப்புச் செய்கிறது. இஸ்லாமிய சட்டவாக்கச்செயற்பாட்டில் இப்பிரிப்பு தொடர்பாக இமாம் ஷாதிபி இவ்வாறு கூறுகிறார்: ''வணக்க வழிபாடுகள் சார்ந்த விடயங்களில் பூரணமாகக் கட்டுப்படுவதும் மனித நடத்தைகள் தொடர்பான விவகாரங்களில் அது தொடர்பான சட்ட சிந்தனையின் அர்த்தங்களை, இலக்குகளைப் புரிந்து நடந்து கொள்வதுமே இஸ்லாமிய ஷரீஆவாகும். முதல் பகுதியில் பூரணமாகக் கட்டுப்படல் என்பது தோற்றம், முறைமைகள் போன்ற சகல அம்சங்களிலும் பேணப்படும். இதற்கு உதாரணமாக தொழுகை, ஹஜ் மற்றும் நோன்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாம் பிரிவில், ஷரீஆவின் இலக்குகளையும் அர்த்தங்களையும் செயற்படுத்துவதிலேயே ''பூரணமாகக்கட்டுப்படல்'' என்ற அம்சம் புரிந்து கொள்ளப்படும். இதுவே, இஸ்லாமிய ஷரீஆவினுடைய முழுமொத்த கட்டமைப்பிலும் அதிகமான விகிதத்தைக்கொண்ட பகுதியாகும். விளைவாக, நவீனகால மாற்றங்கள், சவால்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப இஸ்லாமிய சட்டவாக்க சிந்தனையைக் கட்டியெழுப்புவதிலும் புதிய சட்டங்களைப் பெற்றுக் கொள்வதிலும் இஜ்திஹாதிற்குரிய பகுதியில் மகாஸிதுஷ் ஷரீஆ தொடர்புபடுகிறது.

**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நடத்தையைப் புரிந்து கொள்ளல்:**

சட்டவாக்கத்திற்கான மூலம் என்ற வகையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது செயல்களது நோக்கங்களைப் புரிந்து கொள்ளல் முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது நடத்தைகளை, தீர்மானங்களை, நகர்வுகளை சரியாகப் புரிந்து கொள்வதற்கும் சட்டவாக்கச் செயற்பாட்டில் ஸுன்னாவை சரியாகக் கையாள்வதற்கும் மகாஸித் சிந்தனை தொடர்புபடுகின்றது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய நடத்தைகள், வார்த்தைகள், அங்கீகாரங்கள் போன்றவற்றை இமாம்கள் இரண்டு பொதுவான பிரிவுகளாக நோக்குவார்கள். அவை இஸ்லாமிய சட்டவாக்கச் செயற்பாட்டிற்கு உட்பட்ட மற்றும் உட்படாத பகுதி என்பனவாகும். அரபுலகின் பிரத்தியேக இயல்புகள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் மற்றும் மரபுகள் போன்ற காரணிகளால் வெளிப்படும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நடத்தைகளை, வார்த்தைகளை மற்றும் அங்கீகாரங்களை சட்டவாக்கத்திற்கு அப்பாலுள்ள பகுதியாகவும் ஏனையவை சட்டவாக்கத்திற்கு உட்பட்ட பகுதியாகவும் அவர்கள் கருதுகின்றனர். இன்னும், மாலிக் மத்ஹபுடைய பிரபல்யமான இமாமான கராபி தனது ''அல்புரூக்'' நூலில் சட்டவாக்கத்திற்கு உட்பட்ட பகுதியை மூன்று உப பிரிவுகளாக பிரித்து வகைப்படுத்துகிறார். அவை நபித்துவ செயற்பாடு, அரசியல் செயற்பாடு மற்றும் நீதிச் செயற்பாடு என்பனவாகும். இங்கு நபித்துவ செயற்பாடு என்ற வட்டத்தில் வெளிப்படும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வார்த்தைகள், நடத்தைகள், அங்கீகாரங்கள் என்பவற்றுக்கு பூரணமாக கட்டுப்பட வேண்டும் என அவர் கூறுகிறார். ஆனால், அரசியல் செயற்பாடு மற்றும் நீதித்துறை செயற்பாடு என்று வரும்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஏன் அவ்வாறு நடந்து கொண்டார்? என்ற அடிப்படையில் அவரது நோக்கங்களை (மகாஸிதுர் ரஸூல்), இலக்குகளைப் புரிந்து கொள்வதும், அதனை சாத்தியப்படுத்துவதற்கு முயற்சிப்பதுமே உம்மாவின் மீதான கடமையாக மாறுகிறது என இமாம் கராபி வலியுறுத்துகிறார். சுருக்கமாக, இஸ்லாமிய சட்டவாக்கச் செயற்பாட்டில் ஸுன்னாவை பயன்படுத்துவதற்கு துணை செய்யும் பிரதான இடையீட்டுக்கருவியாக ''மகாஸித்சிந்தனை'' தொழிற்படுகிறது என்பதே இங்கு அடையாளப்படுத்திக் காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

**சட்டவாக்கத்தின் விளைவுகளை மதிப்பீடு செய்தல்:**

சட்டவாக்கத்தின் விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறை என்ற அடிப்படையில் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகள் சட்டவாக்கச் செயற்பாட்டுடன் தொடர்புபடுகின்றன. அதாவது, இஸ்லாமிய மூலாதாரங்களைப் பயன்படுத்தி பெறப்படும் நிலைப்பாடு அல்லது தீர்ப்பு ஷரீஆவின் முழு மொத்த இலக்குகளை பூரணப்படுத்தும் வகையில் அமையுமா? என்பதனை பரீட்சித்துப் பார்ப்பதனையே இங்கு கருதுகிறோம். இதற்கு இஸ்லாமிய அறிஞர்கள் ''பிக்ஹுல் மஆலாத்'' என பெயரிடுகின்றனர். ஏனெனில், மார்க்க நிலைப்பாடென்பது வெறுமனே இஸ்லாமிய மூலாதாரங்களை ஆய்வு செய்யும் பகுதி மட்டுமல்ல. மாறாக, ஒவ்வொரு மார்க்க நிலைப்பாடும் மனிதர்களுடைய யதார்த்தமான வாழ்வில் தாக்கம் விளைவிக்கப் போகின்றது. இந்தக் கோணத்தில், மனித வாழ்வில் அது எத்தகைய விளைவை ஏற்படுத்தப் போகிறது? என ஆய்வு செய்வது முக்கியத்துவம் பெறுகின்றது. உதாரணமாக, ''சட்டத்திற்கு கட்டுப்படல்'' என்பதனை இஸ்லாமிய மூலாதாரங்களின் அடிப்படையில் வாதிக்க முடியும்; நிறுவ முடியும். ஆனால், ''சர்வாதிகார சூழலில் சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டும்'' என வாதிப்பது தவறானது. ஏனெனில், அதன் விளைவு யாதெனில், ''சட்டத்திற்கு கட்டுப்படல்'' என்ற எமது நிலைப்பாடு சர்வாதிகாரத்தை பாதுகாப்பதற்கும் அதற்கெதிரான எதிர்ப்பை அடக்குவதற்கும் துணை செய்யக் கூடும். எனவே, இஸ்லாமிய மூலாதாரங்களின் அடிப்படையில் நாம் பெற்ற இந்நிலைப்பாட்டின் ''அரசியல் விளைவு'' எவ்வாறு அமையக் கூடும்? என்ற விளக்கம் ஆரம்பமாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அது போலவே, இஸ்லாமிய மூலாதாரங்களின் அடிப்படையில் ''உறுப்பு மாற்றுச் சிகிச்சை'' ஆகுமானது என நிறுவ முடியும். ஆனால், வறுமை மிக்க சூழலில் குறித்த பத்வாவை பண மீட்டலுக்கான வழிமுறையாக பயன்படுத்தப்பட முடியும். இங்கு ''உறுப்பு மாற்று சிகிச்சை'' தொர்டர்பான பத்வாவின் பொருளாதார விளைவுகள் யாவை? என்ற தெளிவு முதலாவதாக ஆய்வு செய்யப்பட வேண்டும். இதனையே 'பிக்ஹுல் மஆலாத்' என்கிறோம். அதாவது, நாம் இஸ்லாமிய மூலாதாரங்களைப் பயன்படுத்தி பெறப்படும் நிலைப்பாடு, எந்த துறையுடன் தொடர்புபடுகிறதோ, அதில் எமது நிலைப்பாட்டின் விளைவுகள் எவ்வாறு அமையும்? என்பதனை பகுப்பாய்வு செய்வதனையே 'மஆலாத்' என்ற பதம் குறித்து நிற்கிறது. இங்குதான், ஓர் இஸ்லாமிய சட்ட சிந்தனையாளருடன் அரசியல், பொருளாதார, சமூகவியல் புத்திஜீவிகள் இணைந்து செயற்பட வேண்டிய தேவை

(50ஆம் பக்கம் பார்க்க)

◆அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) M.A. விரிவுரையாளர்– ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா◆

# தீமைகள் புயலாய் வீசும்போது...

இஸ்லாத்தில் சமூகப் பாதுகாப்பும் சமூக நலனும் முக்கிய மானவை. இவற்றுக்கு அச்சுறுத்தலாக வரும் சமூகத் தீமை கள் தொடர்பில் இஸ்லாமிய ஷரீஅத் தீவிரமான நடவடிக் கைகளை எடுத்து வருவதை நாம் அறிவோம். விபசாரம், களவு, கொள்ளை, போதைப்பொருள் தொடர்பான குற்றங் களுக்கு கடுமையான தண்டனைகளை ஷரீஅத் விதியாக்கி யுள்ளது.

ஷரீஅத் தண்டனைகள் நடைமுறைப்படுத்தப்படாத இலங்கைச் சூழலில் முஸ்லிம் சமூகத்திலும் இஸ்லாமியக் கிராமங்களிலும் இத்தகைய தீமைகள் இன்று பரவலாக அதிகரித்து வருவது அவதானிக்கப்படுகின்றது. பலபோது இத்தீமைகளின் கை ஓங்கி விடுவதையும் பார்க்கிறோம். இதிலும் கவலைக்குரிய விடயம் இத்தீமைகளுக்கு முன்னால் நல்லவர்கள் எடுக்கும் நிலைப்பாடாகும். இவர்கள் எமக்கும் தீமைகளுக்கும் இடையே சம்பந்தம் இல்லை எனத் தமக் குள்ளே நியாயம் கூறிக் கொண்டு ஒதுங்கி விடுகின்றனர். 'நாம் உண்டு; நமது பாடு உண்டு' என வாழத் தலைப்படு கின்றனர். இந்த நிலைப்பாடு இஸ்லாத்துக்கும் ஈமானுக் கும் முரணானது. ''ஒரு தீமையைக் காண்பவர் அதனைத் தனது கரத்தால் முடியா விட்டால் தனது நாவினால் தடுக்க வேண் டும். முடியா விட்டால் உள்ளத்தால் வெறுக்க வேண்டும். அதனைத் தாண்டி உள்ளத்தில் ஈமான் இருக்க முடியாது'' எனக் கூறும் நபிமொழி (முஸ்லிம்) இதனையே உணர்த்தி நிற்கிறது.

''விசுவாசிகளே! நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழி பெறும்போது வழி தவறியவர்கள் உங்களுக்குத் தீங்கிழைக்காதிருக்கட்டும்''(5:105) எனும் திருமறை வசனம் ''மனிதர்கள் தீமைகளைக் கண்டு அதனை மாற்ற முயலாத போது இறை தண்டனை அனைவருக்கும் பொதுவாக இறங் கும் எனும் கருத்தையே குறித்து நிற்கிறது'' என விளக்கினார் கள் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள். (அபூதாவூத்)

சமூகத் தீமைகளும் குற்றங்களும் பரவி விடுகின்றபோது நல்லவர்களின் சுய வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் பாதிக்கப்படுவதை நாம் அறிகிறோம். எத்தனையோ தாய் மார்கள் தமது சிறார்களைத் தொழுகைக்காகப் பள்ளிவாச லுக்கு அனுப்புவதற்கு பயப்படும் சூழல் பல இடங்களில் உருவாகி இருக்கிறது.

உலகில் ஐந்து வகையான குற்றங்களுக்கு அல்லாஹ்விட மிருந்து இறங்கும் ஐந்து வகையான தண்டனைகளை எச்சரித் தார்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்.

''மானக்கேடான செயல்கள் காரணமாக தொற்று நோய்கள் அதிகரிக்கும். அளவை நிறுவை மோசடி காரணமாக பஞ்சம் ஏற்படும். ஸகாத்தை மறுப்பதால் மழை இல்லாமல் போகும். அல்லாஹ்வினதும் அவன் தூதரினதும் கட்டளைகள் மீறப்ப டுவதால் எதிரிகளின் ஆதிக்கம் அதிகரிக்கும். முஸ்லிம் தலைவர்கள் இறை வேதத்துக்கு ஏற்ப தீர்ப்பளிக்கத் தவறும் போது சமூகத்தினுள்ளே குழப்பங்கள் ஏற்படும்.'' (ஹாகிம், பைஹகி)

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் ஓர் அறிவிப்பில், ஒரு நாள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்களின் முகத்தில் மாற்றத்தை அவதானித்தேன். அவர்கள் வுழூ செய்து கொண்டு எவருடனும் பேசாது மிம்பர் மீது ஏறிச் சொன்னார்கள். ''மனிதர்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கூறுகிறான். நீங்கள் நன்மையை ஏவித் தீமை யைத் தடுத்து வாருங்கள். இன்றேல் நீங்கள் என்னிடம் இறைஞ்சுவீர்கள்; நான் பதிலளிக்க மாட்டேன். கேட்பீர்கள்; தர மாட்டேன். உதவி தேடுவீர்கள்; உதவியளிக்க மாட்டேன்.'' (ஸஹீஹுத் தர்கீப்)

ஸூரா மாயிதாவின் 78, 79 ஆவது வசனங்கள் பனூ இஸ்ர வேலர்கள் இறை சாபத்துக்கு ஆளானமைக்கு முக்கிய காரணம் தீமைகளைக் கண்டும் எதிர்க்காமல் வாழ்ந்தமை தான் எனக் கூறுகின்றது.

மனிதர்கள் இறை கட்டளைகளை மறந்து வாழத் தலைப் படும்போது அல்லாஹ் அவர்களுக்கு உலகின் வசதி வாய்ப் புகளைத் திறந்து கொடுத்து திடீரென தண்டனைகளை இறக்குவான் எனும் எச்சரிக்கையை ஸூரா அன்ஆமின் 44,45 ஆம் வசனங்களில் காண்கிறோம்.

பொதுவாகவே அல்குர்ஆன் எமக்கு முன்னால் வைக்கும் அடிப்படை ''மனிதர்களது கரங்கள் தேடிக் கொண்டவற்றின் காரணமாகவே தரையிலும் கடலிலும் குழப்பங்கள் ஏற்படுகின் றன.'' (30: 41) என்பதாகும்.

எனவே, குடும்பத்திலும் சமூகத்திலும் பிரச்சினைகள் தோன்றுகின்றபோது வெளிப்படையான சட ரீதியான கார ணிகளை மாத்திரம் நாம் ஆராய்ந்து தீர்வு காண முயல்வ துண்டு. ஆனால், மேற்படி குர்ஆன், ஹதீஸின் ஒளியில் பார்க் கின்றபோது பாவங்களும் குறிப்பாக, சமூகத் தீமைகளும் அதிகரிப்பது இறை உதவியை விட்டும் எம்மைத் தூரமாக் குகின்றது. மட்டுமன்றி, இறை கோபமும் தண்டனையும் இறங்கக் காரணமாகின்றது என்பதை உணர முடியுமாக உள்ளது.


எனவே, நல்லவர்கள் இத்தீமைகளுக்கு முன்னால் மௌனம் சாதிக்காது செயற்களம் இறங்கும் கடமைப்பாட்டை விளங் கிச் செயற்படுவோமாக!

13

சென்னையிலிருந்து
மௌலவி நூஹ் மஹ்ழரி

# கருத்து வேறுபாடு

## கருத்துக்களோடு மட்டுமே! மனிதர்களோடு அல்ல!



இஸ்லாமிய சட்டத்துறையில் ஆழ்ந்த புலமை கொண்ட இமாம் ஷாஃபி (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கு, அறிஞர் ஒருவருடன் ஒரு சட்டம் சம்பந்தமாக விவாதம் புரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. விவாதம் நீண்டு கொண்டே சென்றது. விட்டுக்கொடுக்காமல் இருவரும் தங்களது தரப்பு ஆதாரங்களை எடுத்து வைத்துக் கொண்டே இருந்தார்கள். இறுதியில் இமாம் ஷாஃபி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் அமைதியாக இருக்க மறுமுனையில் விவாதம் செய்துகொண்டிருந்த அறிஞரின் முகம் மாறியது. கோபம் எட்டிப் பார்த்தது. விவாதம் முடிந்து, சபை கலைந்து இருவரும் எழுந்து வெளியே செல்லத் தயாரானார்கள்.

இமாம் ஷாஃபி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் வேகமாகச் சென்று அந்த அறிஞருடைய கரத்தைப் பிடித்தவாறு கூறினார்கள்: ''நாம் இருவரும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் சகோதரர்களாக இருப்பதற்குத் தடை எதுவும் இல்லையே!''

அறிஞர்கள் எப்போதும் பண்பட்டவர்களாகவும் உயர்ந்த உள்ளம் கொண்டவர்களாகவுமே இருந்திருக்கிறார்கள். கருத்து வேறுபாடு கொண்ட காரணத்தால் கோபம் கொள்ள வேண்டும் என்றோ துவேஷத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றோ எங்காவது கூறப்பட்டிருக்கின்றதா? இல்லையே. பின் ஏன் நாம் அவ்வாறு நடந்து கொள்கிறோம்? நமது கருத்துக்கு எதிர் கருத்தை எவராவது கூறிவிட்டால் நம்மால் அதனை சகித்துக் கொள்ள முடிவதில்லையே ஏன்..?

நண்பர்களாகப் பழகி வரும் சூழலில் கூட அனுபவத்தின் அடிப்படையிலோ அறிவின் அடிப்படையிலோ உங்கள் நண்பரிடம், ''இதை நீங்கள் தவிர்த்துக் கொள்ளலாமே!'' என்று ஒருமுறை சொல்லிப் பாருங்கள். அந்த நட்பில் விரிசல் விழுவதைக் காணலாம். ஒரு நலன் விரும்பியாக உங்கள் கருத்துக்களை தொடர்ந்து நீங்கள் சொல்லத் துவங்கினால், நீங்கள் தனிமைப்படுத்தப்படுவீர்கள் அல்லது ஒதுக்கப்படுவீர்கள். இதுதான் இன்றைய யதார்த்தம்.

புழைல் பின் இயாழ் (ரஹிமஹுல்லாஹ்) மற்றும் அப்துல்லாஹ் பின் முபாரக் (ரஹிமஹுல்லாஹ்) இருவரும் இணைபிரியா நண்பர்கள். இருவரும் சிறந்த அறிஞர்கள். உலக மோகம் இல்லாதவர்கள்.

> கருத்து வேறுபாடு கொண்ட காரணத்தால் கோபம் கொள்ள வேண்டும் என்றோ துவேஷத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றோ எங்காவது கூறப்பட்டிருக்கின்றதா? இல்லையே. பின் ஏன் நாம் அவ்வாறு நடந்து கொள்கிறோம்?

அப்துல்லாஹ் பின் முபாரக் (ரஹிமஹுல்லாஹ்) எல்லைப் பாதுகாப்புக்காக, போருக்குச் சென்றுவிட்டார். ஆனால், புழைல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களோ ஹரமில் தங்கி தொழுகையிலும் இறை வணக்கத்திலும் ஈடுபட்டார்.

ஹரமில் வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நண்பரை நினைத்து உள்ளம் உருகியது. நண்பரைக் காண வேண்டுமே! கண்கள் அழுதன. மனம் அவரைத் தேடியது. பார்க்க வேண்டும் என்ற ஆசை கூடியது. இறைவனை நினைவுகூரும் சபையில் இருவரும் இணைந்து இருந்த இனிமையான தருணங்கள் நினைவுக்கு வந்தன.

உடனே தமது நண்பர் அப்துல்லாஹ் பின் முபாரக் அவர்களுக்கு, ''நீர் விரைந்து இங்கு வாரும்! இங்கு அமர்ந்து இறைவனை நினைவுகூரலாம் திருமறை ஓதலாம். ஒன்றாக இறைவனை வணங்கலாம். போரிடுவது எல்லாம் உடல் வலிமைமிக்கவர் செய்யக்கூடிய செயல். நீர் ஓர் அறிஞர். ஆகவே வந்து விடும்!'' என்று கடிதம் எழுதினார்.

கடிதம் கண்ட அப்துல்லாஹ் பின் முபாரக் அவர்களுக்கு நண்பருடைய ஆலோசனை சரியாகப் படவில்லை. தவறான ஆலோசனை வழங்குவதாகத் தோன்றியது. உடனே பதில் கடிதத்தை இவ்வாறு கவிதையில் எழுதினார்:

''ஹரமைனில் வழிபடுபவரே! எங்களைப் பாரும்! நீர் வணக்கத்தில் விளையாடுவது அப்போது தெரிய வரும்! உமது கன்னங்களில் கண்ணீரால் சாயம் ஏறுகிறது! ஆனால், எமது கழுத்துக்களிலோ குருதியால் சாயம் ஏறுகிறது! நபிகளாரின் பொன்மொழி எங்களிடம் உள்ளது! அது பொய்யல்ல... உண்மை! இறைவழியில் பயணிக்கும் குதிரையின் புழுதியும் நெருப்பின் புகையும் ஒரே மூக்கில் புகா! இது உறுதி! இதோ இந்த இறைவேதமும் நம்முடன் உரையாடுகின்றது. இறைவழியில் இறப்பு இல்லை! இது பொய்யுமல்ல!''

ஆயினும், நண்பரோடு கருத்து முரண்பாடு கொள்ள மனம் வரவில்லை. கவிதை வரிகளை எழுதிய பின் கடிதத்தை இவ்வாறு தொடர்ந்தார் அப்துல்லாஹ் பின் முபாரக் அவர்கள்:

''இறைவன் சிலருக்கு உபரியான நோன்புகள் நோற்பதற்கு அருள் புரிகின்றான். மற்றவர்களைவிட அவர் அதிகம் நோன்பு வைக்கின்றார். சிலருக்குத் திருக்குர்ஆன் ஓதுவதற்கு அருள்பாலிக்கின்றான். சிலருக்கோ கல்வி கற்பதற்கு, மேலும் சிலருக்கோ இறைவழியில் போராடுவதற்கு இறைவன் அருள் புரிகின்றான். சிலருக்கு இரவில் நின்று வணங்குவதை இன்பமாக ஆக்குகின்றான்.

ஆகவே, உமது நிலை எனது நிலையைவிட சிறந்தது அல்ல. அவ்வாறே நான் மேற்கொண்டிருக்கும் நிலையும் உமது நிலையைவிட சிறந்தது அல்ல. நாம் இருவரும் நன்மைகளையே செய்து கொண்டிருக்கின்றோம்.''

முடிந்தது விஷயம்! 'போர்க்களத்தில் இருக்கும் என்னைப் பார்த்து நீ எப்படி உபதேசம் செய்யலாம்..? போர் குறித்த நபிமொழி தெரியாதா? அதன் சிறப்பு தெரியாதா உமக்கு?'' என்று வானுக்கும் பூமிக்கும் குதிக்கவில்லை.

விமர்சித்தாலோ.. எதிர்க் கருத்து கூறினாலோ மிரட்டல், பழிக்குப்பழி, வசைச்சொல், மை வீச்சு, இறுதியில் கொலை செய்யவும் தயங்குவதில்லை சிலர். விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்களாகவே அநேகமானவர்கள் தம்மைக் கருதுகின்றார்கள்.

பொதுச் சபையில் மஹ்ர் (மணக்கொடை) குறித்து விளக்கம் கொடுக்கின்றார் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். ''உமரே! மஹர் விஷயத்தில் தொகை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை உமக்கு வழங்கியது யார்?'' என்று அந்த அவையிலேயே ஒரு பெண்மணி கேள்வி கேட்கின்றார். தவறை உணர்ந்து திருத்திக் கொள்கின்றார் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். ''என்னைக் கேள்வி கேட்க நீ யார்?'' என்று எதிர்க் கேள்வி கேட்கவில்லை. ''உன்னை இருந்த இடம் தெரியாமல் இல்லாமல் ஆக்கி விடுவேன்.. என்னை யார் என்று நினைத்தாய்?'' என்று பல்லைக் கடிக்கவில்லை.

இமாம் அபூஹனீஃபா (ரஹிமஹுல்லாஹ்) அவர்களும் இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களும் சம காலத்தில் வாழ்ந்தவர்கள். இருவருக்குமிடையே பல விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தன.''

இருவரும் ஒருநாள் மதீனாவில் நேரடியாகப் பல விஷயங்கள் குறித்து விவாதம் செய்து பிரிந்தபோது, இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள், இமாம் அபூஹனீஃபா (ரஹிமஹுல்லாஹ்) அவர்களைக் குறித்து அங்கிருந்த பள்ளிவாசலின் தூணைச் சுட்டிக் காட்டிவிட்டு இவ்வாறு கூறினார்: 'இதோ செல்கிறாரே இவர்; இந்தத் தூண் தங்கத்தால் ஆனது என்று வாதிட்டால் ஆதாரபூர்வமாக அதை நிலைநாட்டுமளவுக்குத் திறமைசாலி.


அதேநேரம் இமாம் அபூஹனீஃபா (ரஹிமஹுல்லாஹ்) அவர்களோ, இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களைக் குறித்து கூறுகையில், ''கல்வி எனும் பெரும் மலையை நான் சந்தித்தேன்'' என்று பாராட்டினார்.

மக்களிடம் இதே மனோபாவத்துடன் நாம் நடந்துகொண்டால் உண்மையில் மனதுக்கு நிம்மதி கிடைக்கும். அத்தோடு மனித உள்ளங்களைக் கொள்ளையடிக்கவும் முடியும். மனிதர்களின் நேசம் கிடைக்கும். மனிதர்களின் நேசம் கிடைக்கின்றதோ இல்லையோ இறைநேசம் நிச்சயம் கிடைக்கும்.

ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்பது முக்கியம்தான். ஆனால், அதைவிட முக்கியம் பிரியாமால் இருப்பதல்லவா!

'ஹரமைனில் வழிபடுபவரே! எங்களைப் பாரும்! நீர் வணக்கத்தில் விளையாடுவது அப்போது தெரிய வரும்! உமது கன்னங்களில் கண்ணீரால் சாயம் ஏறுகிறது! ஆனால், எமது கழுத்துக்களிலோ குருதியால் சாயம் ஏறுகிறது! நபிகளாரின் பொன்மொழி எங்களிடம் உள்ளது! அது பொய்யல்ல... உண்மை! இறைவழியில் பயணிக்கும் குதிரையின் புழுதியும் நெருப்பின் புகையும் ஒரே மூக்கில் புகா! இது உறுதி! இதோ இந்த இறைவேதமும் நம்முடன் உரையாடுகின்றது. இறைவழியில் இறப்பு இல்லை! இது பொய்யுமல்ல!''

# போதை எதிர்ப்புப் பேரணி




''போதை இல்லா நாடு'' என்ற மகுடம் தாங்கி ஜனாதிபதி விஷேட செயலணியால் நாடுமுழுவதும் நடைபெற்றுவரும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் 07 வது நிகழ்வு புத்தளம் நகரில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதை முன்னிட்டு இடம்பெற்ற போதை எதிர்ப்பு ஊர்வலத்தில் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் தேச நிர்மாண பகுதியினர் கலந்து கொண்டதோடு, அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கலந்துகொண்ட விஷேட அமர்வில் இயக்கத்தின் துணைத் தலைவரும் தேச நிர்மாண பகுதியின் தலைவருமானஅஷ்ஷெய்க்ஆஸாத்ஷிராஸ்(நளீமி)விஷேட உரையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும்இந்நிகழ்வைசிறப்பிக்கும்முகமாகஇயக்கத்தின் Uplift-Education பகுதியால் புத்தளம் சென்மேரிஸ் தமிழ் மகாவித்தியாலயத்தில்போதைஎதிர்ப்புவிழிப்புணர்வுநிகழ்வுகள்ஒழுங்குசெய்யப்பட்டுவெற்றிகரமாகநடத்திமுடிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அதிமேதகு ஜனாதிபதியால் பாராட்டு



சர்வதேச குருதிக் கொடை தினத்தை முன்னிட்டு தேசிய இரத்த வங்கி, சுகாதார அமைச்சோடு இணைந்து ஏற்பாடு செய்ததேசியநிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

தேசிய ரீதியில் பாரிய குருதிக்கொடை முகாம்களை ஏற்பாடு செய்து மனிதம் காக்க உழைக்கும் தனி நபர்களும் அமைப்புக்களும் இதன்போது ஜனாதிபதியால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அந்த வகையில் பாரிய குருதிக் கொடை முகாம்களை ஏற்பாடு செய்த அமைப்பு என்றவகையில்ஸ்ரீலங்காஇஸ்லாமியமாணவர்இயக்கத்தின் மருதமுனை மற்றும் ஓட்டமாவடி கிளைகள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் ஏற்பாட்டில் பலகார விநியோகம்

ஈதுல் பித்ர் திருநாளை கொண்டாடும் வகையிலும் அதில் பொதிந்துள்ள தனித்துவமான சிறப்பம்சங்களை சகோதர சமூகத்துக்கு மத்தியில் கொண்டு செல்லும் முகமாகவும் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் புத்தளம் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட பலகார விநியோகம் இயக்கத்தின் துணைத் தலைவர் அஷ்ஷெய்க் ஆஸாத் ஷிராஸ் (நளீமி) தலைமையில் நடைபெற்றது.



புத்தளம் மணல்தீவு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட விலுக்கை சிங்கள கிராமம், புத்தளம் பௌத்த மத்திய நிலையம், பொலிஸ் நிலையம், கிறிஸ்தவ தேவாலயம் உள்ளிட்ட மாற்று மத சகோதரர்கள் செறிந்து வாழும் இடங்களில் இப்பலகார விநியோகம் வழங்கப்பட்டது.

# ELA பயிற்சி பட்டறை

2015 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக நுழைவை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கான 03 நாள் வதிவிடப் பயிற்சி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்பயிற்சி நெறியில் சுய முன்னேற்றத்துக்கு பல்கலைக் கழகங்களை பயன்படுத்துவது எவ்வாறு?

பல்கலைக்கழகத்தின் மாறுபட்ட சூழலில் ஆன்மிக மற்றும் விழுமியப் பெறுமானங்களை பாதுகாப்பது எவ்வாறு?

தலைமைத்துவ வழிகாட்டல்கள்...

குழுச் செயற்பாடுகள்...

முதலான அம்சங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரிகள் மற்றும் துறைசார் நிபுணர்களால் கலந்துரையாடப்படவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறைக்கு 40 மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படவுள்ளதால் உங்கள் பதிவுகளுக்கும் மேலதிக தகவல்களுக்கும் முந்திக் கொள்ளுங்கள்.

சகோதரர். ரிஹான் (பொறியியலாளர்): **077 123 1770**

உங்கள் கிளை மற்றும் பிராந்திய மட்டங்களில் நடை பெறும் ஜம்இய்யா மற்றும் பாடசாலைப் பகுதியின் நிகழ்வுகளை உடனுக்குடன் ஜம்இய்யாவின் தலைமைச் செயலகத்துக்கு அறியத் தருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அஷ்ஷெய்க் முஅஸ்ஸம் - 077 600 5614 info@slism.org

YDP YOUTH DEVELOPMENT PROGRAM

# Youth Development Program - 2016
# For G.C.E. A/L STUDENTS
## Change your life- Design your future

இஸ்லாமிய மாணவர் இயக்கமும் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் இணைந்து வருடா வருடம் நடத்திவரும் க.பொ.த. உயர் தர பரீட்சையை எழுதிய மாணவர்களுக்கான 7 நாள் வதிவிட செயலமர்வான The Youth Development Program (YDP) இவ்வருடமும் நடைபெறவுள்ளது.

க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு முன்னால் எழும் முதன்மையான கேள்வி "எனது வாழ்வின் அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு அமையவேண்டும்?" என்பதுவே. இதோ! YDP அக்கேள்விக்கான பதிலை சுமந்து வருகிறது.

உங்களைப் போன்ற பல மாணவர்களது ஏக்கங்களை தீர்த்து, வாழ்க்கைக்கான சரியான பாதையை YDP காண்பித்துள்ளது.

### YDP இன் உள்ளடக்கம்

*01.* இஸ்லாமிய அடிப்படைகள் பற்றிய அறிவு

*02.* Skills Development

*03.* Career Guidance

*04.* Youth Counseling

பயிற்சிநெறியின் முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

★ இப்பயிற்சி நெறியின் முடிவில் ஒரு மாணவன்,

★ வாழ்க்கை குறித்து சிறந்த தெளிவையும் வாழ்க்கைக்கான உயர்ந்த இலட்சியத்தையும் பெற்றுக் கொள்வார்.

★ இங்கு மாணவர்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான களம் கிடைப்பதன் காரணமாக அவருக்கே உரிய தனித்துவமான ஆற்றல்களை இனங்கண்டு கொள்வார்.

★ உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கான வழிகாட்டல்களை பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் தனக்குப் பொருத்தமான துறையில் பயணிப்பார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் 08 இடங்களில் YDP பயிற்சிநெறிகள் இடம் பெறும்.

பயிற்சிநெறிக்கு 40 மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். உடன் முயற்சித்தால் உங்களுக்கான இடத்தை நீங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்களது பெயர்களை பதிவு செய்து கொள்வதற்கும் YDP பயிற்சிநெறியின் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விபரம்:

### மாவட்ட பொறுப்பாளர்கள்

*01.* கொழும்பு- அஷ்ஷெய்க் A.W.M. ரெளஹி வஹாப் - *077 0439349*

*02.* களுத்துறை- M.R.M.U. ருஷ்தி - *077 5792470*

*03.* கம்பஹா- M.R.M. ரிஷாத் - *077 0157627*

*04.* புத்தளம்- H.M. அம்ஹர் ஹுஸைன்- *075 7036170*

*05.* குருநாகல்- அஷ்ஷெய்க் A.P.M. மஹீஸ் (நளீமி) - *071 6386958*

*06.* அநுராதபுரம்- M.N. ரிப்கான் - *077 3653342*

*07.* பொலன்னறுவை- A.L. மபாஸ் அஹமட் - *076 7671921*

*08.* திருகோணமலை- A.N.M. இஹ்ஸான்- *075 7028348*

*09.* மட்டக்களப்பு- M.U.M. ஸனூஸ் - *077 3523598*

*10.* அம்பாறை- M.I. அப்கர் - *077 4973070*

*11.* கேகாலை- M.R.M. ருஸைத் - *077 7368935*

*12.* இரத்தினபுரி- M.M. ஸாகிர் அஹமட்- *077 7720570*

*13.* மத்திய மாகாணம் M.T.M. அஸாம் - *077 7829696*

*14.* ஊவா மாகாணம்- M.I.M. புர்கான் - *077 7284663*

*15.* தென் மாகாணம்- M. ரஸாத் - *076 5464114*

சிங்கள மொழிமூலமான மாணவர்களுக்கான செயலமர்வு தொடர்பான விபரங்களுக்கு:

*01.* அஷ்ஷெய்க் A.R.M. அர்கம் (நளீமி) - *077 3573815, 077 6194156*

திறமைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கங்கள் வழங்கப்படும்.

★ தேசிய ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க். ஸபா கஸ்ஸாலி (நளீமி)- *077 6608928*

## தீய நண்பன் பற்றி

அல்லாஹ் கூறுகிறான்:

''அன்றைய கியாம நாளில் அநியாயம் செய்து விட்ட வன்தனது இருகை விரல்களைகடித்துக்கொண்டு 'எனக்கு வந்த கைசேதமே! என்னை வழிகெடுத்தவனை நான் நண்பனாக ஆக்கிக் கொள்ளாதிருந்திருக்க வேண்டுமே! நிச்சயமாக நேர்வழி என்னிடம் வந்த பின்னும் அதிலிருந்து என்னை வழிகெடுத்து விட்டானே!' என கூறுவான். மேலும் ஷைத்தான் மனிதனுக்கு மிகவும் சதி செய்பவனாகி விட்டான்.'' (25: 27-29)

நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

''ஒரு மனிதன் தனது நண்பனின் மார்க்கத்தின் மீதே இருப்பான். எனவே, உங்களில் ஒருவர் தான் யாருடன் நட்பு கொள்வது என சிந்தித்துப் பார்த்துக் கொள்ளட்டும்.''

பர்ஸான் ஹம்ஸா- உலப்பனை

## நற்பண்புகள்

அகிலத்திற்கு அருளாக அருளப்பட்ட நபியவர்கள் குணத்தின் குன்றாகவும் நற்பண்புகளின் சிகரமாகவும் திகழ்ந்தார்கள். அது போலவே ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ்விடமும் மனிதர்களிடமும் சிறப்பானவனாக திகழ வேண்டும். கீழ்வரும் பண்புகளைக் கடைப்பிடிப்ப தன் மூலம் அல்லாஹ்வின் அருள்களைக் கணக்கின்றிப் பெற்றுக் கொள்ளலாம்.

01. அல்லாஹ்வை சரியான முறைப்படி அறிந்து, தன் வாழ்வின் செயற்பாடுகளை அவனுக்காகவே என்ற தூய எண்ணத்துடன் அமைத்துக் கொள்ளல்.

02. தன் வாழ்வில் குறுக்கிடும் ஷைத்தானிய ஊசலாட்டங்களை அறிந்து, அதற்கு மாற்றமாக நற்செயற்பாடுகளில் ஈடுபடல்.

03. சத்தியத்தை அறிந்து அதனைப் பின்பற்றல்.

04. அசத்தியத்தை அறிந்து அதனை விட்டு தூரமாகுதல்.

05. மறுமையில் வெற்றி பெறுவதை இலக்காகக் கொண்டு அதற்கேற்ற வகையில் நம் செயற்பாடுகளை வடிவமைத்தல்.

பின்த் மரிக்கார்- முதலைப்பாளி

## அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா)

தமது அனைத்து தோழர்களை விடவும் தான் அதிகமாக அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை நேசிப்பதாகவும், அதேபோல மனைவிமார்களில் அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை நேசிப்பதாகவும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆஇஷா நாயகியின் ஒழுக்கத்தை உத்தரவாதப்படுத்தி அல்லாஹ் அல்குர்ஆனில் சில வசனங்களை அருளியுள்ளான்.

அண்ணலார் இவ்வுலகை விட்டுப் பிரியும்போது அவர்களது சிரம் அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களது மடியின் மீதே இருந்தது.

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் 2210 ஹதீஸ்களை அறிவிப்புச் செய்திருந்தார்கள்.

ஏ.டப்ளியு.எம். ஸாஜித் - நாவலப்பிட்டி

## சிறுவர் பூங்கா

**முதல் பரிசுக்குரியவர்:**

**எம்.எஸ்.எஸ். மாஹிரா**

**கனேதென்ன, ஹிங்குல**

**ஆறுதல் பரிசைப் பெறுவோர்**

| | | |
|---|---|---|
| 01. | எம்.எஸ்.ஏ. ஹம்தி | - வரகாபொல |
| 02. | எம்.ஆர்.எப். பஹீமா | - அவிஸ்ஸாவெல |
| 03. | எப். அப்ரா | - அரநாயக்க |
| 04. | எம.ஆர். ஷவ்வாப் | - புத்தளம் |
| 05. | எஸ்.எப். ஸஹானி | - கம்பிரிகஸ்வெவ |
| 06. | எஸ்.எப். ஸதா மர்யம் | - கல்கமுவ |
| 07. | எம். ஸைன் | - மாஹோ |
| 08. | என்.எப். ரிஸாமா நைஸர் | - பாணதுறை |
| 09. | எம். ஹில்மி உதுமான் | - குருணாகல் |
| 10. | பாத்திமா அப்ரா | - வவுனியா |

**குறிப்பு:**
**விடைகளை தபால் அட்டையில் (Post Car) மாத்திரம் எழுதி அனுப்பவும்.**

# அல்லாஹ் யாவற்றிலும் மிகைத்தவன்

யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அவருடைய சகோதரர்கள் கொலை செய்ய நாடினார்கள். எனினும், அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான். பின்னர் அவர் அடிமையாக விற்கப்பட்டாலும் அல்லாஹ் அவரை அமைச்சராக உயர்த்தினான்.

தமது தந்தையின் உள்ளத்திலிருந்து யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மீதான அன்பை அழித்துவிட அவர்கள் திட்டமிட்டார்கள். ஆனால், அந்த அன்பு படிப்படியாக அதிகரித்தே சென்றது.

**''யூஸுபை கொலைசெய்து விடுங்கள் அல்லது பூமியில் எங்கேனும் எறிந்து விடுங்கள். உங்கள் தந்தையின் முகம் (கவனம்) முற்றிலும் உங்கள் பக்கமே இருக்கும்.''**

*(ஸூரா யூஸுப்)*

யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது இளவயது பிரிவால் யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது உள்ளம் கவலையால் கலங்கியது. கண்ணீரால் நிரம்பியது. ஆனால், அவர்கள் மனம் தளரவில்லை. எல்லோருடைய நாட்டத்திற்கு மேலால் அல்லாஹ்வுடைய நாட்டமும் சக்தியும் உள்ளது என்பதற்கு இச்சம்பவம் ஒரு சான்றாக அமைகிறது. எனவே, நீங்களும் மனம் தளர்ந்து விடாதீர்கள்!

அவ்வாறே, யூஸுப் நபி தன்னோடு சிறையில் இருந்த



மற்ற இருவரை விட சிறந்தவராக இருந்தும், அவருக்கு முன் அந்த இருவருமே விடுதலையடைந்து சென்று விட்டனர். விடுதலையடைந்த அவ்விருவரில் முதலாமவர் வேலைக்காரனாக இருக்க இரண்டாமவர் சிலுவையில் அறையப்பட்டார். இறுதியில், பல நாட்கள் சிறையில் காத்திருந்த யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் எகிப்தின் அமைச்சராகியதுடன் தன் தந்தையுடனும் இணைந்து கொண்டார்.

நிச்சயமாக அல்லாஹ் யாரையும் ஒருபோதும் மறந்து விடுவதில்லை. நல்லவர்களுடைய கூலியை வீணடித்து விடுவதும் இல்லை. அவன் யாவற்றிலும் மிகைத்தவன்.

உபா உவைஸ்- பத்துளு ஓயா

## சிந்திக்க சில வரிகள்

★ அவன் தான் நாடியவர்களுக்கு உணவளிப்பான். தான் நாடியவருக்கு கொடை கொடுப்பான். தான் நாடியவருக்கு நேர்வழி காட்டுவான்.

★ நீ மற்றவர்களின் திருப்திக்காக உனது பெற்றோர்களுடன் கோபப்படாதே! ஏனென்றால், ஏனையவர்கள் உனது வாழ்க்கையை கட்டியெழுப்ப தங்களது வாழ்வை அழித்துக் கொள்ள மாட்டார்கள்.

★ உங்களது தொழுகையை உள்ளங்களுக்கு அமைதியாகவும் உங்களது தௌபாவை பாவத்திற்கு மன்னிப்பாகவும் உங்களது துதிகளை பொய்யை நீக்குவதற்கும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

★ யாரிடம் பொருத்தமான சந்தர்ப்பங்களில் ஆரோக்கியம் இருக்கின்றதோ அதுதான் சந்தோஷம்.

★ யார் தாயை சொந்தமாக்கி அவரை வாழ்க்கை முழுவதும் கண்ணுங்கருத்துமாக கவனிக்கிறாரோ அவருக்கு கவலையே கிடையாது.

முர்ஷிதா ஜப்பார்தீன்- அகுரணை

## வினா- விடைப் போட்டி - 97

*01. யஃகூப் நபி தாம் இழந்த பார்வையை மீளப்பெற்ற சம்பவம் எந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது?*

*02. ஆலு இம்ரானில் முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதற்கு அல்லாஹ் கூறும் நிபந்தனைகள் எவை?*

*03. பேராசிரியர் ஹாபித் தப்பாஷி அவர்கள் எந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்?*

*04. அண்மையில் கொல்லப்பட்ட பிரபல காஷ்மீர் விடுதலைப் போராளி யார்?*

*05. ''மஆலாத்'' என்ற பதம் எதனைக் குறிக்கின்றது?*

**உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி ஆகஸ்ட் 22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**சிறுவர் பூங்கா**

அல்ஹஸனாத் 77, தெமடகொட வீதி, கொழும்பு-09

# இஷ்ராக் தொழுகையும் ழுஹா தொழுகையும் வேறுபட்ட தொழுகைகளா?

# குழந்தைக்கு ரூஹ் ஊதப்படுவது நாற்பது நாட்களிலா? நான்கு மாதங்களிலா?

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை. mufeer96@gmail.com

கேள்வி: இஷ்ராக் தொழுகையும் ழுஹா தொழுகையும் வேறுபட்ட தொழுகைகளா? அல்லது ஒரு தொழுகையைக் குறிக்கும் இரண்டு பெயர்களா?

✦ ழுஹா தொழுகையை சுட்டிக் காட்டுகின்ற மற்றுமொரு பெயரே இஷ்ராக் தொழுகை என்று சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். இருந்தபோதிலும் இரண்டு தொழுகைகளையும் சற்று உன்னிப்பாக அவதானிக்கின்ற போது இரு தொழுகைளும் வேறுபட்டவை என்பது தெளிவாகின்றது. ஏனெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஷ்ராக் தொழுகை பற்றி இவ்வாறு கூறினார்கள். ''யார் ஸுப்ஹ் தொழுகையை இமாம் ஜமாஅத்தாக தொழுது விட்டு பின்னர் அந்த இடத்தில் அமர்ந்தவாறு சூரியன் உதிக்கும் வரை அல்லாஹ்வை திக்ர் செய்து விட்டு, இரண்டு ரகஅத்துக்கள் தொழுகின்றாரோ அவருக்கு ஒரு ஹஜ்ஜும் ஒரு உம்ராவும் செய்த பூரணமான கூலி கிடைக்கும்.'' (அத்திர்மிதி)

இந்த ஹதீஸில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு ஹஜ்ஜும் ஓர் உம்ராவும் செய்த பூரணமான கூலியைப் பெற்றுத் தருகின்ற இரண்டு ரகஅத்துகளையும் பற்றி கூறும்போது அவர் ஸுப்ஹ் தொழுகையை இமாம் ஜமாஅத்தாக தொழ வேண்டும், தொழுத இடத்திலே அமர்ந்திருக்க வேண்டும், சூரியன் உதிக்கும் வரை அல்லாஹ்வை நினைவுகூர வேண்டும், பின்னர் இரண்டு ரகஅத்துகள் தொழ வேண்டும் என பல நிபந்தனைகளைக் கூறியிருக்கின்றார்கள். ஆனால், ழுஹா தொழுகையை தொழுதால் அதற்கு இந்த அளவு நன்மை கிடையாது. அதற்குரிய சிறப்பு மனித உடம்பில் முந்நூற்று அறுபது மூட்டுகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நாளும் ஸதகா செய்ய வேண்டும். ஆனால், ழுஹாவுடைய இரண்டு ரகஅத்துகளைத் தொழுதால் அது அந்த ஸதகாக்களுக்கு ஈடாகும். அதே போன்று ழுஹா தொழுகையுடைய நேரம் சூரியன் உதித்து முப்பது நிமிடங்கள் முதல் ழுஹர் நேரத்திற்கு முன் முப்பது நிமிடங்கள் வரையுள்ள நேரமாகும். ஆனால், இஷ்ராக் தொழுகை சூரியன் உதித்து ஒரு ஈட்டியளவு நேரம் தாமதித்ததன் பின்னர் தொடங்குகின்றது.

எனவே, இஷ்ராக் தொழுகையும் ழுஹா தொழுகையும் வேறுபட்ட தொழுகைகளாகும். எனவே, இஷ்ராக் தொழுகை சூரியன் உதித்து சிறிது நேரத்தில் தொழுகின்ற தொழுகையாகும். ழுஹா தொழுகை சூரியன் உதித்து சிறிது நேரம் முதல் ழுஹருக்கு சற்று முன்னுள்ள நேரத்துக்கு இடைப்பட்ட நேரம் வரை தொழப்படுகின்ற தொழுகையாகும்.

✦ நான்கு மாதங்களின் பின்னர்தான் கருவுக்கு ரூஹ் ஊதப்படுகின்றது என்று பல உரைகளில் கேட்டிருக்கின்றேன். இன்னும் சிலர் நாற்பது நாட்களில் ரூஹ் ஊதப்படுவதாக கூறுகின்றனர். இது பற்றிய சரியான விளக்கத்தை தர முடியுமா?

இது பற்றி புகாரி, முஸ்லிம் ஆகிய இரு கிரந்தங்களிலும் சிறிய மாற்றங்களுடன் மூன்று ஹதீஸ்கள் வந்திருக்கின்றன. புகாரியில் வந்துள்ள ஹதீஸை முஸ்லிமில் பதிவாகியிருக்கின்ற ஹதீஸ் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்திருக்கிறது. ஆனால், புஹாரியில் பதிவாகியிருக்கின்ற ஹதீஸ் மாத்திரம் கருத்திற் கொள்ளப்பட்டு அதற்கு ஏற்ப பலராலும் விளக்கம் முன்வைக்கப்படுவதால் நான்கு மாதங்களின் பின்னர்தான் கருவுக்கு ரூஹ் ஊதப்படுகின்றது என்ற கருத்து அன்றும் இன்றும் பரவிக் காணப்படுகின்றது. அது மாத்திரமல்லாமல், இதனை மையமாக வைத்து நான்கு மாதங்களுக்கு முன்பு அத்தியாவசியத் தேவையின்போது வைத்தியரின் ஆலோசனையுடன் கருவைக் கலைக்க முடியும் என பத்வாவும் வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், இது தொடர்பாக இரண்டு கிரந்தங்களிலும் வந்திருக்கின்ற ஹதீஸ்களையும் ஸூரதுல் முஃமினூனின் பன்னிரெண்டாவது வசனத்தையும் சேர்த்துப் பார்க்கின்றபோது கருவுக்கு நாற்பத்திரெண்டாவது நாளில் அல்லது ஆறாவது கிழமையில் ரூஹ் ஊதப்படுகின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கின்றார். ''உங்கள் படைப்பு உங்கள் தாயின் வயிற்றில் நாற்பது நாள்களில் ஒருங்கிணைக்கப்படுகிறது. பிறகு அதே போன்ற காலத்தில் (40 நாள்களில் அட்டை போன்று) ஒரு கருக்கட்டியாக மாறுகிறது. பிறகு அதே போன்ற காலத்தில் (மெல்லப்பட்ட சக்கை போன்ற) சதைப் பிண்டமாக மாறுகிறது. பிறகு அல்லாஹ் ஒரு வானவரை (அதனிடம்) அனுப்புகிறான். அந்த வானவருக்கு நான்கு கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. (அவை) 'அதன் (கருவாக இருக்கும் அந்த மனிதனின்) செயலையும் (அவனுடைய செயல்கள் எப்படியிருக்கும் என்பதையும்) அதன்

(56 ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்லாத்தை ஏன் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது?



மலையாள மூலம்: ஷெய்க் முஹம்மத் காரக்குன்னு
தமிழில்: ஜே. இஸ்ஹாக்

கேள்வி: இஸ்லாம் மிக உன்னத மதம் என்றும் அது மிகவும் எளிதாக நடைமுறைப்படுத்தக் கூடியது என்றும் கூறுகின்றீர்கள். இன்று உலகில் சுமார் 150கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். 50 க்கும் அதிகமான முஸ்லிம் நாடுகள் உள்ளன. அவ்வாறிருந்தும் ஏன் இஸ்லாத்தின் பூரண வடிவத்தை இன்று காண முடியாமல் இருக்கின்றது?

*மறுமொழி:* இஸ்லாம் ஒரு தெய்வீக வாழ்க்கை நெறியாகும். அது இவ்வுலகில் தனி மனித, சமூக, அரசியல் வாழ்க்கையில் வெற்றியடையக்கூடிய வழிகாட்டுதல்களையும் மறு உலக வெற்றிக்கான வழிகாட்டுதல்களையும் வழங்குகின்றது. தனி மனித வாழ்க்கையில் ஏற்படும் கடுமையான தகிப்பில் அவனைக் காப்பாற்றும் குடையாகவும், காரிருளில் வழிகாட்டும் ஒளி விளக்காகவும், அவனது தோல்விகளில் அவனைத் தூக்கிவிடும் துணையாகவும், இன்பங்களில் அவனைக் கட்டுப்படுத்தும் கடிவாளமாகவும், துன்பங்களின்போது துயர் துடைக்கும் துணைவனாகவும், வலிகளின்போது அன்பு தடவும் ஔடதமாகவும் அது இருக்கின்றது. வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளையும் தெளிவான திசையையும் அது நல்குகின்றது. பரபரப்பிற்கு அது ஓய்வு கொடுக்கின்றது. குடும்ப வாழ்க்கையில் சாந்தியையும் இணக்கத்தையும் உத்தரவாதப்படுத்துகின்றது. எனவே, தனி மனித வாழ்வில் இஸ்லாம் நடைமுறைப்படுத்தப்படும் போது அது அவனுக்கு வெற்றியைக் கொடுப்பதோடு மறுமையில் நரக நெருப்பிலிருந்து அவனைப் பாதுகாத்து சுவன வாழ்வை உறுதிப்படுத்துகின்றது. இந்த விடயங்கள் யாவும் கடந்த 14 நூற்றாண்டுகளாக அழகாகவும் தொடர்ச்சியாகவும் இஸ்லாம் நடைமுறை சாத்தியமாக்கியுள்ளது. இன்றைய கால கட்டத்திலும் கூட பல கோடி முஸ்லிம்களிடம் இந்த வெற்றிகரமான வாழ்க்கையைப் பார்க்க முடியும்.

ஒரு விடயம் நல்லதாகவும் பயனுள்ளதாகவும் சிறந்ததாகவும் இருக்கின்ற ஒரே காரணத்துக்காக மக்கள் அனைவரும் அதனை ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறுவதற்கில்லை. சிகரட் புகைப்பது தீங்கானது, கொடிய நோய்களை உண்டாக்க வல்லது என்று தெரியாதவர் யார்தான் இருக்கின்றார்? ஆயினும், பல மில்லியன் மக்கள் புகைத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்! மதுபானத்தின் தீங்குகள் பற்றி பேசாதவர் யார்தான் இருக்கின்றார்கள்? மது மூளையைப் பாதிக்கின்றது, இதயத்தைப் பழுதடையச் செய்கின்றது, குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் தேசிய வாழ்விலும் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது என்றெல்லாம் தெரியாமல் யாராவது இருக்கின்றார்களா? என்றாலும்கூட மக்கள் இதற்காக கோடிக் கணக்கான பணத்தை செலவிட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்!

எனவே, எத்தனை பேர் ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பதை வைத்து அல்ல ஒன்றை நல்லது அல்லது கெட்டது, பயனுள்ளது அல்லது பயனற்றது, நன்மையானது, தீங்கு விளைவிக்கக் கூடியது என்று தீர்மானிக்க வேண்டியது. மாறாக, ஒன்று நல்லதாகவும் அதனை நடைமுறைப்படுத்துவதனால் நன்மை விளையும் என்றுமிருந்தால் அதனை ஏற்றுக் கொள்வதும் ஒன்று தீயதாயும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகவும் இருந்தால் அதனை நிராகரிப்பதுவுமே சரியான அளவுகோலாகும். இந்த அடிப்படையில் நோக்கும்போது இஸ்லாத்தின் சமூக, பொருளாதார, நிர்வாக, அரசியல் விடயங்கள் நடை

> இஸ்லாம் வெறுமனே ஓர் அரசியல் நிர்வாகக் கோட்பாடு மாத்திரமல்ல. அது மனிதனை இறைவனின் தண்டனையிலிருந்து காப்பாற்றி இறைவனின் வெகுமதியான சுவனத்தைப் பெற்றுக் கொடுக்கும் இறுதி இலக்கைக் கொண்டிருக்கின்றது. அத்துடன் தனி மனிதனில் அமைதியான வாழ்வையும் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் சமூக வாழ்வில் சௌஜன்யத்தையும் அது உத்தரவாதப்படுத்துகின்றது. இந்த இலட்சியம் முஸ்லிம் சமூகத்தில் கடந்த 14 நூற்றாண்டுகளாக தொடர்ந்து நிலைநாட்டப்பட்டிருக்கின்றது.

முறைப்படுத்தப்பட்டபோது அவை மனித சமுதாயத்துக்கு மகத்தான நற்பலன்களை நல்கியுள்ளன என்பதை உலகம் கண்டிருக்கின்றது. பகுதியாக அமுல்படுத்தும்போது பகுதியான விளைவும் முழுமையாக அமுல்படுத்தும்போது முழுமையான விளைவும் பெறப்படும்.

**சோஷலிஸக் கொள்கையின் தோல்வியைப் போலத்தானே இஸ்லாத்தின் வீழ்ச்சியும் உள்ளது?**

**கேள்வி: நீங்கள் சோஷலிஸத்தின் தோல்விக்குக் காரணம் அக்கோட்பாட்டிலுள்ள குறைபாடுதான் என்று பிரசாரம் செய்கின்றீர்கள். அதேவேளை இஸ்லாத்தைப் பற்றிக் கூறும்போது மட்டும் இஸ்லாமியக் கோட்பாட்டிலுள்ள குறைபாடுதான் அதன் தோல்விக்குக் காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றீர்கள். இது முரண்பாடல்லவா?**

*மறுமொழி:* சோஷலிஸத்தின் வீழ்ச்சியும் இஸ்லாமிய ஆட்சியின் வீழ்ச்சியும் சிலவேளை ஒன்று போலத் தோன்றக் கூடும். ஆனால், வெளிப்படையாகவே இரண்டுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன. இரண்டினதும் கொள்கைகள், அறைகூவல்கள், வரலாற்றுப் பாடங்கள், நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றில் தெளிவான வேறுபாடுகள் இருப்பதை இவை இரண்டையும் ஆராயும் ஒருவர் இலகுவில் கண்டு கொள்வார். இவற்றைப் பின்வருமாறு எடுத்துக் கூறலாம்:

1. கம்யூனிஸத்தின் இலட்சியம் வர்க்க வேறுபாடு அற்ற சமூகத்தை உருவாக்குதல் என்று அதன் கோட்பாட்டு நூற்கள் கூறுகின்றன. ஏ.ஐ. லெனின் சொன்னது போல ஆளுபவரும் ஆளப்படுபவரும் கிடையாது. தலைவரோ தொண்டரோ கிடையாது. பொலிஸோ நீதிமன்றமோ இராணுவமோ கிடையாது. ஆனால், இத்தகைய ஒரு சமூகம் சரித்திரத்தில் எங்கும் இருந்ததில்லை! அதாவது, மார்க்சிஸமோ அல்லது கம்யூனிஸமோ ஓர் ஒற்றை நிமிடம் கூட உலகில் இருக்கவோ உருவாகவோ இல்லை!! ஆனால், இஸ்லாத்தின் நிலை இதற்கு முற்றிலும் மாற்றமானது. அது பூரணமாக வரலாற்றில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இஸ்லாத்தின் மூலம் உலகம் அடைந்த நன்மைகளுக்கு ஈடாக எதுவுமில்லை! வரலாற்றில் இவற்றுக்குத் தெளிவான சான்றுகள் உள்ளன.

2. கம்யூனிஸத்தின் எஜமானர்கள் அதனை எப்படி அறிமுகப்படுத்தினார்கள் தெரியுமா? கம்யூனிஸம் ஏற்படுவதைத் தவிர்க்கவே முடியாது. மழை உருவாவதுபோல அது இயற்கையானது. முதலில் முதலாளித்துவம் இருந்தது. பின்னர் சோஷலிஸம் தோன்றும். பின்னர் சமூகப் பரிணாமத்தினூடாக கம்யூனிஸம் மிளிரும். இதனை யாராலும் எந்த விதத்திலும் தடைசெய்ய முடியாது என்றெல்லாம் சவால் விட்டார்கள். ஆனால், என்ன நடந்தது? இதன் தலைகீழ் அல்லவா நடந்தது! சோஷலிஸ நாடுகள் தோல்வியடைந்து முதலாளித்துவத்தை நோக்கி அல்லவா சென்றன!?

அதேவேளை, இஸ்லாம் எந்த இடத்திலும் தன்னை, தானாக ஏற்படுவதாக அறிமுகப்படுத்தவே இல்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கும் அதனை நிராகரிப்பதற்கும் மனிதனுக்கு செயல் சுதந்திரம் இருப்பதாக இஸ்லாம் கூறுகிறது. அது ஓர் இலட்சியக் கொள்கையாகும். மக்கள் விரும்பி அதனை ஏற்றுக் கொள்ளும்போதும் உரிய சூழல் உருவாகும்போதுமே அதனை நடைமுறைப்படுத்த முடியும். அனைத்துக்கும் மேலாக அல்லாஹ்வின் நாட்டம் அதனோடு சேர வேண்டும். அவ்வாறில்லாதபோது அது கோட்பாட்டு ரீதியாக மாத்திரம் இருக்கும். இஸ்லாம் எந்த இடத்திலும் தன்னைப் பற்றிக் கூறாத ஒன்றை வைத்து அதனை விமர்சிப்பது நீதியானதல்ல.

3. கம்யூனிஸத்தை நோக்கிய படிக்கல்லாக சித்திரிக்கப்பட்ட சோஷலிஸ நாடுகள், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றைப் பன்மடங்காகப் பெருக்கி விட்டன. ஆட்சியாளர்கள் மக்களை இயந்திரங்களைப் போல வேலை வாங்கினர். அவர்களின் அடிப்படை உரிமைகள்கூட மறுக்கப்பட்டன. இதனால் மக்கள் சோஷலிஸத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்து புரட்சி செய்தனர். இதனால் சோஷலிஸம் சாக்கடையில் போடப்பட்டு இந்த நாடுகள் முதலாளித்துவத்தை நோக்கி திரும்ப வேண்டி ஏற்பட்டது.

அதேவேளை, இஸ்லாமிய அரசியல் கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டபோது மக்களின் உரிமைகள் உத்தரவாதம் அளிக்கப்பட்டு அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. அமைதியான ஒரு சமூக சூழல் தோன்றியது. இதனால் மக்கள் இஸ்லாத்தை அமுல் நடத்துவதை விரும்பினார்கள். நான்கு கலீஃபாக்கள் காலத்தில் ஆட்சியாளரும் மக்களும் இஸ்லாத்தை அமுல் நடத்துவதை விரும்பினார்கள். ஆயினும், இதன் பின்னர் ஆட்சியாளர் இஸ்லாமிய அரசியலை அமுல்நடத்தாது தாம் விரும்பியவாறு ஆட்சி செய்யத் தொடங்கினார்கள். உமையா, அப்பாஸிய ஆட்சியாளர்கள் இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டிலிருந்து பிசகினார்கள். ஆயினும், அப்போதும் மக்கள் இஸ்லாமிய ஆட்சிமுறையையே விரும்பினார்கள். இன்றைய நிலையும் கூட இதற்கு விதிவிலக்கல்ல! எகிப்து, அல்ஜீரியா, சஊதி அரேபியா போன்ற முஸ்லிம் நாடுகளில் மக்கள் இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டின்படி ஆட்சி அமைவதையே விரும்புகிறார்கள். (மேற்படி சில நாடுகளில் நடந்த தேர்தல்களின் முடிவுகள் இதனை நன்கு தெளிவுபடுத்துகின்றன.) ஆயினும், ஏற்கனவே ஆட்சியிலிருந்த ஆட்சியாளர்கள் மக்களின் முடிவுக்கு விரோதமாக இஸ்லாமிய கட்சிகளை நசுக்குவதற்கு பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அடக்குமுறைகளைக்

கையாளுகின்றனர். இராணுவ பலத்தையும் இதற்காகப் பயன்படுத்துகின்றனர். மேலும் மேற்குலக முதலாளித்துவ நாடுகள் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் இவர்களுக்கு ஆதரவும் உதவியும் நல்குகின்றன.

சோஷலிஸ நாடுகளில் மக்கள் சோஷலிஸக் கொள்கைக்கு எதிராகப் போராடுகிறார்கள். ஆயினும், ஏற்கனவே ஆட்சியில் அமர்ந்துள்ள ஆட்சியாளர்கள் மக்களின் எழுச்சியை அடக்கி ஒடுக்க முயற்சிக்கின்றார்கள். இது இஸ்லாமிய முறைக்கும் கம்யூனிஸத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

4. வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றினால் மக்களுக்கு பாதுகாப்புக் கிடைக்கின்றது. அவற்றை மீறும்போது விபத்துக்களுக்கு காரணமாக அமைகின்றன. மக்கள் சிலபோது அவற்றை மீறி நடக்கின்றார்கள். மீறி நடப்பது அவர்களுக்கு தீங்காக அமைகின்றன. இஸ்லாமிய கோட்பாடுகளையும் இவ்வீதிப் போக்குவரத்து விதிமுறைகளுடன் ஒப்பிடலாம். ஏற்றுப் பின்பற்றுவது நன்மை விளைவிக்கும். மீறுவது துன்பம் விளைவிக்கும். மக்களிடமே தெரிவு செய்யும் சுதந்திரம் இருக்கின்றது.

5. நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது பிரசாரத்தின் ஆரம்ப கட்டத்தில் தாங்கள் ஒடுக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்ட காலத்திலேயே தமது தோழர்களிடம் பொறுமையாக இருக்குமாறும் ஒரு காலம் வரும், அப்போது ஸன்ஆ முதல் ஹளரமௌத் வரை ஒரு பெண் தன்னந்தனியாகப் பிரயாணம் செய்யக் கூடிய பாதுகாப்பான சூழல் ஏற்படும் என்றும் கூறினார்கள். இந்த முன்னறிவிப்பு சற்றும் பிசகாது அப்படியே நிறைவேறியதாக வரலாறு சான்று பகர்கின்றது. இதேபோல தமக்கும் நான்கு கலீஃபாக்களுக்கும் பின்னர் ஆட்சியாளர்கள் இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டின்படி ஆட்சி செய்வதிலிருந்து பிறழ்ந்து நடப்பார்கள் என்றும் முன்னறிவிப்புச்செய்தார்கள். இதுவும் அவ்வாறே நிறைவேறியது. இவை இஸ்லாத்தின் சத்தியத்தையும் தெய்வீகத் தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், கம்யூனிஸம் குறித்து மார்க்ஸ் கூறிய எந்த முன்னறிவிப்பும் நிறைவேறாததுடன் அவற்றுக்கு முற்றிலும் மாற்றமான நிகழ்வுகளே ஏற்பட்டன.

6. இஸ்லாம் மீளமீள நிலைநாட்டப்படக்கூடிய அரசியல் முறையாகும். உலகின் எந்த சூழலிலும் எந்தப் பிரதேசத்திலும் அது மீள நிலைநாட்டப்படக் கூடிய இயல்பைக் கொண்டுள்ளது. நான்கு கலீஃபாக்களின் பின்னரும் கூட அது பல இடங்களில் முழுமையாக அமுல்நடத்தப்பட்டதற்கு வரலாற்று சான்றுகள் உள்ளன. அதாவது, ஒரு சந்தர்ப்பத்தில் அது தோல்வி கண்டது என்றால், வேறு பல சந்தர்ப்பங்களில் அது மீளநிலை நாட்டப்பட்டிருக்கின்றது. எனவே, இஸ்லாமிய அரசியல் முறை எப்போதோ தோல்வி கண்டு விட்டது. மீண்டும் வர முடியாது என்று சொல்வது சரியல்ல.

7. இஸ்லாம் கூறும் முழுமையான அமைப்பில் தனித்துவமான இஸ்லாமிய ஆட்சிமுறை நான்கு கலீஃபாக்களின் பின்னர் இருக்கவில்லை என்பது உண்மைதான். ஆயினும், 1924 வரை உஸ்மானிய கிலாஃபத்தின் கடைசி ஆட்சியாளர்வரை அது பகுதியாகவோ குறைவாகவோ அல்லது முழுமையாகவோ அமுல்நடத்தப்பட்டிருக்கின்றது. இன்றும்கூட பகுதியாகவாவது இஸ்லாமிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் நாடுகளில் மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்கவே செய்கின்றனர். எவ்வாறாயினும், கடந்த 14 நூற்றாண்டுகளாக, இஸ்லாமிய சட்டங்களே எமக்குத் தேவையில்லை என்று முற்று முழுதாக மக்கள் புறக்கணித்ததாக எந்த ஒரு நிகழ்வும் எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் நடைபெறவே இல்லை. ஆனால், குறுகிய ஒரு காலத்துக்கு நடத்தப்பட்ட பரீட்சார்த் தத்தின் பின்பு முழு மக்களுமே சோஷலிஸத்தை முற்றாகவே நிராகரித்து விட்டார்கள். கிழக்கு ஐரோப்பா நாடுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன. மக்கள் சோஷலிஸத்தை கை கழுவி சோஷலிஸத்துக்கு முற்றிலும் எதிரான முதலாளித்துவத்தைத் தழுவியிருக்கின்றார்கள்.

> இஸ்லாம் மீள மீள நிலைநாட்டப் படக்கூடிய அரசியல் முறையாகும். உலகின் எந்த சூழலிலும் எந்தப் பிரதேசத்திலும் அது மீள நிலைநாட்டப்படக் கூடிய இயல்பைக் கொண்டுள்ளது. நான்கு கலீஃபாக்களின் பின்னரும் கூட அது பல இடங்களில் முழுமையாக அமுல்நடத்தப்பட்ட தற்கு வரலாற்று சான்றுகள் உள்ளன. அதாவது, ஒரு சந்தர்ப்பத்தில் அது தோல்வி கண்டது என்றால், வேறு பல சந்தர்ப்பங்களில் அது மீளநிலை நாட்டப்பட்டிருக்கின்றது. எனவே, இஸ்லாமிய அரசியல் முறை எப்போதோ தோல்வி கண்டு விட்டது. மீண்டும் வர முடியாது என்று சொல்வது சரியல்ல.

8. இஸ்லாம் வெறுமனே ஓர் அரசியல் நிர்வாகக் கோட்பாடு மாத்திரமல்ல. அது மனிதனை இறைவனின் தண்டனையிலிருந்து காப்பாற்றி இறைவனின் வெகுமதியான சுவனத்தைப் பெற்றுக் கொடுக்கும் இறுதி இலக்கைக் கொண்டிருக்கின்றது. அத்துடன் தனி மனிதனில் அமைதியான வாழ்வையும் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் சமூக வாழ்வில் சௌஜன்யத்தையும் அது உத்தரவாதப்படுத்துகின்றது. இந்த இலட்சியம் முஸ்லிம் சமூகத்தில் கடந்த 14 நூற்றாண்டுகளாக தொடர்ந்து நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. இன்றும் முஸ்லிம் சமூகத்தில் இது நடைமுறையில் இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் மறுமை நாள் வரை இது தொடரவும் செய்யும். ஆனால், கம்யூனிஸத்துக்கு இந்த எந்த இயல்பும் ஓரிடத்திலும் எந்தக் காலத்திலும் இருந்தது கிடையாது.

# காஷ்மீர்: குருதி வழியும் தேசம்!

அபூஷேக் முஹம்மத்

சர்வதேச அளவில் காஷ்மீர் ஒரு பிரச்சினைக்குரிய மாநிலம் ஆகும். காஷ்மீர் குறித்த செய்திகளை இந்திய ஊடகங்கள் தொடர்ந்து மறைக்கின்ற வேளையில், காஷ்மீரிகள் கடந்த 70 வருடங்களாக பலதரப்பட்ட சித்திரவதைகளுக்கு ஆளாகும் தருணத்தில், தற்போது இந்திய ஊடகங்களிலும் வலைத்தளங்களிலும் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் தளபதி புர்ஹான் வானியின் இறப்பு கவனிக்கப்படுகின்ற செய்தியாக மாறியுள்ளது.

அவரது இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட 3 இலட்சத்திற்கும் அதிகமான காஷ்மீர் மக்கள் தமது விடுதலை உணர்வுகளை துணிச்சலாக வெளிப்படுத்தினார்கள். காஷ்மீர் மக்களின் இத்தகைய விடுதலை உணர்வே இராணுவத்திற்கும் பொது மக்களுக்குமிடையே மோதல் வெடிக்க பிரதான காரணம்.

இது இந்தியாவின் அரசியல் பிரச்சினையா அல்லது அடக்குமுறைக்கு உள்ளான காஷ்மீர் மக்களின் உணர்வுப் பிரச்சினையா என்பதை விரிவாக நோக்குவோம்.

### புர்ஹான் வானி படுகொலையும் தொடர் சம்பவங்களும்

ஒரு மிகப் பெரிய புரட்சி ஏற்படக் காரணமாக இருந்தது. காஷ்மீரின் பூம்தூர் கிராமப் பகுதி 22 வயது புர்ஹான் வானி வீர மரணம் அடைந்த இடம் என்பதால் கடந்த 08.07.2016 முதல் அது மிகவும் பிரபலம் ஆனது. புர்ஹான் வானி உட்பட கொல்லப்பட்ட மூன்று நபர்களும் கொல்லப்பட்டவர்களில் ஒருவரான சர்தாஜ் அவர்களின் உறவினர் வீட்டில் வியாழன் இரவு மற்றும் வெள்ளிக்கிழமை பகல் பொழுதில் தங்கி இருந்துள்ளனர்.

ஜுலை 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் இராணுவம் பெரிய அளவில் குவியத் தொடங்கி இருக்கிறது. முதலமைச்சர் மெஹ்பூபா வருவதால் பாதுகாப்புக் காரணம் கருதியே இந்த நடவடிக்கை என இராணுவத்தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

மதியம் 4 மணியாகும்போது இராணுவ வீரர்கள் அதிகரிக்கத் தொடங்கினர். மூவரும் ஒருவர் பின் ஒருவராக பதுங்கத் திட்டமிட்டுள்ளனர். மாலை 5.30 மணியளவில் சர்தாஜ் வெளியே வரும்போது சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். சூழ்ச்சி வலை அறிந்த புர்ஹான்வானியும் மற்றவரும் தப்பிக்கும் போது அவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

புர்ஹான் வானி தனது 15 வயதில் ஆயுதம் ஏந்தியவர். மற்ற போராளிகளைப்போல அல்லாமல் முகத்தை மறைக்காமல் இருந்தார். சமூக வலைத்தளமான முகநூலில் தனது வீடியோக்களை பதிவேற்றம் செய்து



தனது கொள்கையைப் பரப்பி காஷ்மீர் வாலிபர்களுக்கு மத்தியில் கதாநாயக னாக போற்றப்பட்டவர்.

புர்ஹான் வானி கொல்லப்பட்ட செய்திகாட்டுத்தீபோல்காஷ்மீர்முழுக்க பரவுகிறது. பொது மக்கள் வெகுண் டெழுந்து இராணுவம் மீது கல் எறிந்து தாக்குதல் நடத்துகிறார்கள். இந்தியா வின் ஆக்கிரமிப்பில் இருக்கும் காஷ் மீர் முழுதும் போர்க்களம் ஆனது. ஆங் காங்கே வன்முறை வெடித்ததும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

காஷ்மீர் மக்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் போராடி வந்தனர். சனிக்கிழமை காலை வானிக்கு ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டது. புர்ஹான் வானியின் ஜனாஸா தொழு கையில் கலந்து கொண்டவர்கள் எண் ணிக்கை 3 இலட்சம் ஆகும். ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ளாதவர் கள் கொல்லப்பட்ட புர்ஹான் வானிக் காக அடுத்தடுத்து 50 முறை ஜனாஸா தொழுகை நடத்தி உள்ளார்கள். அன் றைய தினம் மட்டும் இராணுவத்தால் 15 பேர்கள் கொல்லப்பட்டனர். 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காவல் நிலையம், இராணுவ சோதனைச்சாவ டிகள் கொளுத்தப்பட்டன; மொபைல் சேவைகள் நிறுத்தப்பட்டன.

## அல்ஜஸீரா பத்திரிகையாளர் விளக்கும் காஷ்மீர் மக்களின் வலிகள்

அல்ஜஸீரா பத்திரிகையாளர் ஷாஹித் ரபீக் தான் கண்ட காட்சிகளை விளக்கும்போது, ''வீதி எங்கும் துப் பாக்கிச்சூட்டின் சப்தங்களும் அம்பியூ லன்ஸ் வாகனத்தின் ஒலியும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தன. 5 நாட்களாக பத்திரிகையாளர்கள் யாரும் செல்லவில்லை. காரணம் இராணுவம் மீது பயம் என்பதை விட மக்கள் மீது பயம் என்று கூட கூறலாம். ஏனெனில், மீடியாக்கள் உண்மைச் செய்திகளை சேகரித்து விட்டு உண்மைக்கு புறம்பா னவற்றை பரப்பும் என்ற ஆத்திரத்தில் மக்கள் இருந்தமையால் யாரும் அங்கே செல்லவில்லை.''

> காஷ்மீர் மக்களின் விருப்பத்தையும் அவர்கள் எடுக்கும் தீர்மானத்தையும் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மக்களை கொடுமைப்படுத்தும் இராணு வங்களை முற்றாக அகற்ற வேண்டும். நிராயுதபாணிகளாக வாழும் காஷ்மீர் மக்கள் மீது அதிகார வர்க்கம் புரியும் கொலைகள், கற்பழிப்பு அக்கிரமங்கள், சித் திரவதைகள் போன்றவற்றுக்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்துள்ள கடுமையான சட்டங்களான **AFSPA** மற்றும் **Public Safety Act** என்பன முழுமையாக இரத்து செய்யப்பட வேண்டும்.

பத்திரிகையாளர் ஷாஹித் ரபீக் தனது சக தோழருடன் மிகுந்த சிரமத் திற்கு மத்தியில் 22 வயது புர்ஹான் வானி ஷஹீதான பூம்தூர் கிராம பகுதிக்கு சென்றபோது மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வந்த மூதாட்டி சாரா பேகமிடமிருந்து (வயது 79) கிடைத்த தகவல்கள் கண்களைக் கசிய வைத்தன.

மூதாட்டி சாரா வீட்டில் இருக்கும் பொழுது அவரது பேரன் போராட்டத் தில் கலந்து கொண்டதாக கூறி பொலி ஸார் தேட ஆரம்பித்தார்கள். வயது முதிர்ந்த சுகயீனமுற்றிருந்த மூதாட்டி என்று கூட பாராமல் அவரை கடுமை யாக தாக்கி இருக்கின்றார்கள். அவர்க ளில் ஒருவன் அந்த மூதாட்டியின் மார்பை பிடித்து இழுத்தான் என்று கூறும் பொழுதே காஷ்மீர் இராணுவத்தின் அக்கிரமங்களின் அளவுகோல் உல கிற்கு எளிதாக புரிந்து விடும்.

வீட்டில் உள்ள அனைவரையும் கடு மையாக தாக்கி, பெண்களை சித்திர வதை செய்துள்ளனர். ''என் தங்கையை என் கண் முன்னே நிர்வாணப்படுத்தி ரசித்தனர்'' என்று மூதாட்டியின் பேரன் 15 வயது சிறுவன் உமர் கூறுகையில் உள்ளம் பதறுகின்றது. அவன் தங்கை கண்முன்னே நிர்வாணப்படுத்தப்பட்ட கொடுமையைக் கண்ட அதிர்ச்சியில் மூன்று நாட்களாக தூங்காமல் தவித்தி ருக்கின்றான்.

உமரின் சிந்தனை முழுக்க அந்த பொலிஸ்காரனை கொலை செய்து பழி தீர்க்க வேண்டும் என்பதே. இத் தூண்டுதல் ஆழமாக பதிய காஷ்மீர் காவல்துறை காரணமாகி இருக்கின் றது. இந்த சம்பவத்திற்கு பிறகு வாழ் நாளில் முதன் முறையாக போராட்டத் தில் கலந்து கொள்கிறான் உமர். காஷ் மீரில் ஆயிரமாயிரம் உமர்கள் உருவா காமல் இருப்பார்களா என்ன?

காஷ்மீர் மருத்துவமனையில் 46 வயது பெண்மணி மசூதா. நான்கு பிள் ளைகளின் தாய் அவர். கடைசி மக ளுக்கு 7 வயது ஆகிறது. அவர்கள் தெரு வில் நடந்து சென்றபோது பொலிஸ் மற்றும் CRPF வீரர்கள் அந்தப் பெண் மணிக்குதுப்பாக்கிச்சூடு நடத்தியிருக் கிறார்கள். துடிதுடித்து கீழே விழுந்தார் அவர். வலி தாங்க முடியாமல் அலறும் அந்தப் பெண்ணை பொலிஸார் தடியி னால் தாக்குகிறார்கள். அவரை காப் பாற்ற வந்த கணவன் மற்றும் பிள்ளை கள் மீது தாக்குதல் நடந்தேறியது. மயங் கிய மசூதா கண் விழித்துப் பார்க்கும் போது மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டிருந்தார்.

இப்படி நூற்றுக்கணக்கான சம்ப வங்கள். தாக்குதலில் படுகாயமடைந் தவர்களின் நிலை பரிதாபகரமாக உள் ளது. மருத்துவமனைக்கு வெளியே இலவச மருத்துவ முகாமில் சேவை செய்து வந்த ஜுபைர் என்பவரை சந் தித்து உரையாடும்போது தன் சட் டையை உயர்த்தி காட்டினார். உடல் முழுவதும் சிறு சிறு துளைகள். ''புர் ஹானின் இறுதி ஊர்வலம் நடத்தி னோம். அதற்கு இராணுவம் பெல்லட் குண்டுகளால் தாக்கியதால் வந்த காயம் இது'' என்றார். ''நாங்கள் சட்ட திருத்தத்தை கேட்கவில்லை. புலன் விசாரணை நடத்த வலியுறுத்தவில்லை. நாங்கள் கேட்பது காஷ்மீரின் சுதந்தி ரம்'' என்கிறார்.

## காஷ்மீர் மாணவியின் கண்களைப் பறித்த இந்திய இராணுவம்

கிரேட்டர் காஷ்மீர் பத்திரிகையாளர்கள் அளித்த செய்தியின்படி, ஜுலை 12 ஆம் நாள் அன்று அவரது வீட்டுக்கு வெளியே இந்திய இராணுவம் நடத்திய பெல்லட் குண்டு தாக்குதலில் ஜன்னல் வழியே பாய்ந்த குண்டுகள் 14 வயது மாணவி இன்ஷா மாலிக்கின் முகத்தை சிதைத்தது.

மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட இன்ஷாவின் வலது கண் வெளியே வந்து விட்டது. இடது கண் முற்றிலும் செயலிழந்து சிகிச்சை பயனளிக்கவில்லை. பெல்லட் குண்டுகள் எடுக்க முடியாத அளவுக்கு முகத்தில் ஆழமாக பதிந்து விட்டன.

## சிறுநீர் புகட்டிய காஷ்மீர் காவல்துறை

காஷ்மீர் ரீடர் பத்திரிகையாளர்கள் அளித்த செய்தியின்படி, காஷ்மீரில் குலகாம் மாவட்டத்தில் துலினோவ்பொறா என்ற பகுதியில் பெரோஸ் அஹ்மத் ஷாவிற்கு நேர்ந்த கொடுமையானது இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் தொடர் அட்டூழியங்களின் கொடூரத்தை எடுத்துக் காட்டப் போதுமானது.

பெரோஸ் அஹ்மத் ஷாவின் புதல்விகள் புர்ஹான் வானியின்படுகொலை எதிர்ப்பு, பேரணியில் கலந்து கொண்டனர். அப்போது வீட்டினுள் இருந்த பெரோஸ் வெளியே வந்து, காவல் துறை அதிகாரிகள் தொல்லை கொடுக்கலாம் என்று கருதி வீட்டிற்குள் வருமாறு தனது பிள்ளைகளை அழைத்தார்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த காவல்துறையினர் பெரோஸ் அஹ்மத் ஷாவின் வீட்டை முற்றுகையிட்டு அவரை கொடுமைப்படுத்த தொடங்கினர். அவரின் ஆடைகளை களைந்து நிர்வாணப்படுத்தி வீதியில் இழுத்துச் சென்றனர். பெரோஸ் அஹ்மத் ஷாவின் கால்களைப் பிடித்து இழுத்துக்கொண்டும் தரையில் தேய்த்துக் கொண்டும் 500 மீற்றர் தூரத்திற்கு சுற்றி வலம் வந்தனர். தாகத்தால் கெஞ்சிய பெரோஸ் காவல்துறை அதிகாரிகளிடம் ''இறைவனுக்காக எனக்கு குடிப்பதற்கு தண்ணீர் கொடுங்கள்'' என்று கேட்டுள்ளார்.

ஒரு போத்தல் சிறுநீரை பெரோஸ் அஹ்மத் ஷாவின் முகத்தில் தெளித்த இராணுவத்தினர், பின் பகுதியில் குச்சியை விட்டு குத்தியதால் சுயநினைவு இழந்து துடிதுடித்து சுருண்டு விழுந்துள்ளார் அஹ்மத் ஷா. இரண்டு நாட்கள் கழிந்தே அவருக்கு நினைவு திரும்பியிருக்கிறது.

காவல்துறை அதிகாரிகள் பெரோஸ் அஹ்மத் ஷாவை உரிய மருத்துவம் செய்ய அனுமதிக்கவில்லை. அவரின் மனைவி மற்றும் காஷ்மீர் மக்கள் அவரை விடுதலை செய்யுமாறு காவல் துறை அதிகாரிகளிடம் கெஞ்சி இருக்கின்றார்கள். அதற்கு அதிகாரிகள் ''அவர் உயிரோடு விடப்பட்டதே அவரின் அதிர்ஷ்டம். அவர் மீது இன்னும் வழக்குப் பதியவில்லை'' என்று அதிகார கர்வத்தில் எள்ளி நகையாடி உள்ளனர்.

## இந்திய அரசின் நிறைவேறாத வாக்குறுதி

இந்திய இராணுவத்தின் அடக்குமுறைகளுக்கும் காஷ்மீர் மக்களின் போராட்டத்திற்கும் காரணம் காஷ்மீர் மக்களுக்கு இந்திய அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையே ஆகும். விடுதலைக்குப் பிறகான கால கட்டத்தில் இந்திய ஒன்றியத்துடன் பல சிற்றரசுகள் வல்லபாய் படேல் அவர்களால் இணைக்கப்பட்டன. இந்து மதத்தை சேர்ந்த ஒருவரை மன்னராகக் கொண்ட காஷ்மீரையும் இணைக்கத் திட்டமிட்டார்கள். இணைய மறுத்த காஷ்மீருக்கு இராணுவம் அனுப்பப்பட்டது. காஷ்மீர் மக்கள் அதனை எதிர்கொள்ளத் தயாரானார்கள்.

குறிப்பிட்ட காலம் இணைந்திருக்க வேண்டும்; பிறகு ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படும். அந்த வாக்கெடுப்பில் காஷ்மீர் தனியாக பிரிந்து செல்வதா; இந்தியாவுடன் நீடிப்பதா அல்லது பாகிஸ்தானுடன் இணைவதா என்று பெரும்பான்மை மக்களின் முடிவு செயல்படுத்தப்படும். அதுவரைக்கும் காஷ்மீருக்கு சில சலுகைகள் உண்டு. அங்கு பிற மாநிலத்தவர் சொத்து வாங்க முடியாது. காஷ்மீர் அரசு அலுவலகங்களில் காஷ்மீர் தனி தேசியக் கொடி பறக்கலாம். இதுபோல் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

இதற்கிடையே காஷ்மீரின் கால்வாசிப் பகுதியை சீனா ஆக்கிரமித்தது (COK-China Occupied Kashmir). பாகிஸ்தான் கால்வாசிப் பகுதியை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அப்பகுதியை ''ஆசாத் காஷ்மீர்'' என்று அறிவித்தது (POK - Pakistan Occupied Kashmir). இதற்கு பாகிஸ்தான் அரசு தேர்தல் நடத்தும். மக்கள் ஆசாத் காஷ்மீரின் பிரதமரைத் தேர்ந்தெடுப்பார்கள். மீதி பகுதி மட்டும் காஷ்மீர் மாநிலமாக, வேறு வார்த்தைகளில் IOK - India Occupied Kashmir என்று தொடர்கிறது. இங்கு மட்டும் 6 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும்.

## இந்திய சுதந்திரத்திற்கு பிறகு காஷ்மீர்!

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து சென்ற நாள் முதல் இந்திய ஆக்கிரமிப்பு படையினரின் கையில் சிக்கி இன்று வரை தவிக்கின்றது காஷ்மீர்.

முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ள ஜம்மு காஷ்மீர் பகுதியை இந்தியப் படையினர் பொது நீதிக்கு எதிராகவும் மற்றும் காஷ்மீர் மக்களின் சுய முடிவுக்கு எதிராகவும் செயல்பட்டார்கள். காஷ்மீர் மக்களை நிர்ப்பந்தித்து இந்தியாவுடன் இணைத்துக் கொண்டார்கள். சுயமாக முடிவெடுக்கும் உரிமையை ஐ.நா. சபை காஷ்மீர் மக்களுக்கு அளித்திருக்க இந்திய அரசு அதை செயல்படுத்த மறுத்து வருகிறது.

இந்த ஆக்கிரமிப்புப் படைகளிடமிருந்து விடுதலை பெற்று சுதந்திரக் காற்றை சுவாசிக்க ஜம்மு காஷ்மீர் மக்கள் விடாமல் போராடி வருகிறார்கள். அவர்களின் விடுதலைக் கானபோராட்டத்தைஅடக்கிஒடுக்க5இலட்சத்திற்கும்மேற் பட்ட படையினரை இறக்கி காஷ்மீர் மக்களை நசுக்கி வரு கிறது இந்தியா.

வெறும் ஒரு கோடி மக்களுக்காக எந்த நாட்டிலும் நகரத் திலும் இது போன்ற அடக்குமுறை இல்லை என்பது ஐரோப் பிய ஒன்றியத்தின் தகவல் ஆகும்.

இதுவரை இந்திய ஆக்கிரமிப்புப் படை ஓர் இலட்சத்துக் கும் மேற்பட்டோரை கொன்றுள்ளது. 5 இலட்சத்துக்கு உட்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். ஆயிரக்கணக் கானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். இலட்சக்கணக் கானோர் சித்திரவதை மையத்தில் சித்திரவதை செய்யப்பட் டுள்ளனர். பெண்கள் பலாத்காரம் மற்றும் வல்லுறவு செய்யப் பட்டுள்ளனர். இவையெல்லாம் மக்கள் தொகையை குறைப் பதற்கான முயற்சிகளே. இவை காஷ்மீர் மக்களின் வாழ்க் கையை மட்டும் அழிக்கவில்லை; மாறாக, உலக அமை தியை சிதைத்துள்ளது. மூன்று போர்களுக்கு வித்திட்டுள் ளது. இரு நாடுகளின் மோதல்களுக்கு காரணமாக அமைந் துள்ளது.

## காஷ்மீர் இந்திய அரசுக்கு பலமா? பலவீனமா?

சுதந்திரப் போராட்டம் நடத்தினாலும் அதற்கு எதிராக அரசுப் படைகள் நடத்துகின்ற வன்முறைகளால் காஷ்மீர் நாளுக்கு நாள் சிதைந்து வருகிறது. காஷ்மீர் விடயத்தில் மக்கள்மீதான அரசின் பிடி இறுக்கமாக இருக்கின்றது. இதன் மூலம் அங்கு ஏற்பட்டுள்ள புரட்சி காலப்போக்கில் பலவீன மடைந்து விடும் என்று அரசு கணிக்கிறது.

காஷ்மீர்பிரச்சினையைத்தீர்ப்பதற்காகதற்போது பிரதமர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள உயர்கமிட்டியில், காஷ் மீரைச் சேர்ந்த எந்தவோர் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் உள்வாங்கப்படவில்லை.

வரலாற்று ரீதியாக ஆராய்ந்து பார்த்தால், காஷ்மீரில் ஆயு தம் தாங்கிய போராட்டம் தொடங்கியதற்கு மத்திய அரசின் குளறுபடிகளும் மோசடிகளுமே மிக முக்கியமான காரணங்க ளாகும்.

மறுபக்கம் காஷ்மீர் பிரச்சினையை அரசியல் ரீதியான பிரச்சினையாக இந்திய அரசு பார்க்கத் தவறிவிட்டது என்று காஷ்மீரின் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லாவுக்கான அரசியல் ஆலோசகராகப் பணியாற்றிய தன்வீர்சாதிக் ஹிந்து பத்திரிகையில் பதிவு செய்திருக்கிறார்.

## கவனிக்க வேண்டிய முக்கிய விடயம்

தற்போது பெல்லட் குண்டுகளினால் தாக்கப்பட்டுவரும் காஷ்மீர் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். காஷ்மீ ரில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் பெல்லட் வகைக் குண்டு களை இந்திய இராணுவம் பயன்படுத்தி வருகிறது. காவல் துறை அதிகாரிகள் ''இது அபாயகரமான வகையைச் சேர்ந்த ஆயுதம் அல்ல'' என்கின்றார்கள். ஆனால், சிகிச்சை அளித்து வரும் மருத்துவர்களோ ''இவை அபாயகரமானவை; இவை நிரந்தர பாதிப்பை ஏற்படுத்த வல்லவை. ஒரே குண்டில் 100க் கும் மேற்பட்ட சிறு சிறு துகள்கள் வெளியே சிதறிப் பாய்ந்து கடுமையாகத் தாக்கும்'' என்கிறார்கள்.

ஒவ்வொரு துகளும் சர்வசாதாரணமாக உடலை கிழித்துக் கொண்டு உள்ளே செல்லும். கண் பகுதியில் தாக்கினால் திசுக் கள் கிழிந்து கண் பார்வையே பறிபோகும் அளவிற்கு தாக்கம் இருக்கும். பெரும்பாலும் கண் பார்வையை இழக்க நேரிடும்.

பெல்லட் குண்டுகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர் களுக்கான சிகிச்சைகள் இடம்பெறுகின்றன. இதுவரை 447 அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 143 அறுவை சிகிச்சைகள் பெல்லட் குண்டுகளால் பாதிக் கப்பட்ட கண்களுக்கு செய்த சிகிச்சைகள் ஆகும். இதுவரை 35 பேர் கண் பார்வையை இழந்துள்ளனர். புர்ஹான் வானியைத் தொடர்ந்து கடந்த இரண்டு வார மோதலில் ஆக்கிரமிப்புப் படையினர் 48 பேரை படுகொலை செய்துள்ளனர். 3500 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தியா வன்முறையில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவ தால் இது விடயத்தில் சர்வதேச அமைப்புக்கள் தலையிட்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் தலைமை யில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை, ஐரோப்பிய ஒன்றியம், இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு போன்றவை மக்களை காக்கும் பணிகளையும் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொறுப்புகளையும் கையில் எடுக்க வேண்டும்.

காஷ்மீர் மக்களின் விருப்பத்தையும் அவர்கள் எடுக்கும் தீர்மானத்தையும் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மக்களை கொடுமைப்படுத்தும் இராணுவங்களை முற்றாக அகற்ற வேண்டும்.

நிராயுதபாணிகளாக வாழும் காஷ்மீர் மக்கள் மீது அதிகார வர்க்கம் புரியும் கொலைகள், கற்பழிப்பு அக்கிரமங்கள், சித் திரவதைகள் போன்றவற்றுக்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்துள்ள கடுமையான சட்டங்களான AFSPA மற்றும் Public Safety Act என்பன முழுமையாக இரத்து செய்யப்பட வேண்டும்.

சிறை, வீட்டுக்காவல் மற்றும் இன்ன பிற தடுப்பு மையங் களில் இருக்கும் அரசியல்வாதிகளை விடுதலை செய்ய வேண்டும். அவர்களின் அரசியல் உரிமைகள் திரும்ப தரப் பட வேண்டும். *(58 ஆம் பக்கம் பார்க்க...)*

ஒரு நாட்டின் கல்வித் தரத்தையும் அதன் அறிவுப் புலமையையும் மட்டிடுவதில் பல்கலைக்கழகங்களுக்கு மகத்தான பங்குண்டு. ஒரு நாட்டின் படித்த வர்க்கத்தின் குறுக்கு வெட்டு முகமாக நாம் பல்கலைக்கழகங்களை நோக்கலாம். அந்த வகையில் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக விவகாரங்களில் தாக்கம் செலுத்தும் காத்திரமான அமுக்கக் குழுவாக பல்கலை சமூகத்தை அடையாளப்படுத்தலாம். நாளைய சமூகத்தின் சிந்தனைப் போக்கைத் தீர்மானிக்கின்ற அதிபர், ஆசான், வைத்தியர், பொறியியலாளர், பிரதேச செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமன்றி நாட்டின் நாளைய ஜனாதிபதியாகவும் இன்றைய பல்கலைக்கழக மாணவர்கள் திகழ்வார்கள் என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. எனவே, பல்கலைக்கழக மாணவர்களின் அபிப்பிராயமும் நம்பிக்கையும் சிந்தனையும்தான் நாளை சமூகத்தினதும் நாட்டினதும் கருத்தாகவும் சிந்தனையாகவும் பேசுபொருளாகவும் மாறிவிடும் என்பது தெளிவாகிறது. மேற்குறிப்பிட்ட எவ்வம்சத்துக்கும் எமது இலங்கை நாடு விதிவிலக்காக மாட்டாது. அந்த வகையில், பல்லின கலாசாரச் சூழலில் பல்கலைக்கழக மாணவர்களின் இஸ்லாம் பற்றிய புரிதல்கள் முக்கிய இடத்தை வகிக்கிறது.

அண்மைக் காலமாக இலங்கையில் இஸ்லாத்துக்கெதிராக பல வழிகளிலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பரப்புவதில் ஊடகங்களே முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தவகையில், அடசந்த களுவரய, அல்ஜிஹாத், அல்காயிதா போன்ற நூற்கள் ரன்கிரி வானொலி, தெரன தொலைக்காட்சி போன்றன எரிகிற நெருப்பில் எண்ணெய்யூற்றிக் கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக கிட்டிய ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்குள் பொதுபல சேன, ராவணபலய போன்ற பௌத்த கடும்போக்கு அமைப்புகளின் வருகையும் இஸ்லாத்தின் மீதான வீண் குற்றச்சாட்டுகளை அதிகரிக்கச் செய்துள்ளன. இன்று சாதாரண சிங்கள மக்களும் மாற்று மத, இன சகோதரர்களும் இஸ்லாத்தை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை உருவாகி வருகிறது.

அண்மைக் காலமாக இஸ்லாத்தின் மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுகள் மூன்று விடயங்களை மையப்படுத்தியிருக்கின்றன.

## ஜிஹாத்

ஜிஹாத் என்பது போர் புரிதலாகும். முஸ்லிம்களின் வேதமான குர்ஆனும் இதை ஊக்குவிக்கிறது. இதைத்தான் இன்று உலகளவில் தாலிபான், அல்காயிதா, ஐ.எஸ் போன்ற அமைப்புகள் செய்து வருகின்றன. இலங்கை முஸ்லிம்களும் இந்த ஜிஹாதுக்காகவே தயாராகின்றனர். அவர்களின் மத்ரஸாக்களில் இதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. எனவே, இலங்கை முஸ்லிம்களின் நோக்கம் ஜிஹாதினூடாக இந்நாட்டைக் கைப்பற்றுவதே! என்று போலிப் பிரசாரம் செய்கிறார்கள். இதனால் ஜிஹாத் பற்றிய பிழையான புரிதல், சந்தேகம், அச்சம் மாற்றுமத சகோதரர்களின் மனங்களில் குடிகொள்ள ஆரம்பித்துள்ளன.

## ஹலால் விவகாரம்

முஸ்லிம்கள் ஹலால், ஹராம் என்று உணவுகளைப் பிரிப்பதன் மூலம் மாற்று மத சகோதரர்களின் உற்பத்திகளை புறந்தள்ளுகிறார்கள். அதே போல் எல்லா உற்பத்திகளுக்கும் ஹலால் சான்றிதழ் வழங்கப்படுவதனூடாக பெருந்தொகையான பணம் ஈட்டப்படுகிறது. மேலும் அந்த இலா

# முஸ்லிம் பெண்களின் ஆடை:

## இலங்கை பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்களின் புரிதல்கள் ஒரு நோக்கு

-றாபி எஸ். மப்றாஸ் (நளீமி)-



(ஜாமிஆ நளீமிய்யாவின் பட்டப் பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வின் சாரம்சமே இது.)

25 முஸ்லிமல்லாத மாணவ, மாணவிகளிடம் முஸ்லிம் பெண்களின் ஆடைகள் பற்றி பரவலாக பேசப்படும் சந்தேகங்களை உள்ளடக்கியதாக வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, 2015 மார்ச் மாதத்திலிருந்து 2015 டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் மொத்தமாக 100 மாணவர்களிடமிருந்து இத்தரவுகள் சேகரிக்கப்பட்டன. அவர்கள் 21 வயதிலிருந்து 26 வயதுக்குட்பட்ட 60 பெண் மாணவிகளும் 40 ஆண் மாணவர்களும் ஆவர்.

பங்கள் சர்வதேச மட்டங்களில் இயங்கும் பயங்கரவாத இஸ்லாமியக் குழுக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன என்ற புதுவிதமான புரளியை கிளப்பி மக்கள் மனங்களிலும் உற்பத்தியாளர்கள் மத்தியிலும் ஹலால் பற்றிய வெறுப்புணர்வு விதைக்கப்பட்டதை நாம் அறிவோம்.

## முஸ்லிம் பெண்களின் ஆடை (ஹிஜாப்)

முஸ்லிம்களில், பாரம்பரிய முஸ்லிம்கள், அடிப்படைவாத முஸ்லிம்கள் என இரு வகை முஸ்லிம்கள் உள்ளனர்.

இதில், பாரம்பரிய முஸ்லிம்களைப் பொறுத்தவரை பாரம்பரிய ஆடைகளை அணிவார்கள். குறிப்பாக, பெண்கள் சேலையணிந்து முக்காடு அணிந்து கொள்வார்கள். இத்தகையவர்கள் நாட்டின் பாரம்பரியத்தைப் பின்பற்றுபவர்கள். இவர்களால் நாட்டுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

ஆனால், அடிப்படைவாத முஸ்லிம்கள்தான் நாட்டின் அனைத்துக் குழப்பங்களுக்கும் காரணம். அவர்கள்தான் சர்வதேச தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள். சிங்கள பௌத்தர்களை மதமாற்றம் செய்பவர்கள இந்தக் குழுவினரைச் சார்ந்த பெண்களே கறுப்பு நிற ஆடைகளை அணிந்து ஹிஜாப் அணிந்து முகத்தை மறைத்திருக்கிறார்கள்.

இத்தகைய போலிப் பிரசாரங்களால் இன்று மாற்றுமத சகோதரர்கள் ஹிஜாப் அணிந்த பெண்களை வெறுப்போடும் குரோத கண்ணோட்டத்தோடும் பார்க்கின்ற நிலைமை உருவாகியுள்ளது. இதனால் எமது முஸ்லிம் பெண்கள் பலர் கடந்தசில ஆண்டுகளாக அசௌகரியங்களுக்குஉள்ளாகி வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது இத்தகைய வதந்திகளும் போலிப் பிரசாரங்களும் இலங்கையில் இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் இருப்பை இலக்கு வைப்பதோடு பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்களை மூளைச் சலவைக்குள்ளாக்குகின்றன.

இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் (UGC) *2014*ஆம் ஆண்டின்தரவுகளுக்கேற்ப இலங்கைதிறந்த பல்கலைக்கழகத்தில் *14,983* மாணவர்களும் ஏனைய பல்கலைக்கழகங்களில் *81,153* மாணவர்களும் கல்விகற்கின்றனர். இதில் வெகு சொற்ப தொகையினரே முஸ்லிம் மாணவர்களாவர். அதாவது, முஸ்லிம் சமூகத்தில் க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதுகின்ற மாணவர்களில் வெறுமனே *10%* மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்குச் செல்கின்றனர். ஆனாலும், பொதுவாக இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஒரு சொற்ப தொகை முஸ்லிம் மாணவர்கள் இருக்கவே செய்கின்றனர். இந்நிலையில் பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்களின் இஸ்லாம் பற்றிய தவறான புரிதல்கள் இரு முக்கிய விளைவுகளை ஏற்படுத்தலாம்.

*01.* இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முஸ்லிமல்லாத மாணவர்களின் நடத்தைகள், முஸ்லிம் ஆண், பெண் இருபாலாரையும் அசௌகரியத்துக்கும் சங்கடத்துக்கும் உள்ளாக்கும்.

*02.* இலங்கையில் முஸ்லிமல்லாத படித்த வர்க்கத்தினர் இஸ்லாம் பற்றி தப்பபிப்பிராயத்தோடு வாழ்வது இன்னும் அத்தகைய தவறான கருத்துக்கள் கொண்ட சமுதாயம் உருவாக வழிவகுக்கும்.

இஸ்லாத்தைப் பற்றிய அவர்களின் சந்தேகங்களையும் மனப்பதிவுகளையும் குற்றச்சாட்டுகளையும் அறிந்து அவற்றுக்கு சரியான தெளிவை வழங்கும்போது, அது முழு நாட்டுக்கும் சென்றடையும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

அந்த வகையில், எமது ஆய்வு இலங்கைப் பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்களின் முஸ்லிம் பெண்களின்

| Universityversity/Institute | Intake | Muslim | % |
|---|---|---|---|
| 1) South Eastern University | 1346 | 686 | **50.67** |
| 2) Eastern University | 1154 | 173 | **14.99** |
| 3) Institute of Indigenous Medicine | 224 | 28 | **12.5** |
| 4) Jaffna University | 2180 | 222 | **10.18** |
| 5) Peradeniya University | 2736 | 185 | **6.76** |
| 6) Ayurveda Ins, Gampaha | 120 | 7 | **5.83** |
| 7) Uwa Wellasa University | 651 | 37 | **5.68** |
| 8) Wayamba University | 869 | 43 | **4.95** |
| 9) Moratuwa University | 1662 | 69 | **4.15** |
| 10) Colombo University | 2276 | 90 | **3.95** |
| 11) Rajarata University | 1429 | 53 | **3.71** |
| 12) Sabragamuwa University | 1126 | 40 | **3.55** |
| 13) Kelaniya University | 2440 | 64 | **2.62** |
| 14) Ruhunu University | 2025 | 47 | **2.32** |
| 15) SriJayawardenapura University | 2936 | 66 | **2.25** |
| 16) UC, School of Computing | 240 | 5 | **2.08** |
| **(Grant Total)** | 23414 | 1746 | **7.46** |

(பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அறிக்கை 2015)

**எமது ஆய்வு இலங்கைப் பல்கலைக் கழக முஸ்லிமல்லாத மாணவர்களின் முஸ்லிம் பெண்களின் ஆகைள் பற்றிய புரிதல்களை மையப்படுத்தியவாறு அமைகிறது. இவ்வாய்வினூடாக முஸ்லிம் பெண்களின் ஆடைகள் தொடர்பாக பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்கள் எவ்வாறான புரிதல்களை கொண்டுள்ளனர் என்பதை ஆராய்ந்து தர்க்கரீதியான ஆதாரங்களுடன் சில தெளிவுகளை முஸ்லிம், முஸ்லிமல்லாத மாணவர்களுக்கு வழங்க முடியும் என நாம் நம்புகிறோம்.**

ஆடைகள்பற்றிய புரிதல்களைமையப்படுத்தியவாறு அமைகிறது. இவ்வாய்வினூடாக முஸ்லிம் பெண்களின்ஆடைகள் தொடர்பாக பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்கள் எவ்வாறான புரிதல்களை கொண்டுள்ளனர் என்பதை ஆராய்ந்து தர்க்கரீதியானஆதாரங்களுடன்சில தெளிவுகளை முஸ்லிம், முஸ்லிமல்லாத மாணவர்களுக்கு வழங்க முடியும் என நாம் நம்புகிறோம்.

### கள ஆய்வுத் தரவுகள்

எமது ஆய்வின்படி, இலங்கையில் முஸ்லிம் மாணவர்கள் அதிகமாக கல்வி பயிலும் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், அதேபோல்தமிழ் பேசும் மாணவர்களை அதிகம் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், முஸ்லிம் மாணவர்கள் குறைவாகக் காணப்படும் சப்ரகமுவ பல்கலைக்கழகம், அனைத்து வயதுத் தரப்பினரையும் உள்ளடக்கியுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் என இந்நான்கு பல்கலைக்கழகங்களிலுமுள்ள எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட தலா 25 முஸ்லிமல்லாத மாணவ, மாணவிகளிடம் முஸ்லிம் பெண்களின் ஆடைகள் பற்றி பரவலாக பேசப்படும் சந்தேகங்களை உள்ளடக்கியதாக வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, 2015 மார்ச் மாதத்திலிருந்து 2015 டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் மொத்தமாக 100 மாணவர்களிடமிருந்து இத்தரவுகள் சேகரிக்கப்பட்டன. அவர்கள் 21 வயதிலிருந்து 26 வயதுக்குட்பட்ட 60 பெண் மாணவிகளும் 40 ஆண் மாணவர்களும் ஆவர்.

முஸ்லிம் பெண்களின் ஆடைகள் பற்றி அம்மாணவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக மூடிய வினாக் கொத்துக்கள் (Close ended questions), சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு தமிழிலும் வழங்கப்பட்டன.

இக்கள ஆய்வினூடாக முஸ்லிம் பெண்கள் அணியும் ஹிஜாப், நிகாப் மற்றும் கறுப்பு நிற ஆடைகள் தொடர்பாக பல தரப்பட்ட கருத்துக்களையும் மனப்பதிவுகளையும் இலங்கைப் பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்கள் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. மேலும், அவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்க முடியாது பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர்கள் திண்டாடுகின்றனர். எனவே, அம்மாணவர்களின் சந்தேகங்களுக்கான தெளிவுகளை முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்கி அவர்கள் மூலமாக சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ற வகையில் அவர்களுக்கு எத்தி வைப்பதே எமது நோக்காகும்.

அந்த வகையில், பல்கலைக்கழக முஸ்லிமல்லாத மாணவர்களின் பல்வேறுபட்ட வினாக்களையும் அவற்றுக்கு தர்க்க மற்றும் ஆதாரபூர்வமான பதில்களையும் எமது சிறிய ஆய்வுக்கு எட்டிய வகையில் வழங்கியுள்ளோம். அவற்றை எதிர்வரும் இதழ்களில் அல்ஹஸனாத் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

தங்கத்தின் விலை
&
நாணயமாற்று
நாளாந்த SMS சேவை
மேலதிக வருமானத்துக்கான சந்தர்ப்பம்
Gold Price : 21k, 22k, 24k
Currencies : USD ,EUR, GBP,CAD, JPY, AUD, INR, SGD, QAR, CHF
இச்சேவையை பெற்றுக்கொள்ள...
REG GD என TYPE செய்து 77001 இற்கு அனுப்பவும்
For Dialog Mobile Users only 2/- + Tax Per Day

தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்

ஒரே கூரையின் கீழ்

தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...

- புனித அல்குர்ஆன்
- அகராதிகள்
- உளவியல்
- தர்ஜமாக்கள்
- கதைப் புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாம்
- அல் ஹதீஸ்
- வரலாறு
- இலக்கியம்
- இலக்கணம்
- கவிதை
- பாடசாலை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/ DVD

தினமும் காலை 8.00 மணியிலிருந்து
இரவு 10.00 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்...

வெளியீடு மொத்த விற்பனைப் பகுதி:
0115 736098, 0772518641

தபால் மூலம் நூல்களைப் பெற:
011 2684851

புனித அல்குர்ஆன் பிரதிகளை
மொத்தமாகப் பெற: 0773171725

IBH இன் இலவச விநியோகம்
தற்போது உங்கள் வீடுகளுக்கே...
(நகர எல்லைகளுக்குள் மாத்திரமே)
தொடர்புகளுக்கு: 0115 925 935

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks எனType செய்து
40404க்கு அனுப்புங்கள்.

MasterCard VISA AMERICAN EXPRESS Accepted

77, தெமடகொட வீதி,
கொழும்பு-9

HOTLINE:
0115 925 935

(36 ஆம் பக்கத் தொடர்) **இஸ்லாமிய சட்டவாக்க...**

காணப்படுகிறது.

இறுதியாக, மேற்கூறப்பட்ட ஐந்து பரிமாணங்களும் இஸ்லாமிய சட்டவாக்கத்தை மகாஸிதுஷ் ஷரீஆ சிந்தனையுடன் இணைத்துக் கொள்ளும் இடங்களாகும். பொதுக் கொள்கை வகுப்பு, சட்டமியற்றல், யாப்புருவாக்கம் என்ற சமூகம் தழுவிய சட்டவாக்கச் செயற்பாடு அல்லது தனி மனித வாழ்வுடன் தொடர்புபட்ட சட்டவாக்கச் செயற்பாடு என இரண்டு பரப்புகளிலும் மேற்கூறப்பட்ட ஐந்து பரிமாணங்களையும் புகுத்திப் பார்ப்பது அவசியமானதாகும்.

(12 ஆம் பக்கத் தொடர்) விசாலிப்பதே **'இஸ்லாம்'...**

இஸ்லாம் சுருங்கும் தன்மை கொண்டதல்ல; ஒதுங்கும் இயல்புடையதல்ல. விலகி வேறுபடும் பண்பினை அது வளர்ப்பதில்லை. அது விசாலத்தன்மை கொண்டது, அரவணைப்பது, ஆதரிப்பது, அங்கீகரிப்பது, இடமளிப்பது... எனினும், அது இன்று புரியப்பட்டிருப்பது அவ்வாறல்ல.

முரட்டுத்தனமும் வெறியும் விமர்சனமும் ஒதுக்குதலும் புறக்கணித்தலும் பிளவுபடுதலும் வேறுபடுத்தலும் தான் இஸ்லாமாக இன்று பலரால் புரியப்பட்டிருக்கிறது. எந்தளவுக்கு இன்று அந்தப் பிழையான புரிதல் வளர்ந்திருக்கிறது எனின்,

இஸ்லாம் ஒரு விடயத்தில் இரண்டு கருத்துக்களை அனுமதித்திருந்தால் அதில் தான் ஏற்றுக் கொள்ளாத கருத்தை உலகில் எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அப்படி ஏற்றுக் கொண்டவர்களை (இஸ்லாம் அக்கருத்தை அனுமதித்த போதும் கூட) வழிகேடர்கள், பித்அத்வாதிகள், முனாபிக்குகள், கொள்கையைத் தாரை வார்த்தவர்கள், கொள்கைச் சகோதரர்கள் என்ற வட்டத்திலிருந்து வெளியேறியவர்கள் என்றெல்லாம் பரப்புரை செய்ய அவர்கள் தயங்குவதில்லை.

அனுமதிக்கப்பட்ட கருத்துக்களில் ஒரு கருத்தை செயல்படுத்துவதற்காக சமூகத்திலிருந்து விலகி, ஒதுங்கி, பிறரைச் சாடி, வேற்றுமை வளர்த்து, முஸ்லிம் சமூகத்தை ஒன்றிணைக்கும் அன்பு, சகோதரத்துவத்திற்கு வேட்டு வைப்பவர்கள் இன்று சிலர் நினைப்பதுபோல குறைந்து செல்லவில்லை. மாறாக, பெருகிக் கொண்டே செல்கிறார்கள்.

திரிபுபடுத்தப்பட்ட ஏனைய வேதங்களை ஈமான் கொள்ளுமாறு சொல்கிறான் அல்லாஹ். பின்பற்ற முடியாத ஏனைய நபிமார்களையும் ஈமான் கொள்பவர்களே முஸ்லிம்கள் என்று கூறுகிறது குர்ஆன். (பார்க்க- 3: 85)

எனினும், இன்றைய முஸ்லிம்களில் அநேகரைப் பார்க்கிறோம். அனுமதிக்கப்பட்ட கருத்துக்களில் ஒரு கருத்தை ஏற்பவர்கள் அடுத்த கருத்தை ஏற்பவர்களை நிராகரிக்கின்றார்கள். மாற்றுக் கருத்தினை மறுப்பதற்காக வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுகின்றார்கள். பட்டியலிட்டு அவர்களை நரகத்திற்கு அனுப்பவே துணிந்து விடுகிறார்கள். மாற்றுக் கருத்துடையவர்கள் மக்கள் மத்தியில் அங்கீகாரம் பெற்று விடக் கூடாது என்ற நோக்கில் அவர்களைத் தடுக்கும் அனைத்துக் கீழ்த்தரமான வழிமுறைகளையும் கையாள்கிறார்கள்.

விசாலிப்பதற்குப் பதிலாக சுருங்கும் கைங்கரியத்தை முஸ்லிம்கள் சிறப்பாகவே செய்து கொண்டிருக்கிறார்கள். தமது மார்க்கத்தை சுருக்கி சில வணக்க வழிபாடுகளாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளை சுருக்கி பிக்ஹு சர்ச்சைகளாக மாற்றியிருக்கிறார்கள். உம்மத்தை சுருக்கி ஓர் இயக்கமாக ஆக்கியிருக்கிறார்கள். குர்ஆனை சுருக்கி வெறும் ஓதலாக மாற்றியிருக்கிறார்கள். நபிகளாரை சுருக்கி மீலாத் ஆகவும் ஸலவாத்தாகவும் சில நபிமொழிகளாகவும் மாற்றியிருக்கிறார்கள். நாகரிகத்தை சுருக்கி நிகாஹ் வைபவங்களாகவும் ஜனாஸா கடமைகளாகவும் பெருநாள் கொண்டாட்டங்களாகவும் ஆக்கி வைத்திருக்கின்றார்கள். கலீபா என்ற பொறுப்பை சுருக்கி சம்பிரதாய முஸ்லிம்களாக மாற்றியிருக்கின்றார்கள். மனித நேயத்தை சுருக்கி இனவாதமாக மாற்றியிருக்கிறார்கள். மனித சமூகத்துக்கு வழிகாட்டும் அகிலத்தின் ஆசான் என்ற பொறுப்பை சுருக்கி வாரத்தில் ஒரு முறை ஊருக்கு ஓர் உபதேசம் என்ற அந்தஸ்தில் வைத்திருக்கிறார்கள்.

மஸ்ஜிதுகள் விசாலமாகியிருப்பதும் உபதேசங்கள் நீண்டு செல்வதும் ஸகாத் தொகை அதிகரிப்பதும் இஸ்லாமிய அமைப்புக்கள் பெருகியிருப்பதும் இஸ்லாத்தின் வெளித் தோற்றங்கள் பரவியிருப்பதும் மறுக்க முடியாத உண்மைகள்தான். எனினும், மற்றொரு பக்கத்தால் ஏற்கனவே சொன்னவையும் இன்னுமுள்ளவையும் சுருங்கியிருப்பதனையும் எவரும் மறுக்க முடியாது. இந்த சுருக்கங்களை விரிவடையச் செய்யாமல் இஸ்லாத்தின் அழகு உலகுக்கு மட்டுமல்ல, அதன் உடன் பிறப்புகளுக்கே விளங்காது.

(44 ஆம் பக்கத் தொடர்) பதாவா...

வாழ்வாதாரத்தையும் (அவனுக்கு என்னென்ன எந்த அளவு கிடைக்கும் என்பதையும்) அதன் வாழ்நாளையும் (அவன் எவ்வளவு நாள் வாழ்வான் எப்போது இறப்பான் என்பதையும்) அது (இறுதிக் கட்டத்தில்) துர்பாக்கியசாலியா, நற்பேறுடையதா என்பதையும் (நான் விதித்தபடி) எழுது' என்று அந்த வானவருக்குக் கட்டளையிடப்படும். பிறகு அதனுள் உயிர் ஊதப்படும்.'' (அல்புகாரி)

இந்த ஹதீஸின்படி மூன்று நாற்பதுகளின் பின்னர் அதாவது 120 நாட்களின் பின்னர் ரூஹ் ஊதப்படுகின்றது என புரியப்பட்டுள்ளது.

''இந்திரியத் துளிக்கு நாற்பத்து இரண்டு நாட்கள் கடந்து

விட்டால் அல்லாஹ் அதற்கு ஒரு மலக்கை அனுப்பி அதனை உருவமைத்து அதன் செவிப்புலனையும் பார்வையையும் தோலையும் மாமிசத்தையும் எலும்பையும் படைக்கின்றான்.''

(முஸ்லிம்)

இந்த ஹதீஸ் நாற்பத்து இரண்டாவது நாளில் ஒரு வானவர் அனுப்பப்படுகின்றார் என்பதனை உறுதிப்படுத்துகின்றது.

எனவே, நவீன கால இஸ்லாமிய அறிஞர்கள் மேற்கூறப்பட்ட மூன்று ஹதீஸ்களையும் மையமாகக் கொண்டு நாற்பத்து இரண்டு நாட்களை கடந்தவுடன் கருவுக்கு ரூஹ் ஊதப்படுகின்றது என்ற கருத்தை கூறுகின்ற அதே நேரத்தில் ஆறு கிழமைகளின் பின்னர் கருவைக் கலைப்பது ஹராமானது என்பதனையும் தெளிவுபடுத்துகின்றார்கள்.

(9 ஆம் பக்கத் தொடர்) **அல்லாஹ் மிகவும்...**

பண்பாட்டுடனும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். பொய்யும் புறமும் கோளும் அவதூறும் தூஷண வார்த்தைகளும் ஹராமாகும். ஷரீஅத்தில் தடுக்கப்பட்ட சமூகத்தில் மலிந்து விட்ட இந்த நடத்தையுள்ள மனிதன் துஆ கேட்டால் அது அங்கீகரிக்கப்படுமா? இலஞ்சமும் ஊழலும் துஷ்பிரயோகமும் ஹராமானவையே! இவற்றையெல்லாம் செய்து கொண்டு ஆன்மிக வேடம் தரிப்பதில் என்ன பயன் இருக்கிறது?

சமகாலத்தில் நாம் சமநிலைக் கோட்பாட்டைத் தவற விட்டு விட்டு ஒரு பக்கத்தை அழுத்தி ஹராம் சம்பந்தப்படுகின்ற ஏனைய விவகாரத்தை ஒரு சில அம்சங்களுடன் சுருக்கிக் கொண்டோம். யாருமே அலட்டிக் கொள்ளாத அல்லது கண்டு கொள்ளாத இன்னொரு ஹராத்தை இங்கு அடையாளப்படுத்துவது காலத்தின் தேவையாக அமைந்து விட்டது. அதாவது, இலக்கு தூய்மையாக அமைவது போல அதனை அடைந்து கொள்வதற்கு பிரயோகிக்கப்படும் வழிமுறையும் தூய்மையாக அமைவது அவசியமாகும். தூய்மையற்ற வழிமுறைகளின் ஊடாக சுய இலக்கை அடைந்தாலும் அதனை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். இதுவும் ஹராமாகும்.

நாம் வாழும் சமூகச் சூழலில் சமயத் தலைமையாக இருக்கலாம் அல்லது அரசியல் தலைமையாக இருக்கலாம். இவ்விரண்டிலும் இந்த ஹராம் நடைபெறுகிறது. யாரும் இதனை ஹராமாகக் கருதுவதில்லை. பள்ளிவாசல் பரிபாலன சபைத் தெரிவின்போது அல்லது சன்மார்க்க நிறுவன நிர்வாகத் தெரிவின்போது பதவி மோகத்துடன் அந்த நிறுவனத்திற்குரிய யாப்புக்களை எல்லாம் ஓரம் கட்டிவிட்டு ஆட்பலத்தை, பண பலத்தை, அரசியல் பலத்தைப் பயன்படுத்தி பதவிக்கு வருவதும் பள்ளிவாசலைக் கைப்பற்றுவதும் பின்னர் குர்ஆன், ஸுன்னாவைப் பேசி தமக்குக் கட்டுப்படுமாறு வேண்டுவதும் பழைய நிர்வாகிகளின் சேவைகளை குறைத்து மதிப்பிடுவதும் அவர்களைப் புறந்தள்ளுவதும் ஹராமே! இந்த ஹராத்தைச் செய்பவர்கள் ஆன்மிகவாதிகளாக இருந்தாலும், உலமாக்களாக இருந்தாலும், இயக்கவாதிகளாக இருந்தாலும் இவர்கள் இறைஞ்சும் துஆவும் இவர்களது தலைகளுக்கு மேல் செல்ல மாட்டாது!


இஸ்லாம் தூய இலக்குக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை அதனை அடைந்து கொள்ளும் தூய வழிமுறைகளுக்கும் கொடுக்கிறது. இலக்கை அடைவதுதான் எமது வேணவா. வழிமுறைகள் எப்படி அமைந்துலும் பிரச்சினையில்லை என்று சொல்பவர்கள் இஸ்லாமிய சிந்தனையின் சொந்தங்கள் அல்ல. இஸ்லாமிய சட்ட அடிப்படைக் கலைவிதி ஒன்றை இங்கு பதிவு செய்வது பொருத்தமாக அமையும்: ''நன்நோக்கம் வழிமுறைகளை நியாயப்படுத்தாது.'' அக்கால ஸலபுகள் தூய வழிமுறை குறித்து மிகவும் அவதானத்துடன் இருந்தார்கள். உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் படுகொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவர நிலையைப் பயன்படுத்திக் கொண்ட சில சந்தர்ப்ப வாதிகள் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் சென்று ''நீங்கள் உடனடியாக கலீபா பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றனர். உடனே அவர்கள் ''நீங்கள் யார்? உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்னை கலீபாவாக நியமிப்பதற்கு? எங்கே பத்ர் ஸஹாபாக்கள்? அவர்கள் பரிந்துரைத்தால் மட்டும் பதவி ஏற்கிறேன்'' என்று மறுதலித்து விட்டார்கள்.

எனவே, தூய்மையான அல்லாஹ் தூய்மையான வழிமுறைகளின் ஊடாக அடையப் பெறுகின்ற இலக்கை அல்லது முன்னெடுக்கப்படுகின்ற பணியை ஏற்றுக் கொள்கின்றான். தூய்மையற்ற வழிமுறைகளின் ஊடாக பதவிக்கு வருகின்ற ஒருவரது அல்லது ஒரு சிலரது நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்ந்தும் சிக்கல் நிறைந்ததாகவே இருக்கும். அது ஈற்றில் ஸதம்பித நிலையை அடையும். இவர்களுக்கு ஆதரவுக் கரங்கள் நீள மாட்டாது. இவர்களது துஆக்கள் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

நமது சிந்தனைகளையும் எண்ணங்களையும் வார்த்தைப் பிரயோகங்களையும் செயற்பாடுகளையும் வழிமுறைகளையும் தூய்மையானதாக அமைத்துக் கொள்ள இயன்றவரை முயற்சிப்போமாக! ரப்பனா தகப்பல் மின்னா!

STUDYING IN MOSCOW- RUSSIA

MOSCOW STATE FOREIGN LANGUAGES AND RELATIONS UNIVERSITY




CONTACT:
RUSSIAN STUDIES CENTRE,
26/4, CIRCULAR ROAD, CHINA-FORT, BERUWELA,
MOB- 0777-687-212, 034-2277040

## மணமகன் தேவை

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த இஸ்லாத்தைத் தழுவிய மார்க்கப்பற்றுள்ள B.A கற்றுக் கொண்டிருக்கின்ற மணமகளுக்கு (வயது 26) மார்க்கப்பற்றுள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகனை பாதுகாவலர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 072 2874109**

கண்டி மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள B.S.C. IT Degree ஐ பூர்த்திசெய்துSoftware Engineering கற்று அரசாங்க தொழில் புரியும் மணமகளுக்கு (வயது 27, உயரம் 5') மார்க்கப்பற்றுள்ள பொறியியலாளர், கணக்காளர், Software Engineering கற்ற அல்லது நன்கு கற்று உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தொழில் புரியும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 076 6212268**

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட பிரபல நிறுவனமொன்றில் HR Executive ஆக கடமையாற்றும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (23 வயது, உயரம் 5' 3'') நன்கு படித்த நல்ல குடும்பப் பின்னணியுடைய 28 வயதுக்கு மேற்படாத மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 076 8928869**

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த அரச பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக கடமையாற்றும் மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள மணமகளுக்கு (வயது 29, உயரம் 5' 3'') பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 071 6038838**

கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் அரசநிறுவனமொன்றில் நிரந்தர ஊழியராக (Computer operator) பணிபுரியும் கௌரவமான குடும்பப் பின்னணியுடைய இஸ்லாமிய வரையறைகளைப் பேணிவாழும் மணமகளுக்கு (வயது 27) மார்க்கப்பற்றுள்ள 36 வயதுக்குட்பட்ட மணமகனை அவரின் குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர். மேல் மாகாணம் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 077 8805893**

கொழும்பு பிரதேசத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியப் பெற்றோர் 26 வயதுள்ள அழகும் நற்குணமும் நல்லொழுக்கமுமுள்ள தமது ஒரே மகளுக்கு ஏற்ற துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகள் வைத்தியத் துறை மாணவியாவார். மணமகளுக்கு சொந்த வீடு உண்டு.

**தொடர்புகளுக்கு: 077 3586003, 071 3280568**

கொழும்பைச் சேர்ந்த தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்ற படித்த மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 24 உயரம் 5' 4'' ஒரு பிள்ளை உண்டு) தகுந்த துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0777 489324**

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த படித்த, மார்க்கப்பற்றுள்ள, கௌரவமான குடும்பப் பின்னணியுடைய முகாமைத்துவ பட்டதாரி மணமகளுக்கு (வயது 26, உயரம் 5' 4'') மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள கணக்காளராக, பொறியியலாளராக அல்லது Software Engineer ஆக உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 076 8441878**

(51 ஆம் பக்கத் தொடர்) **காஷ்மீர்**

ஐ.நா மற்றும் சர்வதேச மனித உரிமை ஆணையம் மற்றும் இன்ன பிற அமைப்புகளுக்கு காஷ்மீரில் பணிகளை செய்ய அனுமதிக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் இரும்புத் திரை விலகும்.


மேற்சொன்ன தீர்மானங்களை நோக்கி காய் நகர்த்தவே அனைத்துக்கூட்டணி ஹுர்ரியத் சபையின் தலைவர் செய்யத் அலி கிலானி காஷ்மீர் மக்களின் அவல நிலை குறித்து உலக சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக, உலக தலைவர்களுக்கும் UN, EU, SAARC மற்றும் OIC போன்ற சர்வதேச அமைப்புகளுக்கும் கடிதம் எழுதி வலியுறுத்தியுள்ளார். இதனை துரிதப்படுத்துவதன் மூலமே உலக அமைதி, நீதி மற்றும் முன்னேற்றத்தின் பக்கம் காஷ்மீரை கொண்டு செல்ல முடியும்.

காஷ்மீரின் உண்மை நிலைவரங்களை வெளி உலகிற்கு மறைப்பதற்காக கடுமையான கெடுபிடிகள் அதிகார வர்க்கத்தால் போடப்பட்ட நிலையிலும் சர்வதேச மக்கள் காஷ்மீர் மக்களுக்காக குரல் கொடுத்து வருகின்றனர். இந்திய இராணுவம் இனியும் காஷ்மீர் மீதான பிடியைத் தளர்த்திக் கொள்ளவில்லையென்றால், புக்கர் விருது பெற்ற எழுத்தாளர் அருந்ததி ராய் காஷ்மீர் பற்றிய கருத்தரங்கில் கூறியது போல, ''68000 காஷ்மீரிகளைக் கொன்ற இந்தியா இனியும் ஜனநாயக நாடு என்று கூற உரிமை இல்லை. 2500 முஸ்லிம்களை இனப்படுகொலை செய்த நாட்டிற்கு மதச்சார்பற்ற நாடு என்று கூற தகுதியில்லை'' என்பது முழு சர்வதேசத்திலும் நிரூபணமாகும்.

**நிகாஹ் விளம்பரங்களை தகுந்த ஆவணங்களைப் பெற்று சேவை நோக்கிலேயே பிரசுரம் செய்கின்றோம். இரு தரப்பினரும் விளம்பரங்கள் தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். (ஆசிரியர்)**

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் **ALHASANATH** என்ற பெயருக்கு **Money Order** எடுத்து தபாலகம் **DEMATAGODA** எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் **Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana** அல்லது **Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana** எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.

# கண்டி மடவளையில் பெண்களுக்கான




# ENGLISH & LIFE SKILLS

**Next Intake SEP**

பாதுகாப்பான வதிவிட வசதி

- English Language (Special)
- Computer Application
- Pre- Marriage Counseling
- Cookery
  - Bakery Items
  - Cake Varieties
  - Rice Varieties
  - Sweets
- Self Employment Courses
  - Ribbon Embroidery
  - Brazilian Embroidery
  - Crochet
  - Doll Decorating
  - Patch Work & More
- Sinhala Language
- Tajweed , Ahlak , Tarbia உட்பட மேலும் சில இஸ்லாமிய பாடநெறிகள்

சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவிக்கு UK சான்றிதழ் வழங்கப்படும்

- Life Skills
- Motivation
- Psychology
- Bridal Dressing
- Herbal Beauty Culture
- Social Media & Safety
- Human Development
- Human Nutrition & Hazard
- Dress Making (Cutting Method)
  - Shalwar
  - Blouse
  - Skirt
  - Habaya & More

**5 CERTIFICATES** ISO + Govt அங்கீகார சான்றிதழ் உட்பட

**4 Months** Weekly 6 days 8.30 - 4.30

இப் பிரிவுக்கு குறிப்பிட்ட அளவு மாணவிகள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்

## *Diploma in* ENGLISH

**2 CERTIFICATES** ISO சான்றிதழ் உட்பட

அடிப்படையில் இருந்து கற்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட பாடநெறி

- **Grammar**
- **Listening**
- **Writing**
- **Reading**

**3 Months** Weekly 6 days 8.30 - 4.30

தினமும் 3 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி

100% தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் பாடநெறி

## *Diploma in* Islamic Banking & Finance

தற்போது தொழில் சந்தையில் அதிக வேலை வாய்ப்புக்கள் உள்ள பாடநெறி

**6** Months Part Time | **2** Months Full Time

ISO சான்றிதழ் வழங்கப்படும்

**UK Qualification**

Conducted By
- World Prize Winning Lecturer
- University Lecturer

Job Arrangement

Target Group:
- After A/L's
- After O/L's
- Job Seekers

**EMERRAD** Ladies Academy
36/3B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY
M: 0777 71 71 29 T: 081 20 50 600

Hotline : **0777 877 966**

edexcel | University of Wolverhampton | London South Bank University | PEARSON

UGC Recognized
TVEC Approved

# UGC அங்கீகாரம் கொண்ட UK Degree

பட்டப்படிப்புகளை
இலங்கையிலேயே
பூர்த்தி செய்து
கொள்ளும் வாய்ப்பு...




| | |
|---|---|
| **ENG** | **ENGINEERING**<br>Civil & Construction<br>Telecommunication<br>Electrical \| Electronics |
| **BM** | **MANAGEMENT**<br>Business Management \| Marketing<br>Human Resource Management |
| **IT** | **COMPUTING & SYSTEM DEVELOPMENT** |
| **BMS** | **BIOMEDICAL SCIENCE**<br>**BIOTECHNOLOGY** |
| **LLB** | **LAW** |
| **QS** | **QUANTITY SURVEYING** |

*BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)*

**INTAKE NOW ON**

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Dilshan 076 669 3683
Makkiya 077 266 0129

ISO 9001:2008 CERTIFIED

**City Campus**
256, Galle Road, Colombo 6.
T : 011 236 4459

**Mount Campus**
54, Galle Road, Mt. Lavinia.
T : 011 272 8082

**Kandy Campus**
344, Peradeniya Road, Kandy.
T : 081 222 4731

**Batti Campus**
294, 1/4, Trinco Road, Batticaloa.
T : 065 222 8451

**Wayamba Campus**
103, Dambulla Road, Kurunegala.
T : 037 223 3339

**Kalmunai Campus**
392/1, Main Street, Kalmunai.
T : 067 222 6899

**Jaffna Campus**
16, Point Pedro Road, Jaffna.
T : 021 221 9910

**HOTLINE : 011 236 4458**

Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

Registered as a News Paper in GPO/QD/20/NEWS/2016 Printed by AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.

After O/L | A/L



ISO 9001: 2008 Certified Company

TURNKEY IT CAMPUS
Join the No.1

# சர்வதேச அங்கீகாரமுடைய Network Engineer ஆவதற்கு நீங்களும் விரும்புகிறீர்களா?

IT துறையில் அதிஉயர் சம்பளத்தை பெறக்கூடிய NETWORK துறையில் இன்றே இணையுங்கள்.

## Bsc (Hons) Computer Systems & Networking
University of Greenwich

1½ Years

ACHNP
Advanced Certified Hardware & Network Professional
Six Recognized Certifications

- CISCO CCNA — Cisco Certified Network Associate
- Microsoft Certified Technology Specialist — Microsoft Certified Solution Associate
- CLNA — Linux Network Admin with Security
- CWNA — Windows Network Administration
- CHEN — Hardware Engineering with Networking

**MCSE** Server 2012 — Exam 70 - 413, 70 - 414

**MCSA** Server 2012 — Exam 70 - 410, 70 - 411, 70 - 412

**MCSA** Windows 8 — Exam 70 - 687, 70 - 688

CISCO

**CCIE** — Routing & Swithing written Exam 350 - 001

**CCNP** — IP Routing, IP Switch, IP Tshoot

**CCNA** — R&S, Voice, Security

CompTIA A+ N+

CEH Certified Ethical Hacker

Microsoft Partner
PEARSON VUE-Authorised Test Centre

## Multimedia Engineering

- Graphic Designing
- Web Designing
- Web Development

MySQL php APACHE

## TURNKEY ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- இலங்கையில் Hardware and Networking துறையில் அதிகமான வல்லுனர்களை உருவாக்கிய முதன்மை நிறுவனம்.
- Authorized Test Center for CISCO & Microsoft Examinations.
- வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழில் வாய்ப்பு வழங்குனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
- Cisco, Microsoft and Networking பாடநெறிகளுக்கு உயர்தரமிக்க பரிசோதனைக் கூடம்.
- மறைமுகக் கட்டணங்கள் இல்லை.

TURNKEY IT TRAINING
Dedicated for Professional Coaching
2 581581

**COLOMBO**
562/15B, Lower Bagathale Road,
(Road adjoining Premadasa Jewellers-Sea side)
Colombo 03.
Tel: 2 581581, 2 595336, 077 2286988

**KANDY**
504/1, Peradeniya Road, Kandy.
Tel: 081 2205678, 077 5077456
An Institution registered with Tertiary and Vocational Education Commission of Sri Lanka. Reg No. PO1/200

**HOTLINE**
0772 286 988
Now register for any course online @ www.turnkey.lk

info@turnkey.lk www.facebook.com/turnkeycolombo